



எஸ்.எச். ஆதம்பாவா

கலமுஷ்-ஷர்க் வெளியீடு-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

# எனது நினைவுத் திரையில் அஷ்ரப்

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

எஸ்.எச்.ஆதம்பாவா

320.2092

கலமுஷ் ஷர்க் வெளியீடு - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 20671

| | | |
|---|---|---|
| *Title* | : | *YENATHU NINAIVUTH THIRAIEL ASHRAFF* |
| *Author* | : | *Moulavi S.H. Athambawa*<br>*B.A. Hons (Sri Lanka) B.A. lit. (K.S.A) M.A. (Sri Lanka)* |
| © | : | *Author* |
| *First published* | : | *01.02.2006* |
| *Publishers* | : | *Kalamush - Sharq Publication Bureau*<br>*72, AL. Hilal Road,*<br>*Sainthamaruthu - 11*<br>*067 - 2221965* |
| *Cover Disign* | : | *A.M. Barakathullah - Kalmunai* |
| *Type Setting* | : | *Sawmiya Ilyas - Panadura* |
| *Printed By* | : | *Aj Prints (Pvt) Ltd.*<br>*44, Station Road,*<br>*Dehiwala.*<br>*Tel / Fax : 011 - 2723205* |
| *Price* | : | *150/=* |

*ISBN* *955-1407-00-3*
*Bar Code* *9 78 9551 407001*


இலங்கைத் தேசிய நூலகம்- வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு

ஆதம்பாவா. எஸ்.எச்
எனது நினைவுத் திரையில் அஷ்ரப்
எஸ்.எச். ஆதம்பாவா - சாய்ந்தமருது
ஆசிரியர், 2006
ப. 140 ; ச.மீ. 21
ISBN 955-1407-00-3
விலை : 150 ரூபா
i. 324.2092
ii. தலைப்பு
1. அஷ்ரப். எம்.எச்.எம்.
2. அரசியல்வாதிகள்

வரவுப் பதிவு எண் 20671
வகுப்பு எண் 32'.09.2092
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என் இதயத்துள் நிறைந்த நண்பன்
எம்.எச்.எம். அஷ்ரபுக்கு இந்நூல் சமர்ப்பணம்





PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் கௌரவ ரவூப் ஹக்கீம் எம்.பி. வழங்கியுள்ள வீதந்துரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா அவர்கள், எமது தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களிடம் கொண்டிருந்த உண்மையான அன்பினதும், நெருங்கிய அந்நியோன்னியத்தினதும் ஆழ, அகலம் என்ன என்பதை, அன்னாரின் மறைவுக்குப் பிறகு இந் நூலின் வாயிலாகப் பகிர்ந்துக் கொள்கின்றபோது அதை எவ்வாறான அந்தரங்க சுத்தத்தோடு எமக்குத் தர விழைகின்றார். என்பதை இந் நூலை வாசித்தபோது ஊகிக்க முடிந்தது.

எமது தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அமைச்சராகப் பதவி வகித்தபோது, அவரைப் பற்றிச் சில நூல்கள் வெளிவந்திருந்த நிலையில், அமைச்சரின் துதிபாடுகின்ற நூல்களாக அவை அமையக் கூடுமோ என்ற பிரமையும், அரசியல் அதிகாரத்தில் வீற்றிருந்த ஒருவரின் ஆத்ம திருப்திக்காக எழுதப்பட்ட மாமூலான ஆக்கங்கள் அவை என்ற உதாசீனப் பார்வையின் காரணமாக அந் நூல்களைப் பற்றி வாசகர்கள் அவ்வளவாக அலட்டிக்கொள்ளாமல் இருந்திருக்கக் கூடுமோ என்ற எண்ணமும் சில சந்தர்ப்பங்களில் எம்மில் தோன்றி மறைந்தது இயல்பு.

ஆனால், தமது ஆத்ம நண்பரான தலைவர் அஷ்ரப் அவர்களுடைய அந்நியோன்னியத்தைப் பற்றி மௌலவி ஆதம் பாவா, அன்னாரின் மறைவுக்குப் பின்னர் நூலாக்கம் செய்திருக்கும் இவ்வேளையில், மேற்கூறிய பிரமைக்கும், உதாசீனப் பார்வைக்கும் அப்பால் நின்று மனமகிழ்ந்து இதனை எழுத விழைந்தேன்.

தலைவரின் மறைவின் ஐந்தாவது நினைவு நாளான 2005 செப்படம்பர் 16ஆம் திகதியன்று, அவரது பாராளுமன்ற உரைகள் அடங்கிய முதல் இரு தொகுதிகளையும் நான் தொகுத்து வெளியிட்ட நிகழ்வில் 'தலைவர் அஷ்ரப் அவர்களின் சகவாசம் எனக்கு ஓர் அலாதியான சுகானுபவமாக இருந்தது' என்று கூறி எனது உரையை ஆரம்பித்ததாக நினைவிருக்கின்றது.



PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஞாபகத்தின்படி நான் சட்டக்கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் 1982 ஆம் ஆண்டிளவில் முதன் முதலாக மறைந்த தலைவரை சந்திக்க நேர்ந்தது. 1980, 90களில் நாங்கள் கண்ட அஷ்ரபிடம், 'அஷ்ரப் என்ற தலைவனின் ஆளுமை' துளிர்விட்ட சம்பவங்களின் பின்னணியில் அவற்றின் ஒரு தொகுப்பாகவே மௌலவி ஆதம்பாவாவின் இந்தப் படைப்பை நாம் பார்க்கிறோம். அதே வேளை, தலைவர் அஷ்ரப் அவர்களின் ஆன்மீக, அரசியல், இலக்கிய ஈடுபாடுகளை பல்வேறு கோணங்களில் தரிசிக்கும் ஒரு சம்பவக் கோவையாகவும், இந் நூலில் பல அம்சங்களை நாம் பார்க்கிறோம். இந்த நினைவுத் தொகுப்பில் காணப்படும் அவரது தாய்ப் பாசம், திருமண வைபவம், குழந்தைப் பேற்றின் குதூகலம், பிறர் நலம் பேணுவதில் காட்டிய அதீத அக்கறை என்பன போன்ற நிகழ்வுகள் கூட, அந்த அபார மனிதரின் அவருக்கே உரித்தான அலாதியான ஆளுமையின் பல்வேறு குணாம்சங்களைப் பிரதிபலித்து, எமக்கு அவற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

வரலாறு படைத்த கல்முனைத் தொகுதி அரசியலில் தலைவர் அஷ்ரப் அவர்களின் ஆதிக்கம் எத்தகைய பிரளயத்தை ஏற்படுத்தப் போகின்றது என்றோ, அந்தத் தென்கிழக்குச் சூழலில் புடம் போடப்பட்டு தேசிய அரசியலில் முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் இயக்கத்தை வழிநடாத்தி தாம் ஏற்படுத்தப்போகும் தாக்கத்தைப் பற்றியோ அறவே அறிந்திராத நிலையில், சாதாரண மாணவனாகக் கல்வி பயின்ற காலத்திலேயே மேற்கொண்ட துணிச்சலான காரியங்களும், முன் எடுத்த முயற்சிகளும், தாம் சொன்ன கருத்துக்களுக்கு அமைவாக அரசியல் நிகழ்வுகளை அவர் எதிர்கொண்ட பாணியும், அவ்வப்போது அரசியல்வாதிகளை அவர்களின் காழ்ப்புணர்ச்சியின் விளைவாக விரக்தியுறச் செய்திருந்தன. அவரிடம் காணப்பட்ட மேற்கூறிய குணவியல்புகளும், அடங்கிப்போக மறுத்த உறுதியான கொள்கைப்பிடிப்பும் மொத்தத்தில் 'நாங்கள் கொண்டாடும் அஷ்ர'பை எங்களுக்கு தந்திருந்தன என்ற யதார்த்தம் மனதில் பூரிப்பை உண்டுபண்ணுகின்றது.

நூலாசிரியர் குறிப்பிடும் பல விஷயங்களை, மௌலவி ஆதம் பாவாவோடு அளவளாவக் கிடைத்த பல சந்தர்ப்பங்களில் என்னோடு மனம்விட்டுக் கதைத்திருந்தாலும் கூட, அந்த விஷயங்கள் எழுத்துருவில் வெளிக்கொணரப்படும் போது, இச் சமூகத்தின் தனித்துவ அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரியக்கம் கருக்கட்டக் காரணமான பின்புலம் இன்னும் கூர்மையாகத் தெளிவு படுத்தப்படுகின்றது. அந்த வகையில் இந்தப் படைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளுக்கும், அபிமானிகளுக்கும் ஓர் உந்துசக்தியாகத் திகழ்வது மட்டுமன்றி, ஆய்வு மனப்பான்மை கொண்ட சமூக ஈடுபாடுள்ள அனைவரும் உசாத்துணை நூலாக பயன்படுத்தக் கூடிய அளவிற்கு, கட்சியின் அரசியல் கோட்பாடுகளைக் கூட அவை உருவாக்கம் பெற்ற காலப்பின்னணியோடு தொடர்பு படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது.

இந் நூலில் காணப்படும் மறைந்த தலைவர் வகுத்த தேர்தல் வியூகங்கள் குறித்த விளக்கங்களும், விமர்சனங்களும் எதிர்காலத்தில் திட்டவட்டமான முடிவுகளை மேற்கொள்ள முன்னர் உரசிப்பார்க்க வேண்டிய, கையாள வேண்டிய அணுகு முறைகளுக்கு ஆதாரமாக அமையும் வலுவுடையன.

ஒட்டு மொத்தத்தில் 'அஷ்ரபின் நினைவுகள்' என்ற மகுடத்தில் இன்னும் பல நூறு பேர் தமது மனப்பதிவுகளை எழுத்துருவாக்கித் தரும் வாய்ப்புகள் ஏற்படும் போதிலும் கூட, இந்நூலில் தொனிக்கும் - தொக்கி நிற்கும் அந்நியோன்யத்தை அத்தகையோரால் சிலாகித்து எழுதப்படக்கூடிய சம்பவங்களும், தலைவர் அஷ்ரப் அவர்களின் ஆளுமை குறித்து வியந்துரைக்கக் கூடிய அர்த்த புஷ்டியான விஷயங்களும் மிகைத்து, மேலோங்கிவிட முடியுமா? என்று எண்ணும் அளவிற்கு மௌலவி ஆதம் பாவா, வெறும் தனிமனித சிலாகிப்பு இல்லாமல், சிந்தனையைத் தட்டியெழுப்பும் விதத்தில் தந்திருக்கிறார் என்பதற்காக மறைந்த தலைவரின் அரசியல் வாரிசுகள் என்ற வகையில் நாம் அவருக்கு நன்றி கூறப் பெரிதும் கடமைப்பபட்டுள்ளோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது இந்த நன்முயற்சியை ஏற்றுக்கொள்வானாக!

ரவுப் ஹக்கீம் எம்.பி.
தேசியத் தலைவர்,
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஹூம் அஷ்ரபின் மனைவியும் அமைச்சருமான சகோதரி பேரியல் அஷ்ரப் எம்.பி அவர்களின் வாழ்த்துரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
வரம்பு ஸலவாத்துடன்

மறைந்த தலைவர் மாமனிதர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் நினைவுகள் பற்றிய இந்த நூலுக்கு எனது வாழ்த்துச் செய்தியை எழுதுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தலைவருடன் மிகவும் நெருக்கமாகவும், தலைவரின் அன்பையும் நம்பிக்கையையும் பெற்றவராகவும் இருந்த மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா அவர்கள் தன்னுடைய நினைவுகளை இவ்விதமாக தொகுத்து அளிக்க எடுத்திருக்கும் முயற்சிகளை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

ஒரு மாமனிதர் மீது தான் வைத்திருந்த நினைவுகளை இப்படியாக வெளிப்படுத்துவதினால் சமூகத்துக்கு அது உதவியாக இருக்குமென்ற எண்ணத்துடன் அவர் எழுதிய இத் தொகுப்பிற்கும் எடுத்துள்ள முயற்சிக்கும் அல்லாஹ்வின் அருள் பெற பிரார்த்திக்கின்றேன்.

தலைவர் மறைந்து விட்டாலும் அவரது நினைவுகள் தமது நெஞ்சங்களை விட்டு மறைந்து விடாது. அந்த நினைவுகளைச் சேகரித்த அந்த மாபெரும் இழப்பின் துயரை மறந்துவிட நினைக்கும் எத்தனையோ நெஞ்சங்களையும் நேசங்களையும் நான் கடந்த ஐந்தாண்டு காலமாக கண்டு வந்திருக்கிறேன்.

மறைந்த தலைவரின் பெயரில் மன்றங்களும் கழகங்களும், கட்சிகளும் சேவா மன்றங்களும், தொண்டர் நிறுவனங்களும் நிறுவப்பட்டு மக்களுக்கு மத்தியில் மறைந்த தலைவரின் பணிகளைத் தொடர்வதை நான் அவதானித்து வருகிறேன்.

மறுபுறத்தில், தலைவரை நினைத்து எழுதப்படுகின்ற கவிதைகளும், கட்டுரைகளும், ஞாபகார்த்த செய்திகளும், நன்றிக்கடன் அறிவிப்புகளும் அந்த மாமனிதரை நம் மனங்களில் இன்னும் இனிய நினைவுகளோடு உலவச் செய்கின்றன.

அனைத்துக்கும் மேலாக அன்னாரது பெயரைச் சுமந்திருக்கும் கிராமங்களும், பாடசாலைகளும், மண்டபங்களும், பல்வேறு கட்டிடங்களும், பாதைகளும், கிராம எழுச்சி வீடமைப்புத் திட்டங்களும், பல்கலைக்கழகமும், துறைமுக ஏற்பாடுகளும், சிந்தனைகளும், சதுக்கங்களும், வைத்தியசாலைகளும் ஒவ்வொரு நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராயிரம் பேர் நெஞ்சங்களில் அவரை உயிரோடு உலவ வைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தப் பெரு மனிதரால் வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு மாதாந்த வேதனம் பெற்று தமது குடும்பங்களுக்கு உணவளித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களின் அன்றாட வாழ்வில் அந்தப் பெரும் தலைவர் உயிரோடு தான் வாழ்கிறார்.

தனியொரு நினைவின் தாகத்தையும் தர்க்கத்தையும் தாங்கிக்கொள்ள முடியாது தவிக்கும் இந்த நெஞ்சங்களுக்கு மத்தியில் மறைந்த தலைவருடன் ஒரு அற்புதமான வாழ்க்கையையே பகிர்ந்து கொண்ட எனது நெஞ்சில் எத்தனை ஆயிரம் கோடி நினைவுகள் அடைந்து கிடக்கின்றன. அவற்றின் அழுத்தங்கள் என் மீது கொணரும் சுமையைத் தாங்க முடியாது.

நான் பல்வேறு உணர்வுகளின் படையெடுப்புகளால் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கின்றேன் என்பதை யார் தான் அறிவார்?

இவ்வாறான ஒரு நினைவுத் தொகுப்பில் எழுதி அடக்கக்கூடிய அளவிலா அவரைப்பற்றிய எனது எண்ணங்கள் என் நெஞ்சில் சேகரமாகியுள்ளன.

அந்த மாமனிதரைப் பற்றி நான் எழுதத் தொடங்கினால் அவற்றை எழுதி முடிப்பதற்கு எனது ஆயுள் போதுமானதாக இருக்குமா?

அதனால் அவரது அரசியல் பணிகளில் அவரைப் பின் தொடர்ந்து அவரது கனவுகளை நனவாக்கும் இலட்சிய யாத்திரைக்குச் சவாரி கட்டியுள்ள எனக்கு அந்தத் தலைவரைப் பற்றி இவ்வாறு நினைந்து அழுது எழுதப்படும் எழுத்துக ளெல்லாம் ஒரு இருண்ட வானில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களாய் மகிழ்ச்சி அளிக்கின்றன. அதற்காய் எனது நன்றிகள்.

தனக்குப் பின்னால் ஒரு மனிதன் விட்டுச் செல்லும் சமூகத்துக்கான நிரந்தரமான சேவைகளே அவனது உண்மையான வாரிசுகளாகும். என்பதை மறைந்த தலைவரின் வாழ்விலும் மறைவிலும் நான் சரிகாண்கின்றேன்.

தலைவரின் நினைவுகளின் நிழலில் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா அவர்களின் இந்தத் தொகுப்பு சுகிக்க வாழ்த்துகின்றேன்.

தலைவர் பணியில்
பேரியல் இஸ்மாயில் அஷ்ரப், (பா.உ)
தலைவி - தேசிய ஐக்கிய முன்னணி
வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர்

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஹூம் அஷ்ரஃபின் அந்தரங்கச் செயலாளர் சகோதரர் எம்.ரீ. ஹஸன் அலி எம்.பி அவர்களின் ஆசிச் செய்தி

'நாம் ஒன்றுமே செய்யாதிருக்கும்போது ஓய்வெடுப்பது கடினம்' என்று ஒரு ரோம் நாட்டுப் பழமொழியுண்டு.

காலத்தை விரயமாக்குபவர்களுக்கு சொல்லடியாக இப்பழமொழி அமைந்துள்ளது.

எந்நேரமும் உறுசுறுப்பாக எதையாவது சாதிக்கத் துடிக்கும் வேட்கையுடன் இயங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் இது பொருந்தும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

மறைந்த எனது மானசீகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.ப் அவர்கள் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா அவர்களைப் பற்றி என்னிடம் சொன்ன கருத்துக்களை மையமாக வைத்தே இந்த அபிப்பிராயத்தை நான் எனக்குள் பொழிந்து கொண்டேன்.

மௌலவி ஆதம்பாவா அவர்கள் சிறுபராயம் தொட்டு கடும் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு எதிர்ப்பட்ட தடைகளையெல்லாம் தாண்டியவர் என்றும், அவரிடம் இருந்த அதீதமான தன்னம்பிக்கைதான் அதற்குக் காரணம் என்றும் தலைவர் என்னிடம் கூறியுள்ளார்.

தொழில் வாய்ப்புக்கள் பெறும் நோக்குடன் பலர் தலைவரைச் சந்திக்க அவ்வப்போது வருவதுண்டு. அப்படி வருபவர்கள் அரை குறை கல்வித் தகைமைகள் உள்ளவர்களாக இருந்ததும் உண்டு. அவ்வாறான சிலரிடம் 'மௌலவி ஆதம்பாவாவைப் பார்த்துத் திருந்திக் கொள்ளுங்கள் படிப்பதற்கு எதுவுமே தடையாக இருக்க முடியாது. விடாமுயற்சியையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டால் எதனையும் வெற்றி கொள்ளலாம்' என்று முன்னுதாரணமாக தலைவர் கூறக் கேட்டிருக்கின்றேன்.

ஆதம்பாவா மௌலவி தாண்டிய எதிர் நீச்சல்கள் அவரை வழிமறித்த தடைகள், அவற்றையெல்லாம் அவர் தாண்டி வெற்றிகொண்ட விதங்கள் பற்றியெல்லாம் தலைவர் அஷ்ர.ப் என்னிடம் பல முறை கூறி வியந்துள்ளார். சிறு பராயத்திலிருந்தே மௌலவியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த தலைவர் தனது ஆரம்பகாலத்தில் தான் தாண்டிய ஏணிப்படிகள் சிலவற்றிலும் கூட மௌலவி ஆதம்பாவாவின் சாயல்கள் படித்துள்ளதாகவும் கூறினார்.

இவ்வாறு தலைவரால் மனமாற நேசிக்கப்பட்ட ஒருவர் அவரைப் பற்றிய எண்ணக் கருக்களுக்கு வடிவம் கொடுப்பதென்பது மிகவும் பொருத்தமானதாகும்.

1970ஆம் ஆண்டு மார்ச் மாதம் அல்-இஸ்லாம் பத்திரிகையில் தலைவர் அஷ்ர.ப் அவர்கள் "A scheme to improve the quality of our Moulavis" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையினை எழுதியிருந்தார். இக்கட்டுரையின் பிரதியில் வழக்கம் போல "Please Speak" என்று எனக்கு அவர் இட்ட கட்டளையை நான் இன்னும் பாதுகாத்து வருகின்றேன். அந்தக் கட்டளையுடன் தலைவரை நான் சந்தித்த போது தனது கட்டுரை பற்றி மேலும் சில ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஆதம்பாவா மௌலவியை என்னுடன் தொடர்பு கொள்ளச் சொல்லுங்கள் என்று அவர் என்னிடம் கூறினார்.

அந்தத் தொடர்பு ஏற்பட்டதன் பின்னர், மௌலவிமார்கள் முஸ்லிம் சமூகத்தில் மார்க்கம், அரசியல், பொருளாதாரம் போன்ற விழுமியங்களின் வழிகாட்டிகளாக உருப் பெறுவதற்கு ஏதுவான கற்கை நெறிகள் மதுரஸாக்களில் புகுத்தப்பட வேண்டும் என்ற நோக்குடன் எழுதப்பட்ட தனது கட்டுரை பற்றி மௌலவி ஆதம்பாவாவுடன் கருத்துப் பரிமாறிக் கொண்டார். 'இலங்கையில் அரபு பல்கலைக் கழகம் ' என்ற தலைப்பில் மௌலவி ஆதம்பாவாவினால் 1992 ல் எழுதப்பட்ட ஒரு கட்டுரையை வாசித்த பின்னணியிலேயே இந்த சம்பவம் நடைபெற்றது. மௌலவி ஆதம்பாவாவுடன் தலைவர் அஷ்ர.ப் இவ்வாறான விடயங்களில் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார் என்பதற்கு இச் சம்பவம் ஒரு சான்றாகும்.

மார்க்க கல்வியின் மறுசீரமைப்பில் மிகுந்த அக்கறையும், ஒருமைப்பாடும் கொண்டவர்களாக தலைவர் அஷ்ர.ப்பும், மௌலவி ஆதம்பாவாவும் செயல்பட்டு வந்தனர் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

மௌலவி ஆதம்பாவா அவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் கட்டங்களிலெல்லாம் ஒரு உரைகல்லாக இருந்து உதவியுள்ளார்கள். மறைந்த தலைவரின் காலத்திலும் அவர் இப்பாத்திரத்தை ஏந்தியுள்ளார் என்பதில் எனக்கு சந்தேகமே இல்லை. இன்றைய தலைவரின் காலத்திலும் அவர் இப்பணியினை தொடர்ந்து வருவது கண் கூடு.

தலைவர் அஷ்ர.ப் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்துவதில் மௌலவி ஆதம்பாவா அவர்கள் தனது இதயப் பிரவாகத்தைத் திறந்து விட்டிருப்பது தெளிவாக புலப்படுகின்றது. அந்த பிரவாகத்தில் மிதந்து நீச்சலடிக்கும் உண்மையான போராளிகளுக்கு அதன் உயரிய தன்மைகள் புரியும்.

தலைவர் அஷ்ர.ப் அவர்கள் வாழ்ந்த காலங்களில் எல்லாம் அவரை விமர்சித்தவர்கள், மாற்றான் கைக்கூலியாக இருந்து அவருக்குத் தொல்லை கொடுத்தவர்கள் எல்லோரும் அவர் மறைந்ததன் பின்பு உதட்டளவில் போலியாக போற்றிப் புகழும் இக்காலத்தில் மௌலவி ஆதம்பாவாவைப் போன்றவர்கள் உள்ளங்களைத் திறந்து உணர்வு பூர்வமாக அவரைப் பற்றி எழுதுவது மன ஆறுதலைத் தருகின்றது.

எம்.ரி. ஹஸன் அலி
பாராளுமன்ற உறுப்பினர்,
செயலாளர் நாயகம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஹூம் அஷ்ரபின் பிரிய தங்கை சகோதரி பெறோஸா அவர்களின் வாழ்த்துரை

பூச்சாடியிலே தனி மலர் அழகு தருவதில்லை. பல்வகைவேறுபட்ட மலர்களுடனும் இலைகளுடனும் சேரும்போதுதான் அத்தனிமலர் அழகு பெறுகின்றது அதுபோல "அஷ்ர.ப்" என்ற தனிமலர், சமுதாயம் என்ற சாடியிலே தனியாக ஒரு போதும் வாழ்ந்ததில்லை. வாழவிரும்பியதுமில்லை. நண்பர்களுடன் சேர்ந்து வாழ்ந்த ஒரு மாமனிதன். ஏழை பணக்காரனென்ற பேதமின்றி, நல்லவர் கெட்டவரென்ற வித்தியாசம் விளங்காமல் எல்லாரையும் அணைத்து ஆதரித்து வாழ்ந்தவர். அந்தப் புதுமையான உள்ளம் படைத்த உயர்ந்த மனிதன், என் சகோதரன் எம்.எச்.எம் அஷ்ர.ப் இன்று எம்முடன் உடலளவில் வாழவில்லைதான். ஆனால், ஒவ்வொருத்தர் இதயத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன்றைய மக்களுடைய உயிர்களுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றார்.

அன்று அவருடன் வாழ்ந்தவர்கள், இன்று அவரை வாழவைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதிலும் அவர் அரசியலில் நுழையமுன்பு அவருடனிருந்தவர்கள், இன்றும், அவருக்காக உண்மைக் கண்ணீர் வடிக்கிறார்கள். அந்த வரிசையிலே ஒரு உயர்ந்த நண்பனாக.... உண்மையான சகோதரனாக, நல்ல இதயத்துடன் தன் நண்பனின் நினைவுகளை, மௌலவி ஆதம்பாவா அவர்கள் மீட்டியுள்ளார்கள் ஆம்! அந்த மீட்டலின் விளைவுதான் என்ற இந்த நூல்.

வாழும் போதிலேயே, தன் சகோதரர்களையே மறக்கும் இந்தக் காலக் கட்டத்தில், மறைந்த பின்பும் மறக்காத சில நண்பர்கள் என் சகோதரருக்கு அவர்களில் ஒருவர்தான் மௌலவி ஆதம்பாவா அவர்கள். என் சகோதரருடன் இனிமையாகப் பழகியவர். கடும் சொல்லில் கதையாதவர். என் சகோதரருடன், அவரின் அரசியலுக்கு முன்பு பழகியவர்கள், அவரின் மரணம் வரை அவரை விட்டு பிரியவேயில்லை. இடையில் சேர்ந்தவர்களும், அரசியல் இலாபம் கருதியவர்களுமே அவரை விட்டுப் பிரிந்தவர்கள் அவரிருக்கும் போது அவரைத் தூற்றித் திரிந்தவர்கள், அவர் மரணத்தில் சந்தோஷப்பட்டவர்கள். அந்தப் பிரியாத நண்பர்களில் ஒருவர்தான் 'மௌலவி ஆதம்பாவா' அவர்கள்.

மௌலவி ஆதம்பாவா அவர்கள், இன்று எடுத்துக்கொண்ட, இம் முயற்சி எல்லோரும் பாராட்ட வேண்டுமென்பதற்காகவல்ல, 'அப்படியானால் அவர் இதனை அஷ்ர.ப் வாழும் போதே செய்திருக்கலாம். ஆம் அஷ்ர.ப்பின் உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் மட்டும்தான் அவரிருக்கும போது இலாபம் பெறாதவர்கள். பட்டம் பதவி பெறாதவர்கள்... அப்போது மட்டுமல்ல, இப்போதும்தான். அப்படிச் செய்திருந்தால் அது, அஷ்ரபைத் திருப்திப்படுத்தவென்று பலர் நினைக்கலாம். அதனால்தானோ என்னவோ அவரின் மறைவுக்குப் பிறகு இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் நான் இன்னொன்றைக் கூறவிரும்புகிறேன். மௌலவி ஆதம்பாவா அவர்கள் எமக்கு (எனக்கும் என் சகோதரிக்கும்) சாஹிறாக் கல்லூரியில் ஆசானாகவும் இருந்தவர்கள். "மதிப்புக்குரிய ஆசான்" என்பதை விட அன்புக்குரிய சகோதரர் அஷ்ரபின் நண்பர், என்பதுதான் எங்கள் நினைவிலுள்ளது. எப்போதும், பொறுமையுடனும், புன்முறுவலுடனும் காணப்படும் மௌலவி ஆதம்பாவா அவர்கள், எங்கள் சகோதரருடன் பழகிய நாட்களை நாங்கள் சிறுமிகளாக இருந்த காலத்திலேயே, அறிந்தவர்கள். அந்தப் பால்ய நட்பின் காணிக்கையாக, எங்கள் சகோதரரின் மரணத்திற்குப் பின்பு, இந்த நூல் வெளியீட்டைச் செய்வது, ஒரு வியக்கத்தக்க, புதுமையான முயற்சியாகும். அதேநேரம் இந்த முயற்சியைக் காண என் சகோதரரில்லையே என்பதை நினைக்கும் போது, ஒரு தடவை நம் எல்லோருடைய இதயங்களும் குலுங்கி அழுகின்றன. தன் பால்ய நண்பர்கள், தன்னைக் கௌரவித்துக் கொண்டிருப்பதை நினைத்து என் சகோதரர் ஆத்மீக உலகிலும் ஆனந்தக் கண்ணீர் வடிப்பார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஏனெனில் அவர் தன் பால்ய நண்பர்களை ஒரு போதும் மறந்ததில்லை. அவர்கள் படித்தவர்களாயினும், பாமரர்களாயினும் சரி ஒரே நிலையில் வைத்து மதிப்பளித்தவர், அத்தகைய குணம்தான், இன்று அவருடைய நண்பர்கள், அவரைப்பற்றி இத்தகைய நூல்களை, உயிர்த்துடிப்புடனும், உணர்ச்சியுடனும், உரிமையுடனும் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். கௌரவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மௌலவி ஆதம்பாவா அவர்கள் என் சகோதரருடன், அவர் மௌத்தாகும் வரை பிரியாமல் வாழ்ந்த நண்பர், மற்றவர்களைப் போல அவரின் வளர்ச்சியில் பொறாமையடையாத நல்ல நண்பர். பொறாமைப்பட்டவர்கள் அஷ்ர.ப் அவர்களிடம், தம்மை நண்பர்களாகக் காட்டி வேஷம் போட்டவர்கள். அரசியல் இலாபம் பெற்றவர்கள். இன்று அவர்கள் வெகுவெகு..... தூரத்தில் சென்று விட்டார்கள். இந்நிலையில் அவர்கள் வாழும் போதே ஓடிவிட்டவர்கள். இந்நிலையில் தன் நண்பரை மறவாத ஒரு உறவாக மௌலவி ஆதம்பாவா அவர்கள் எங்களைத் தேடிவந்ததை நாம் எப்படி மறப்போம்? எங்கள் ஆசான் என்பதை விட, நாங்கள் உரிமையுடன் வாதவிவாதம் புரியும், எங்கள் சகோதரரின் நண்பனாக இருந்த காலம்தான் நீண்டது. 'ஆசான்' என்ற வரையறைக்குள் அடங்குவதைவிட, 'அண்ணனின் நண்பன்' என்ற வரையறைக்குள், உரிமையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை போடும் 'மாணவித் தங்கைகளாக, நாங்கள் வாழ்ந்த நாட்களை இன்னும் நினைவு கூருகின்றோம். அதற்காக நாங்கள் எம் சகோதரரின் சார்பாகவும், எம் சார்பாகவும் நன்றி மலர்களைத் தூவுகின்றோம்.

நூலாசிரியர் என்ற முறையில் விமர்சிப்பதானால், அவரின் அனுபவங்கள் அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சம்பவமும், உரிமையுடனும் உண்மையுடனும் இதழ்களாக விரிந்துள்ளன. இந்த இதழ்களின் கூட்டமான "எனது நினைவுத் திரையில் அஷ்ரப்" என்ற இந்த முழு மலர் எல்லோராலும் நிச்சயம் இரசிக்கப்படும். சுவாசிக்கப்படும் என்று வாழ்த்துவதுடன், எதிர்காலத்தில் மௌலவி ஆதம்பாவா அவர்களின் 'திறமையும்' ஆர்வமும் மேலும் மேலும் ஒளி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, என்னுரையை முற்று வைக்கிறேன். நன்றி. அல்ஹம்துலில்லாஹ்.

ஜனபா - பிரோஸா - ஹுஸைன் - A ஸலாம். (BA)
சட்டத்தரணி - சட்ட ஆலோசகர்,
(ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் தலைவர் அஷ்ர.ப் அவர்கள் சட்டக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டு நானும் கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவ கற்கை நெறிக்குத் தெரிவாகியதும் இருவரும் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் ஒரு அறையில்... எமது கல்முனைக் குடி நட்பு தொடர்ந்தது... இல 8, 25வது லேன் கொள்ளுப்பிட்டியில் நாம் இருவரும் அறைத் தோழர்களானோம். (சுமார் நான்கு வருடங்கள்) அப்போதெல்லாம் மௌலவி ஆதம்பாவா அவர்கள் அடிக்கடி எமது அறைக்கு வந்து போவார்கள். அந்தப் பசுமையான நினைவுகள் விரிந்து தொலைக் காட்சிப்பெட்டியில் வந்து விழும் காட்சிகளாக வந்து கொண்டிருப்பதை வைத்தே ஒரு பெரிய நூலொன்றை எழுதி விடலாம். அந்தக் காரியத்தை நண்பர் ஆதம்பாவா மௌலவி அவர்கள் மிக அழகாகச் செய்திருக்கிறார்கள்.

தலைவர் அஷ்ரப் அவர்களின் தலைமைத்துவப் பண்புகள் பற்றி அநேகர் எழுதியிருக்கின்றனர். ஆயினும் அவரது தலைமைத்துவப் பண்புகளின் வளர் நிலைக்கான வடிகாலாயமைந்த நினைவுகள் மௌலவி ஆதம்பாவா அவர்களின் நூல் மூலம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன் உண்மை நிகழ்வுகளின் தொகுப்பாகவும் அமைந்திருப்பது கவனத்திற் கொள்ளத் தக்கவொன்றாகும்.

வளமான கற்பனையும் எழுத்தாற்றலும் இருந்தாலும் கூட செயலாற்றுப் படுத்தும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. நானும் எண்ணுவதுண்டு நண்பர் அஷ்ரபின் நினைவுகளைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்று; வாழ்வின் சுமைகள் அதற்கு வழிவிட்டுக் கொடுக்காத நிலையில் மௌலவி ஆதம்பாவா போன்றவர்களின் முயற்சிகள் வளரும் பருவத்தினருக்கு வழங்கும் தகவல்களாக அமைந்திருப்பது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். இன்ஷா அல்லாஹ் இந்நூல் விரிவாக எழுதப்படும் சந்தர்ப்பத்தில் எனது பங்களிப்பும் உடன் இருக்கும் அதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளும் கிடைக்கும் என்று பிரார்த்திக்கின்றேன்.

இவ்வளவு பெரிய விருட்சம்
எப்படி உனக்குள்?

ஓ! ஆலம் விதையே! என்கிறது ஹைகூ கவிதை; விருட்சத்தின் முந்திய நிலையில் இருக்கும் விதைப் பருவத்தில் கூட ஒரு மாமனிதரின் தடயங்களுடன் (Genetic Print) வளர்ந்தவர் தான் மாமனிதர் அஷ்ர.ப் அவர்கள். அதை எம்மைப் போன்ற பால்ய காலத்து நண்பர்களால்தான் சரியாகக் கூறமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் பால்ய காலத்துப் பழக்கங்களைக் கூட எழுதுவதென்றால் கூட ஒரு சில பக்கங்கள் போதாது.

கல்முனைக் குடியிலும் சரி, கொழும்பிலும் சரி நாங்கள், சந்திக்கும் நாட்கள் வீணான நாட்களாக விளங்குவதேயில்லை. கவிதையும் கட்டுரையும் பொழுதுபோக்குக்காக அல்லாமல் பொருள் நிறைந்ததாக இருவரும் எழுதுவோம். பரஸ்பரம் படித்துக் கருத்துப் பரிமாறல்கள் செய்வோம். ஒரு இஸ்லாமிய சமூகத்தை அரசியல் ரீதியாக வழிநடத்தும் எண்ணக் கரு மௌலவி ஆதம்பாவா போன்றவர்களுடன் பழகியதனால் ஏற்பட்டதன் விளைவாகவும் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

கல்முனையிலும் கொழும்பிலும் மௌலவி அவர்களின் தொடர்பு அப்போது இருந்து கொண்டே இருந்தது. அஷ்ர.்.பும் நானும் கொழும்புக்கு வந்தால் எமது அறைக்கு மௌலவி வருவார்கள். கல்முனைக்கு நாமிருவரும் போனால் அங்கும் நாம் சந்திப்போம். அந்த நாட்களின் ஞாபகங்கள் வந்ததனால் வரைந்திருக்கும் இந்த வரிகள் வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு வரலாற்று ஆவணமாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

கிழக்கு மண்ணின் மகன் தலைவர் அஷ்ர.்.ப் அவர்கள் நின்றால் மாநாடு நடந்தால் ஊர்வலம், அவர் அம்மக்களின் சுவாசக் காற்று இருக்கும் போது ஒருவரைப் பற்றி குறை கூறித் திரிகிறோம். இழந்தபின் தவித்துத்தடுமாறுகிறோம். ஆனால் தலைவர் அஷ்ர.்.பின் இழப்பினால் கிழக்கு வாழ் முஸ்லிம் சமூகம் உயிரிழந்த ஜடமாக உலவித் திரிகின்றது. ஈடு செய்ய எதிர்காலத்தில் ஒருவர் வரவேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம்.

வேக்கந்த கிளினிக்,
இல, 9 சவுண்டிஸ் கோட்
கொழும்பு - 02
24.01.2006

அல்ஹாஜ். வைத்திய கலாநிதி,
தாஸிம் அகமது,
(டாக்டர் எ.எல்.கே. தாஸிம்)

உசாத்துணைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

நண்பர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் பற்றிய எனது நினைவுகளைத் தொகுத்து வெளியிட வாய்ப்பளித்த வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் அல்ஹம்துலில்லாஹ்.

இளமைக்கால எமது நினைவுகள் அழியாதவை, வார்த்தைகளால் வடித்தெழுத முடியாதவை. எனது உள்ளத்தில் நிறைந்துள்ள அந்த நினைவுகளை எத்தனையோ நூல்களாக எழுதலாம்.

எனினும் அவற்றில் மிக முக்கிய விடயங்களைத் தெரிந்து இந்நூலில் குறிப்பிட்டுள்ளேன். இதன் மூலம் அஷ்ரப் என்ற பயிர் எவ்வாறு விளைந்து வந்தது எனக் கண்டு கொள்ளலாம்.

சகோதரர் அஷ்ரப் அமைச்சராக இருந்த போது அவர்பற்றிய நினைவுகளை எழுத எண்ணினேன். எனது எண்ணத்தைச் சில நண்பர்களிடம் எடுத்துக் கூறியபோது ஏதோ அமைச்சரிடம் நெருங்குவதற்குரிய வழியாக இதனை நான் செய்வதாக பலர் கதைக்க இடமுண்டு என அவர்கள் கூறினர். எனவே எனது அந்த எண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லை.

ஆனால் அவர் உயிரோடிருந்தபோது இதை எழுதியிருந்தால் அவர் எவ்வளவு தூரம் மகிழ்ச்சியடைந்திருப்பார். என்னை எவ்வாறெல்லாம் ஊக்கப்படுத்தியிருப்பார் என்பதை நினைக்கும்போது அவர் வாழ்ந்த காலத்தில் எழுதாமல் விட்டு விட்டேனே என்ற கவலை இல்லாமலும் இல்லை.

இந்த நூலுக்குத் துணை நின்றது பெரும்பாலும் எனது ஞாபக சக்தியாகும். இதில் பிரதான பாத்திரங்கள் நானும் அவருமே! எனவே இந்நூல் பற்றிச் சரி, பிழை கூறும் தகுதி அவருக்கு மட்டுமே உண்டு. எனவே தான் அவர் வாழ்ந்த காலத்தில் இதனைச் செய்யத் துணிந்திருந்தால் இன்னமும் பெறுமதியாக இருந்திருக்கும்.

எழுதுவதா... இல்லையா... என்ற மனப்போராட்டத்தின் மத்தியிலே கிடைத்ததோ, அவரது மரணச் செய்தி. அவர் இவ்வளவு விரைவாக எம்மை விட்டுப் பிரிவார் என நாம் எவரும் எதிர்பார்க்கவில்லை. அல்லாஹ்வின் நாட்டம் எதுவோ அது நடந்துவிட்டது.

ஏதோ இப்போதாவது இதனை வெளியிடக்கிடைத்தது மகிழ்ச்சிக்குரியதே!

சகோதரர் அஷ்ரபின் இளமைக்கால நினைவுகளை நான் கூறியுள்ளது போல் அவரது அரசியலையும் அது சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளையும் ஆராய்ந்துள்ளேன். ஏனெனில் அஷ்ரப் முஸ்லிம் அரசியல் வரலாற்றை வரைந்தவர். நாற்பது வருடங்கள் அரசியலில் அநாதைகளாகவேயிருந்த சமூகத்திற்கு முகவரி பெற்றுக் கொடுத்தவர். எனவே அவரது வாழ்க்கையை குறிப்பிடும்போது அரசியலை மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இந் நூலை எழுதுவதும் பின்னர் விட்டு விடுவதுமாக இருந்த நான், இதில் வரும் "துணிச்சல் மிக்க அஷ்ரப்" என்ற பகுதியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோதரர் ரஊப் ஹக்கீம் அவர்களிடம் கொடுத்து வாசிக்கச் சொன்ன போது, தனது தலைவரைப் பற்றிய விடயங்களை அறிந்து பெருமகிழ்ச்சியடைந்த வராக இதனை விரைவாக வெளியிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். உண்மையில் அவரது உற்சாகமும் ஒத்துழைப்பும் இந்நூல் வெளியாக முக்கிய காரணியாகின.

மேலும் இந்நூலுக்குச் சிறந்ததொரு அணிந்துரையையும் அவர் வழங்கித் தன் தலைவன் மீது கொண்ட பற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் பற்றிய இந்நூலுக்கு ஐவரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் பெறவேண்டுமென்று முடிவெடுத்தேன். ஒன்று சகோதரர் ஹக்கீம்; மர்ஹூம் அஷ்ரப் உருவாக்கிய கட்சியின் தலைவர் அவர் என்ற வகையில்; மற்றது மர்ஹூம் அஷ்ரபின் மனைவியும் அமைச்சருமான சகோதரி பேரியல் அஷ்ரப். ஏனெனில் எனக்கும் சகோதரர் அஷ்ரபுக்குமிடையேயிருந்த தொடர்புகளை நன்கு அறிந்தவர் அவர்.

மூன்றாவது மர்ஹூம் அஷ்ரபின் அந்தரங்கச் செயலாளராகவும் இணை பிரியாத நண்பனாகவும் இருந்த சகோதரர் ஹஸன் அலி எம்.பி அவர்கள்.

அடுத்ததாக எனது மாணவியும் நண்பனின் பிரியமிகு தங்கையுமான சகோதரி சட்டத்தரணி பெறோஸா.

மற்றது சகோதரர் அஷ்ரப் சட்டக் கல்லூரியில் பயின்றபோது அவரது அறைத் தோழனாக இருந்த டாக்டர் ஏ.எல்.கே. தாசிம்.

இவர்கள் ஐவரினதும் வாழத்துக்களும் அங்கீகாரங்களும் இந்நூலுக்கு பெருமையையும் பெறுமதியையும் சேர்க்கின்றன. இவர்கள் ஐவரும் எனது மனமார்ந்த நன்றிக்குரியவர்கள்.

மேலும் இந்நூலை அழகே அச்சிட்ட தெஹிவளை ஏ.ஜே பிரிண்டர்ஸ் ஸ்தாபனத்தினருக்கும் குறிப்பாக அட்டைப்படமொன்றை மிகச் சிரமம் எடுத்துச் செய்து வழங்கிய சகோதரர் A.M. பறக்கத்துல்லாஹ், மிகப்பொறுமையாக எனது எழுத்துக்களை விளங்கி டைப் செய்து உதவிய சகோதரி ஸவ்மியா இல்யாஸ், பல ஆலோசனை வழங்கியுதவிய எழுத்தாளர் ஜுனைதா ஷரீப்,

இந்நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் வாசகர்கள் பிரமுகர்கள், அனைவரும் எனது இதயம் நிறைந்த நன்றிக்குரியவர்கள்.

ஏலவே வெளிவந்த எனது ஐந்து நூல்களுக்கும் வழங்கிய பேராதரவுபோல் இந்நூலுக்கும் வாசகர்கள் அளிப்பர் என்பது எனது நம்பிக்கை.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா

72, அல் ஹிலால் வீதி, சாய்ந்தமருது - 11
01-02-2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல் மிக்க அஷ்ரப்

## 1968ம் ஆண்டு

திரு. டட்லி சேனாநாயக தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் ஆட்சியிலிருந்த காலமது. தமிழரசுக் கட்சி, அரசாங்கத்தின் ஓர்அங்கமாகவிருந்தது. இக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் மு. திருச்செல்வம் Q.C. அவர்கள் ஸ்தல ஸ்தாபன மந்திரியாகப் பதவி வகித்தார்.

இவ்வேளை திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் டாக்டர் N.M. பெரேரா தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சியும், டாக்டர் S.A. விக்ரமசிங்க தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரு கூட்டணியாக இணைந்து எதிர்க்கட்சியாகச் செயற்பட்டது.

ஆட்சியின் பங்காளராவதற்கு தமிழ்ப் பிரதேசங்களில் மாவட்ட சபைகள் அமைக்கப்பட வேண்டுமென்று தமிழரசுக்கட்சி நிபந்தனை இட்டிருந்ததால் அவ்வாறு அமைக்கப்படுவதை எதிர்க்கட்சிகள் பலமாக எதிர்த்துக் கொண்டிருந்தன. இவ்வேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கினார். முஸ்லிம்களின் ஆதரவை சுதந்திரக் கட்சிக்குப் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாக இருந்தது. சுதந்திரக்கட்சியின் முஸ்லிம் முன்னணியாகச் செயற்பட்ட இதன் பிரச்சாரகர்களாக சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த மூதூர் எம்.பி. A.L.A. மஜீத், ஏறாவூர் MACA றஹ்மான், செனட்டர் ARM. ஹாமீம், H.M.P. முஹிதீன் M.S. ஆலிப், போன்றவர்கள் செயற்பட்டனர். A.H.M. பாறூக் இதன் செயலாளர்.

"இன்ஸான்" என்ற பெயரில் எஸ்.எச்.ஏ. வதூத் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளியாகிய வாரப்பத்திரிகை இ.சோ.மு.வின் பிரசாரப் பத்திரிகையாகச் செயற்பட்டது.

இலங்கையின் சோஷலிஸ, கம்யூனிஸவாதிகளான டாக்டர் N.M. பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பீட்டர் கெனமன், டாக்டர் விக்ரமசிங்க, டி.பி. இலங்கரத்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர்களுடன் அரசியலில் இணைந்துள்ள டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி என்ற பெயரில் கட்சியை உருவாக்கி சுதந்திரக் கட்சிக்கு ஆட்சேர்க்கும் தந்திரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக அவ்வேளை டட்லி அரசில் தொழில் அமைச்சராகவிருந்த எம்.எச்.முகம்மத் அவர்கள் மார்க்ஸிஸ எதிர்ப்பு முஸ்லிம் முன்னணி எனும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கினார். 'ஜிஹாத்' எனும் பெயரில் இதன் பிரசாரத்துக்கு ஒரு பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தது.

## கல்முனை இடைத்தேர்தல்

இவ்வாறு இரு தரப்பினரும் பேரினக்கட்சிகளுக்கு ஆள் பிடிக்கப் போட்டி போட்டுக் கொண்டிருந்த வேளை கல்முனைத் தேர்தல் தொகுதிக்கான பாராளுமன்ற இடைத்தேர்தல் வந்தது. ஏனெனில் 1965 பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஒன்று காரணமாக பதவி இழந்ததால் இத்தேர்தல் ஏற்பாடாகியது.

இத்தேர்தலில் அரசாங்கத்தின் சார்பில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் மசூர் மௌலானாவும் எதிர்க்கட்சி சார்பில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் M.C. அகமத் அவர்களும் பிரதான போட்டியாளர்களாக இருந்தனர்.

தமிழரசுக் கட்சியின் கோரிக்கையின் பேரில் அரசு கொண்டு வரவிருக்கும் உத்தேச மாவட்ட சபை மசோதாவுக்கு மக்கள் ஆதரவை உரசிப்பார்க்கும் பரீட்சார்த்த களமாக கல்முனைத்தேர்தல் களம் அமைந்தது.

சுதந்திரக் கட்சி வேட்பாளர் எம்.சி. அகமத் இ.சோ.மு.வின் அங்கத்தவராகவும் செயற்பட்டதால் இத்தொகுதியை வென்றெடுப்பது தமது கட்சியை முஸ்லிம்கள் ஆதரிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட ஒரு சந்தர்ப்பமாக அமையும் என டாக்டர் பதியுதீன் கருதினார்.

இடைத்தேர்தல் பிரசாரம் சூடு பிடித்தது. இஸ்லாத்துக்கும் அதன் எதிர் சக்திகளுக்கும் இடையிலான போராட்டமாக பாமரமக்கள் கருதுமளவுக்கு இனவாதமும், பிரதேச வாதமும் தலை விரித்தாடின. மூதூர் மஜீதின் கனல் கக்கும் பிரசாரம் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. மேடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச அழைக்கப்பட்டால் மஜீத் மைக் முன் நின்று 'நாரே தக்பீர்' என முழங்குவார். மக்கள் வெள்ளம் பதிலாக 'அல்லாஹூ அக்பர்' என முழங்கும். இவ்வாறு பத்து முறை முழங்கிய பின்னரே அவரது பேச்சை ஆரம்பிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். கல்முனைச் சந்தியில் தமிழ்க்கொடி பறக்க வேண்டுமா! அல்லது முஸ்லிம் கொடி பறக்க வேண்டுமா! என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் இதுவென முழங்குவார்.

மக்கள் மிகவும் உணர்ச்சி பூர்வமாக்கப்பட்டனர். தேர்தல் காலம் சாய்ந்தமருதைச் சேர்ந்த நான் வீதியால் சென்று கொண்டிருந்தேன். மது போதை தலைக்கேறிய நிலையில் ஒருவர் மயங்கி வீழ்ந்து கிடந்தார். அவரது வாய் முணு முணுத்தது. அவர் கூறினார். 'அல்லாஹ்! இஸ்லாத்தைப் பாதுகார்" இத்தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் வெற்றியடைவதன் மூலம் இஸ்லாம் பாதுகாக்கப்படும் என்பதே அவரது நம்பிக்கை! மசூர் மௌலானா மருதமுனையைச் சேர்ந்தவராதலால் பிரதேச வாதமும் இத்தேர்தலில் தலை தூக்கியது. எனவே கல்முனை, சாய்ந்தமருது பிரதேசங்கள் சமய, பிரதேச வாதங்களுக்குட்பட்டு இஸ்லாத்தின் பேரால் M.C. அகமத் வெற்றிபெற்றார்.

## இ.சோ.மு. மகாநாடு

இவ்வெற்றி தமது இஸ்லாமிய சோஷலிஸ முன்னணிக்குக் கிடைத்த மக்கள் ஆணை எனக்கருதி டாக்டர் பதி. இ.சோ.மு வின் முதலாவது மகாநாட்டை கல்முனையில் நடத்தத் தீர்மானித்தார். இன்று மஹ்மூத் மகளிர் கல்லூரி அமைந்துள்ள இடத்தில் மகாநாட்டு ஏற்பாடுகள் மிகவும் மும்முரமாக நடந்தன. ஓலைக்கிடுகு, கம்புகளினால் மாபெரும் மகாநாட்டு மண்டபம் உட்பட எத்தனையோ கொட்டில்கள் அமைக்கப்பட்டன. ஒரு நகரமே அங்கு உருவாக்கப்பட்டது. அதற்கு 'மஹ்மூத் நகர்' எனப் பெயரிடப்பட்டது. இந்த மகாநாட்டில் கலந்து கொள்வது ஒரு வரலாற்றுச் சிறப்பாகும் என டாக்டர் பதி குறிப்பிட்டார். உண்மையில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக பல்வேறு கலாசார அம்சங்களுடன் அம்மகாநாட்டு ஏற்பாடுகள் நடந்தன. காஷ்மீர் விடுதலைச் சிங்கம் ஷேக் அப்துல்லா அம்மகா நாட்டுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார் என்ற செய்தியும் மக்களை உற்சாகமூட்டியது. அவர் அம்மகாநாட்டுக்கு வரவில்லை. எனினும் அவர் வருவார் என்று எதிர்பார்ப்பு கடைசி நிமிடம் வரை இருந்ததால் மகாநாடு முக்கியத்துவம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு, இஸ்லாமிய கீதம், சீனடி, சிலம்படி, வாள்வீச்சு, மல்யுத்தம், நபான், பொல்லடி இப்படி எத்தனையோ போட்டிகள் மகாநாட்டையொட்டி நடத்தப்பட்டன. போட்டி நிகழ்ச்சிகளே எத்தனையோ நாட்கள் நடந்தேறின.

இந்த அரசியல் பின்னணியை நான் இவ்வளவு நேரமும் கூறிக் கொண்டிருந்ததற்கு முக்கிய காரணம் அம் மகாநாட்டையொட்டி அங்கு நடைபெற்ற பேச்சுப் போட்டியாகும். அப்போட்டியில் சிரேஷ்ட பிரிவில் நண்பர் எம்.எச்.எம். அஷ்ரப் ஒரு போட்டியாளராகக் கலந்து கொண்டார். அவர் தெரிவு செய்த தலைப்பு "இஸ்லாமும் சோஷலிஸமும்" என்பதாகும்.

அஷ்ரப் பேச அழைக்கப்பட்டதும் முதலில் நடுவர்களை விளித்து நடுவண்ணர்கள் நீதிக்கண் கொண்டு பார்த்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன் தனது பேச்சை ஆரம்பித்தார்.

முதலில் 'இஸ்லாம்' என்றால் என்ன என்பதை விளக்கிய அவர் அடுத்து சோஷலிஸம் என்றால் என்னவென்பதை விளக்கினார். "இஸ்லாம் வட துருவம் என்றால் சோஷலிஸம் தென்துருவம். இவ்விரு துருவங்களும் இணைகின்றது என்று கூறும் எமது தலைவர்களின் தலை என்ன உழுத்தா போய் விட்டது?" என்று கேட்டாரே பார்க்கலாம்! மண்டபம் கைதட்டலினால் அதிர்ந்தது. இஸ்லாம் வேறு சோஷலிஸம் வேறு இரண்டும் இணைய முடியாது என்பதை தனது பேச்சில் நிரூபித்தார். பேச்சுப் போட்டியொன்றிலே இவ்வளவு தூரம் ஆரவாரமும் கைதட்டல்களும் இருந்ததை நான் கண்டதில்லை. சபையை அப்படியே அஷ்ரப் ஆக்கிரமித்துவிட்டார். நடுவர்கள் தீர்ப்பை வெளியிட முடியாமல் திணறினர். முடிவை உடனே அறிவியுங்கள் எனக் கூடியிருந்த இளைஞர்கள் கோஷமெழுப்பினர். பேச்சுப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன. பின்னர் பரிசளிப்பில் அஷ்ரபுக்கு பரிசு கிடைக்கவில்லை. ஆனால் அவர்தான் சிறந்த பேச்சாளர் என்பதை அங்கு குழுமியிருந்த பார்வையாளர்கள் என்ற நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி வேட்பாளருக்கு ஊரே திரண்டு நின்று 'ஒற்றுமைப்பட்டு' வாக்களித்து தேர்தல் முடிந்து சில மாதங்களில் 1968 ஆகஸ்டில் நடக்கும் அதே அரசியல் கட்சி மகாநாட்டில் அக்கட்சியின் அடிப்படை, நாதமான 'இஸ்லாமும் சோஷலிஸமும்' என்ற கோட்பாட்டை எதிர்க்க யார்தான் துணிச்சல் பெறுவர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் அஷ்ரபின் சிறப்பு 'சொல்ல வேண்டும்' என நினைப்பதை அவர் எவ்விடமாயினும் சொல்லி முடிப்பார். முடியாது என்ற இடத்தில் அவர் முடியும் என நிரூபிப்பார்.

இம் மகாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் மிக அற்புதமாக திட்டமிடப்பட்டு நடந்தேறின. பதியுதீன் மஹ்மூத் சிறந்ததொரு நிருவாகி என்பதை இம் மகாநாடு நிரூபித்தது. நானும் அஷ்ரபும் இம்மகாநாட்டில் முழுமையாகக் கலந்து கொண்டோம். சில நேரங்களில் இம்மகாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்க தன் தங்கை பெரோசாவையும் அழைத்து வந்தார்.

கல்முனை இடைத்தேர்தல் பிரசாரமும் இம்மகாநாட்டு நிகழ்வுகளும் அஷ்ரபின் எதிர்கால அரசியல் ஆளுமைக்கு உரமாக அமைந்தன என்பது எனது எண்ணம்.

அஷ்ரப் அமைச்சராக இருந்தபோது கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி வெள்ளி விழா வைபவத்துக்கு பிரதம அதிதியாக வந்திருந்தார். அங்கு மேடையில் பின் வரிசையில் அமர்ந்திருந்த நான் "இந்த மைதானத்தில் நடந்த மகாநாடும் உங்களது பேச்சும் அதற்கான கைதட்டல்களும் ஞாபகம் இருக்கிறதா?" என்று ஒரு துண்டில் எழுதி அனுப்பினேன். துண்டை வாசித்த அவர் உடனே எழும்பி என்னைப் பார்த்து தலையை அசைத்து பழைய நினைவை மீட்டிக்கொண்டார்.

பின்னர் விழாவில் பேச ஆரம்பித்த அவர் "எனது பால்ய நண்பர் ஆதம்பாவா மௌலவி அவர்களே என்று என்னையே முதலில் விளித்து விட்டு அப்பேச்சுப் போட்டியைப் பற்றியே சில நிமிடங்கள் பேசினார்.

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய த.:வாப் பணியில்

சகோதரர் அஷ்ரப் சட்டக்கல்லூரி செல்லும் வரையான காலத்தில் கல்முனையில் த.:வாப் பணிக்காக தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். பத்திரிகைகட்கு கவிதை, கட்டுரை எழுதுதல், ஆங்கிலத்தில் வரும் இஸ்லாமியக் கட்டுரைகளை மொழிபெயர்த்தல் அதனை அச்சடித்து விநியோகித்தல், இஸ்லாமிய இயக்கப்பணிகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளில் அதிகம் ஈடுபட்டார்.

## ஹதீஸ் மஜ்லிஸ் ஏற்பாடு

எமது பிரதேசத்தில் புனித றமழான் மாதம் வந்துவிட்டால் பல்வேறு சமய நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். அவற்றில் ஒன்று பகல் நேரத்திலே மு.ப. 10 மணி முதல் ளுஹர்வரை மௌலவி ஒருவர் பெரும்பாலும் பெண்களை மையமாகக் கொண்டு அவர்கட்கு மார்க்கப் பிரசங்கம் நிகழ்த்துவார். இதற்கு 'ஹதீஸ் சொல்வது' என்ற பெயர் வழக்கிலுள்ளது. இவ்வாறு ஹதீஸ் சொல்வதற்கென ஹதீஸ் குடில் அமைக்கப்படும். அங்கு ஒரு மௌலவி மாதம் முழுவதும் ஹதீஸ் சொல்வார். அவ்வாறு சொல்லும் மௌலவிக்கு ஹதீஸ் மஜ்லிஸில் கலந்து கொள்ளும் வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் பெண்கள் காணிக்கை செலுத்துவார்கள். மாதம் முழுவதும் நடைபெறும் இந்நிகழ்ச்சியால் அந்த மௌலவிக்கு மாத இறுதியில் பெரியதொரு தொகை வருமானமாகக் கிடைக்கும்.

இவ்வாறு நடைபெறும் ஒரு வேலையை - தொழிலை - சேவையாகச் செய்ய அஷ்ரப் முன்வந்தார். இன்று கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசலின் வடபுறத்தே உள்ள பள்ளிக் காரியாலயம் அமைந்துள்ள இடத்தில் ஹதீஸ் குடில் ஒன்றைக் கட்டும் முயற்சியில் இருபது வயதையுடைய அந்த இளைஞர் ஈடுபட்டார். தனது நண்பர்களின் உதவியுடன் ஓலைக்கிடுகு, பறன் கம்பு கொண்டு மண்டபம் ஒன்றை - குடிலை - அமைத்தார். பின்னர் ஊர் ஊராகச் சென்று மௌலவிமார்களைச் சந்தித்து தினமும் ஒவ்வொருவர் வந்து பிரசங்கம் நிகழ்த்த அழைப்பு விடுத்தார். ஒவ்வொரு காலையிலும் மௌலவிமார் வீடு தேடிச் சென்று அவர்களை அழைத்து வந்து பிரசங்கம் நிகழ்த்தச் செய்தார். சிலரின் பிரசங்கம் சிறப்பாக அமையும் போது இவர் பாராட்டப்படுவதும் சிறப்புக் குறையும் போது இவரிடம் அதிருப்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கப்படுவதும் இவ்வாறு நாட்கள் சென்றன. என்னை பிரசங்கம் செய்ய அழைக்க வந்த அஷ்ரப் பெண்கள் எல்லாம் ஓசை நயத்துடன் பிரசங்கம் நிகழ்த்தக் கூறுகின்றார்கள் என அந்த ஓசையை அவர் கூறிக்காட்டி உங்களால் அப்படிச் செய்ய முடியுமா? எனக் கேட்டார். எப்படியோ நாளை நன்றாகச் செய்யுங்கள் என்றார். மறு நாட்காலை நான் வந்து வரலாற்றுத் துணுக்குகள் பலவற்றைக் கூறி ஓரளவு சமாளித்துக் கொண்டேன்.

ஒரு மாதம் முழுவதும் இணக்கமான, பொருத்தமான மௌலவிமார்களைக் கூட்டி வந்து அந்த மஜ்லிஸை வெற்றிகரமாக நடத்தி முடித்தார் அஷ்ரப். இதுவும் அவரது அபார துணிச்சலுக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு. மார்க்க அறிஞரான மௌலவி ஒருவர் மிகவும் சிரமம் எடுத்துச் செய்யும் இவ்வேலையை இருபது வயதான G.C.E. O/L வரை படித்திருந்த ஒரு மாணவன் செய்து முடிப்பது என்பது சாதாரண விடயமல்ல.

## புனித ரமழான் சிந்தனைகள்

முஸ்லிம்கள் நோன்பு நோற்கும் ரமழான் மாதத்தில் இம்மாதம் தொடர்பான கட்டுரைகள் தமிழ்த் தினசரிகளில் வரும் நடைமுறை முன்பு இருந்ததில்லை. நான் அறிந்தவரை இவ்வாறான ஒரு நடைமுறை வருவதற்கு காரணமாக அமைந்தது அஷ்ரப் எழுதிய தொடர்கட்டுரைதான்.

1968 அல்லது 69 என நினைக்கிறேன். "புனித ரமழான் சிந்தனைகள்" என்ற தலைப்பில் "தினபதி" என்ற தமிழ்த்தினசரியில் தொடர்கட்டுரையொன்றை அஷ்ரப் எழுதினார். இது வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அஷ்ரபின் எழுத்தாற்றலும் அவரது வித்தியாசமான பார்வையும் வாசகர்களைக் கவர்ந்திழுத்தது. இத்தொடர் கட்டுரையை எழுதுவதற்காக அஷ்ரப் அப்துல் ஹமீத் பாகவியின் தமிழ் தப்ஸீரும் கையுமாக அலைந்தார். அல் குர்ஆன் இந்த நூற்றாண்டில் இறங்கியது போன்றல்லவா இருக்கிறது என்று அதன் பொருட்களில் பொதிந்துள்ள உண்மை பற்றி பூரித்துப் பேசுவார். அல் குர்ஆன் பற்றிய ஆழ்ந்த அறிவு உள்ளவர்களில் அஷ்ரப் குறிப்பிடத்தக்கவர். அஷ்ரப் அமைச்சராக இருந்த போது நான் அவரைச் சந்தித்த போதெல்லாம் ஏதோ ஒரு குர்ஆன் வசனத்தின் பொருள் பற்றியே என்னிடம் பேசுவார், விளக்கம் கோருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களின் பெருவரவேற்பைப் பெற்று வெளிவந்து கொண்டிருந்த அஷ்ரபின் புனித ரமழான் சிந்தனைகள் தொடர்கட்டுரை றமழான் 21ம் நாள் வெளிவரவில்லை. அதே தலைப்பில் வேறு ஒருவர் எழுதிய கட்டுரை பிரசுரமாகியிருந்தது. அஷ்ரபின் கட்டுரை நிறுத்தப்பட்டு விட்டதாக தகவல் வந்தது. வாசகர்கள் மிகவும் ஏமாந்து போயினர்; ஆத்திரமடைந்தனர். எஞ்சிய அவரது கட்டுரைகளைப் பிரசுரிக்க அவர் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

நடந்தது இதுதான்: 21ம் நாள்முதல் அவரது கட்டுரைகள் 'சகாத்' பற்றிய விடயங்களைக் கூறுவதாக அமைந்திருந்தது. சகாத்தைப் பற்றி விபரமாக விளக்கிய அவர் சோஷலிஸத்திற்கும் அதற்குமிடையேயுள்ள வித்தியாசத்தை விலாவாரியாக விளக்கியிருந்தார். எனவே இஸ்லாமிய சோஷலிஸம் என்ற எண்ணக் கரு பற்றி அதில் நிறைய விமர்சனம் செய்திருந்தார். இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி அரசியல் வாதிகளுடன் மிக நெருக்கமான தொடர்புடையவர் எனக் கருதப்பட்ட "தினபதி" ஆசிரியர் இஸ்லாமிய சோஷலிஸத்துக்கு எதிரான இக்கட்டுரைத் தொடரை நிறுத்தியதாக அஷ்ரப் கூறினார். தனது முப்பது நாளைய கட்டுரைகளை ஒரு நூலாகப் பிரசுரிக்கப் போவதாக அன்று அஷ்ரப் கூறினார். அவரது அந்த எண்ணம் ஈடேறவில்லை. பொருளாதாரப் பிரச்சினையுடைய ஒருவரால் இவ்வாறு செய்வது எவ்வாறு சாத்தியமாகும்?

அன்று இஸ்லாமிய சிந்தனையுள்ள இளைஞர்கள் மத்தியில் சோஷலிஸம் என்ற வார்த்தை வேப்பங்காயாகக் கசந்தது. மௌலானா மவ்தூதி, முஹம்மது குதுப் போன்ற அறிஞர்களின் ஆக்கங்களில் தன்னை அதிகமாக ஈடுபடுத்திய அவர்கள் இதற்கெதிராக போர் தொடுத்ததற்கு அவர்களின் 'இஸ்லாமே முதன்மையானது' என்ற நம்பிக்கையே காரணமாகும். இலங்கையில் இடதுசாரிச் சிந்தனைகள் அதிகம் இருந்த அக்காலத்தில் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ பிரிவு, சீனாப்பிரிவு என்றெல்லாம் இயங்கிய வேளையில் சோஷலிஸ வாதிகளின் நண்பனான டாக்டர் பதி இஸ்லாமிய சோஷலிஸம் என்ற வார்த்தையைக் கையாண்டது இளைஞர்கள் மத்தியில் பெரும் விழிப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது. எனவேதான் அஷ்ரப் இதற்கெதிராகக் கடுமையாகப் போர் தொடுத்தார்.

'தினபதி' என்ற நாளிதழ் எஸ்.டி. சிவநாயகத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்தது. M.D.குணசேன நிறுவனம் இப்பத்திரிகையை வெளியிட்டது. தமிழரசுக் கட்சியின் 'சுதந்திரன்' என்ற பத்திரிகையில் கடமையாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்டு வெளியேறிய சிவநாயகம் தினபதிப் பத்திரிகையை தமிழரசுக் கட்சிக்கெதிராக நன்கு பயன்படுத்தினார். முஸ்லிம் அரசியல் வாதிகளுடன் நல்ல தொடர்புகள் வைத்திருந்த அவர் முஸ்லிம்களின் விவகாரங்களுக்கு முக்கிய இடம் கொடுத்தார். அஷ்ரபின் கவிதை கட்டுரைகட்கு அவர் முன்னுரிமை கொடுத்தது போல் சாதாரண கல்முனை அஷ்ரபின் முன்னணி அரசியல் வாதிகளுக்கெதிரான அறிக்கைகளைக் கூட முதன்மை கொடுத்துப் பிரசுரித்தார்.

தனது றமழான் சிந்தனைத் தொடரை மூதூர் மஜீதே தடுத்து நிறுத்தியதாக அஷ்ரப் கூறினார். அதே பத்திரிகையில் அதனைப் பின்னொரு நாளில் பிரசுரிப்பேன் என்று பத்திரிகையாசிரியர் கூறியுள்ளதாகவும் கூறினார். அந்த வருட ரமழான் பெருநாள் தினத்தன்று 'நோற்றோருக்கு பெருநாள் மற்றோருக்கு வெறுநாளே' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். அது பிரசுரமானது.

இங்கு நான் குறிப்பிட்டுக் காட்ட முனைந்தது என்னவெனில் சாதாரண G.C.E. O/L படித்திருந்த ஒரு சாதாரண அஷ்ரபுக்கு அவரது கருத்துக்களை வெளியிடுவதற்கு அன்றைய அரசியல்வாதிகள் போட்ட தடைகளாகும். பின்னர் அஷ்ரப் ஓர் அரசியல் வாதியாகிய பின்னரும் அதே தடை என்ற ஆயுதத்தை அவர்கள் பிரயோகித்தனர்.

இவ்விடத்தில் ஒரு விடயம் எனக்கு ஞாபகம் வருகிறது. அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக்கல்லூரி அதிபராக நான் இருந்த போது 1990ல் காத்தான்குடி, ஏறாவூர் கொலைகளைத் தொடர்ந்து, பிரதேசத்தில் ஏற்பட்ட இனங்களுக்கிடையிலான முரண்பாடு காரணமாக எமது கல்லூரி சில வாரங்கள் மூடிக்கிடந்தது. அதனை மீண்டும் திறப்பதற்காக செய்தியொன்றை எழுதிக்கொண்டு தினகரனில் பிரசுரிக்க வைப்பதற்காக 'லேக் ஹவுஸ்' வரவேற்புப் பீடம் சென்று 'தினகரன்' பிரதம ஆசிரியர் சிவகுருநாதன் அவர்களுக்கு டெலிபோன் எடுத்தேன்.

அவர் தன்னை நேரே வந்து காணுமாறு வேண்டினார். உடனே நான் அவரிடம் சென்றபோது பிரதேச நிலவரங்களைக் கேட்டுவிட்டு அவர் தனது மனதுள் இருந்த பாரமொன்றை இவ்வாறு இறக்கினார். 'பாருங்க தம்பி' அஷ்ரபுடைய எழுத்துக்களைப் பிரசுரிக்கவேண்டாமென்று என்னை நிர்ப்பந்திக்கின்றனர். நீங்கள் இரண்டு பேரும் யார்? காரியப்பர் குடும்பம்தானே! அஷ்ரபும் காரியப்பர்தான் அவர் காரியப்பர் என்று போட்டுக் கொள்வதில்லை. நீரும் காரியப்பர் மகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தவர்தானே! அதற்குள்ளே உங்களுக்கேன் வேறுபாடு.! என்னைப் போட்டு எவ்வளவோ கஷ்டப்படுத்துகிறீர்கள் என்று அஷ்ரபையும் அன்றைய அமைச்சர் ஒருவரையும் பற்றி சிவகுருநாதன் ஐயா குறிப்பிட்டார். அஷ்ரபின் நண்பனான சிவகுருநாதனைப் பிடித்து அஷ்ரப் சில கட்டுரைகளை - செய்திகளை- பிரசுரிக்கும் வேளை அப்போதைய கிழக்கின் அமைச்சர் ஒருவர் சிவகுருநாதனுக்கு கடும் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார். இதனால் மனம் வருந்தியே சிவகுருநாதன் அவர்கள் என்னிடம் தனது மனவருத்தத்தை வெளிப்படுத்தினார்.

அதாவது இங்கு நான் குறிப்பிட விரும்புவது அஷ்ரப் சாதாரண மாணவனாக சமயக்கட்டுரை எழுதிய போதும் பின்னர் அவர் அரசியல் கட்டுரை எழுதியபோதும் எதிர்ப்பு, தடை எல்லாம் வந்தன.

எதிர்நீச்சல் அவரது வெற்றியின் படிகளாகியது.

தினபதியில் அஷ்ரபின் 'புனித ரமழான் சிந்தனைகள்' பெற்ற வரவேற்பைத் தொடர்ந்து அடுத்த வருடம் சகல தமிழ்ப் பத்திரிகைகளிலும் "றமழான் தொடர்பான விடயங்கள் ஏதோ ஒரு வகையில் பிரசுரமாயின.

புனித றமழானைப் பற்றி ஏறெடுத்துப் பார்க்காத தமிழ்ப் பத்திரிகைகளை அதன் பக்கம் திருப்பி விட்ட பெருமை அஷ்ரபையே சாரும்.

## பயிற்சி மன்றத்திலே

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் பயிற்சி மன்றமொன்று கல்முனை பிரதான வீதியில் உள்ள கட்டிடமொன்றில் இயங்கியது. மர்ஹூம் மௌலவி Y. அப்துல் மஜீத் (கபூரி) தலைவராகவும், சகோதரர் S.T. உஸ்மான் சாஹிப் செயலாளராகவும் பணிபுரிந்தனர். உஸ்மான் சாஹிபின் சளைக்காத செயற்பாடுகள் மன்றத்தின் பணிகளை மேம்படுத்தின. சகோதரர் அஷ்ரப் இம் மன்றத்தில் தன்னை இணைத்துக் கொண்டமை மேலும் அதன் செயற்பாடுகளுக்கு மெருகூட்டியது. சமூகத்திலுள்ள முக்கிய பிரமுகர்களை அழைத்து அவர்கட்கு மார்க்க விளக்கம் கொடுக்கும் விடயத்தில் அஷ்ரப் கூடிய கவனம் செலுத்தினார்.

இக்கால கட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது என நினைக்கின்றேன். 'அல் ஹஸனாத்' என்ற பத்திரிகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாஅத்தே இஸ்லாமி வெளியிட்டது. முதலாவது இதழை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்வதற்காக அதனை வீடு, வீடாக, கடை கடையாகக் கொண்டு சென்று விற்பதென முடிவு செய்யப்பட்டது. அவ்வேளை நிந்தவூர் ஜும்ஆப் பள்ளி வாசலில் தப்லீ. ஜமாஅத்தின் மகாநாடு நடைபெறுவதாயிருந்தது. அம்மகாநாட்டிற்கு வருவோரிடம் விற்பதற்கென அஷ்ரப் பெருந்தொகையான அல் ஹஸனாத் பிரதிகளை எடுத்துக் கொண்டார். என்னையும் அவருடன் இணைத்துக் கொண்டார். பள்ளிவாசலில் முன்னால் கூடியிருந்தவர்களிடம் விற்பனையை ஆரம்பித்து அவ்வாறே மார்க்கட் பக்கம் சென்று சில மணி நேரத்துள் அவர் கொண்டுவந்த அத்தனை பிரதிகளையும் விற்று முடித்தார். அவர் நீட்டிய பிரதிகளை எவரும் வேண்டாம் என்று கூறாமல் காசைக் கொடுத்துப் பெற்றுக் கொண்டனர்.

இது ஒரு சாதாரண விடயமாக வாசகர்களுக்குத் தெரியலாம். விடயம் அவ்வாறல்ல. தப்லீ. ஜமாஅத்துக்கும் ஜமாஅதே இஸ்லாமிக்குமிடையே அவ்வளவு சுமூகமான நிலை இருந்த காலம் அல்ல அது. இரு தரப்பினரும் மற்றவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்த காலம். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் தப்லீ. ஜமாஅத்தின் தொண்டர்கள் நிறைந்திருக்கும் ஒரு மகாநாட்டில் அவ்வியக்கம் விரும்பாத ஜமாஅதே இஸ்லாமியின் இலட்சியக்குரல் என பொறிக்கப்பட்ட ஒரு பத்திரிகையைப் பெருந்தொகையாக விற்று முடிப்பது என்பது சாதாரண விடயமல்ல. அது ஒரு முடியாத காரியம். இவ்வாறு முடியாத வேலைகளை முடித்து வைக்கும் திறனைத்தான் அல்லாஹ் அருட்கொடையாக அஷ்ரபிடம் வழங்கியிருந்தான்.

நான் அட்டாளைச்சேனை அறபுக்கல்லூரியில் இறுதி வகுப்பில் பயின்று கொண்டிருக்கும் போது அஷ்ரப் ஏனைய பயிற்சி மன்ற அங்கத்துவர்களுடன் அக்கரைப்பற்று புதுப் பள்ளியில் நடக்கும் கூட்டத்துக்குப் போவதற்காக வந்தார். என்னை அட்டாளைச்சேனையில் கண்ட அவர் விடயத்தைக் கூறி முடியுமானால் வருமாறு அழைத்து விட்டுச் சென்றார். அங்கு முக்கிய பேச்சாளராக அஷ்ரப் விளங்கினார். "உங்கள் சிறார்கள்" எனும் தலைப்பில் அவரது பேச்சு எதிர்கால சமுதாயம் பற்றிக் கரிசனை கொள்ளுமாறு பெற்றோர்களை அழைப்பதாக விருந்தது.

இவ்வாறு கூட்டங்கள் நடந்த சில மாதங்களில் அக்கரைப்பற்றிலும் ஒரு பயிற்சி மன்றக்கிளை உருவானது ஞாபகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி மன்றத்தில் ஓர் அங்கத்தவரை இலகுவில் சேர்க்கமாட்டார்கள். நீண்ட நாள் தொடர்பின் பின் அவரை இனம் கண்ட பின்பே ஆரம்பப்படி உறுப்பினராக ஒருவர் சேர்க்கப்படுவார். எனவே பயிற்சி மன்றத்திலே சிரேஷ்ட நிலையில் இருந்த அஷ்ரப் என்னை ஓர் ஆரம்ப அங்கத்தவராகச் சேர்க்க அவரே படிவம் நிரப்பி அவரே சிபார்சு செய்தார்.

சட்டக்கல்லூரி செல்லமுன் கல்முனையில் உள்ள பயிற்சி மன்றத்தில் சிரேஷ்ட நிலையில் இருந்த அஷ்ரப் கொழும்பு சென்ற பின் ஜமாஅதே இஸ்லாமியுடன் தொடர்பு வைத்திருந்தாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

அஷ்ரப் அமைச்சராக இருந்தபோது அவரது செயற்பாடுகளில், பேச்சுக்களில் ஏற்பட்ட ஆட்சேபகரமான விடயங்கள் தொடர்பாக அவரைக் கலந்து பேசுவதென அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா முடிவெடுத்தது. எமது சபையின் தலைவர் ஷேக் இப்றாஹீம் ஹஸரத் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் பேச்சாளராக சபை என்னைத் தீர்மானித்தது. எனக்கு வழங்கப்பட்ட நேரத்தில் அஷ்ரபின் அண்மைக்கால சமய ரீதியான ஆட்சேபகரமான விடயங்களை பட்டியலிட்டுப் பேசிக் கொண்டிருந்தேன். ஓரிடத்தில் நீங்கள் ஒரு காலத்தில் தப்லீ., ஜமாஅதே இஸ்லாமி போன்ற அமைப்புக்களில் இருந்தீர்கள். இன்று நீங்கள் பேசும் பேச்சுக்கள் "அகீதா"வுக்கு மிகவும் முரண்பாடாக உள்ளதே என்றெல்லாம் கூறி எனது பேச்சை முடித்தபின் அஷ்ரப் பதிலளிக்க எழுந்தார்.

தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க தனக்கு ஆறு மணி நேரங்கள் வழங்க வேண்டுமென்று பேச்சை ஆரம்பித்த அவர் ஒரு வெண்கட்டியை எடுத்து கரும்பலகையில் சிறு, சிறு வட்டங்களை வரைந்தார். பின்னர் அச்சிறு வட்டங்கள் உள்ளடங்கலாக பெரிய வட்டமொன்றை வரைந்தார். பின்னர் அவர் கூறினார். நான் முன்பு தப்லீ., ஜமாஅதே இஸ்லாமி என்ற சிறு,சிறு வட்டத்துள் இருந்தேன். இன்று அவைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி பொது வட்டத்துள் இருக்கின்றேன். அதாவது சகல இயக்கங்களையும் ஏற்றவனாக எல்லாவற்றையும் உள்வாங்கியவனாக நானுள்ளேன் என்றவர் கூறினார். தப்லீ. ஜமாஅத்தினரையிட்டு நான் கூறவேண்டும். "நான் இன்று உலமாக்களாகிய உங்களை மாவடிப்பள்ளி மர்கஸியில் வைத்துச் சந்திக்க விரும்பினேன். ஆனால் அவர்களோ அங்கு உங்களை நான் சந்தித்துப் பேச அனுமதிக்கவில்லை. எனவேதான் உங்களை இம்மாவடிப் பள்ளி பாடசாலையில் சந்திக்க முடிவு செய்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாஅதே இஸ்லாமி பற்றியும் நான் குறிப்பிடவேண்டும். நான் முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்து முன்னெடுத்துச் சென்றபோது தேர்தல் ஒன்று வந்தது. அத் தேர்தலில் தனது கட்சிக்கு ஆதரவு தருமாறு ஜமாஅதே இஸ்லாமி கூட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று முக்கியஸ்தர்களைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தேன். பின்பு முடிவு எடுப்பதாகக் கூறி என்னை அனுப்பினார்கள். பின்னர் அவர்கள் முடிவெடுத்தார்கள். என்னவெனில் முஸ்லிம் காங்கிரசுக்கு அல்ல; ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு அளிப்பதென அவர்கள் முடிவுக்கு வந்தார்கள். இவர்கள்தான் இன்றைய ஜமாஅதே இஸ்லாமி காரர்கள். முன்பெல்லாம் எக்கட்சிக்கும் வாக்களிப்பதில்லை என்றுதான் அவர்கள் முடிவெடுப்பது வழக்கம். ஆனால் முஸ்லிம் கட்சி ஒன்று உருவான பின் அதற்கு ஆதரவு வழங்குமாறு கேட்டபின் அவர்கள் எடுத்த முடிவு தான் அது. இவ்வாறு அவர் கூறி தனது நிலையை நியாயப்படுத்தினார்.

அஷ்ரப் தனது பயிற்சி மன்ற நாட்களில் பத்திரிகைகளில் நிறைய கட்டுரைகளை எழுதினார். ஆங்கிலத்தில் வரும் முக்கிய கட்டுரைகளையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவார். முஹம்மது குதுப் அவர்களின் மதம் மக்களுக்கு அபின் என்ற கால்மார்க்ஸின் தத்துவத்திற்கெதிரான கட்டுரை ஆங்கிலத்தில் வெளியானபோது அதனைத் தமிழில் மொழிபெயர்த்து பின்னர் அதனை அச்சிட்டு விநியோகித்தார். மௌலானா மௌதூதியின் சிந்தனையில் ஊறிப்போன அவர் அவரது புத்தகங்களை பள்ளிகளில் இஷாத் தொழுகையின்பின் த.ஃலீம் வாசிப்பது போல் வாசிப்பார்.

மேலும் அவர் அறபு மொழியைப் படிப்பதிலும் போதிய கவனம் செலுத்தினார். என்னிடமிருந்த 'ஆஜ்றூமிய்யா' என்ற அறபு இலக்கண நூலைக் கேட்டு வாங்கினார். தான் சேகு இப்றாஹீம் ஹஸ்ரத் அவர்களிடம் அறபு படிப்பதாகவும் கூறினார். பொதுவாக அஷ்ரபின் சட்டக்கல்லூரிக்கு முந்திய கல்முனைக்காலம் முழுமையான த.ஃவாவை மையமாகக்கொண்ட காலமாகும்.

அக்காலத்தில் அவர் எழுதிய சில கவிதைகள் இதற்கு நற்சான்றாகும்.

1968 ல் அவர் எழுதிய குர்ஆனை ஓதிடுவாய் தம்பி என்ற தலைப்பிலான ஒரு கவிதையில்

**குர்ஆனை எடுத்து நிதம் ஓதிடுவாய் தம்பி ~ அது**
**கூறுகின்ற போதனையில் மூழ்கிடுவாய் தம்பி ~**

எனத்தொடர்ந்து எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இதே வருடம் 'மாநபி மறைந்தாலும்' எனும் தலைப்பில்

**மாநபி மறைந்தாஹும் அவரின் முத்து**
**மணியான வாழ்வுநெறி என்றும் வாழும்**
**குர்ஆனின் கூறுகட்கு விளக்கம் தந்த**
**குறைவற்ற பெருவாழ்வு இருக்குமட்டும்**
**பெருந்துயர்கள் எதுவந்து நின்றபோதும்**
**துரும்பாக அதைக் கருதி தொடர்ந்து செல்வோரம்**
**தொலை நிற்கும் இலக்கினையே வெற்றிகொள்வோம்**
**தூதர் நபி வாழ்வினிலே தொடர்ந்திருப்போம்.**


என்ற வைராக்கியத்தை வெளிப்படுத்தினார்.

1969ல் மறுமலர்ச்சி கண்ட நபி எனும் தலைப்பிலான கவிதையில்

**எங்கள் நாதர்**

**தனித்தேயொரு கொள்கைக்காய் பாடுபட்டார்**
**துணையெதுவும் இவ்வுலகில் இல்லை அந்தத்**
**தூயோனாம் அல்லாஹ்வைத்தவிர என்ற**
**மணிமொழியைத்தன் கொள்கைத் தாரக மந்திரமாய்**
**மாநிலத்தில் கொண்ட நபி வெற்றி கண்டார்.**

அஷ்ரப் அக்காலத்தில் த.வாப் பணியில் மும்முரமாக ஈடுபட்டார் என்பதற்கு எனது ஆட்டோகிராப்பில் எழுதிய கீழ்க்காணும் வரிகளே சான்றாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கைப்போர்

மீலாத் விழாக்கள் வருகின்றபோது தமிழ்நாட்டிலிருந்து பேச்சாளர்கள் வந்து இலங்கையின் பல இடங்களில் மீலாத் விழாக்களில் பேசும் வழக்கம் இருந்தது. வருடா வருடம் முக்கிய பிரமுகர்கள் வந்து கொண்டிருந்தனர். கொழும்பிலிருந்த சில இயக்கங்கள் அவர்களை வரவழைத்து பேசவைத்தன. பேராசிரியர், கா.அப்துல்கபூர், சொற்கொண்டல் C. கஸ்ஸாலி, திருப்பூர் முஹைதீன் போன்றவர்கள் அவ்வாறு இங்கு வந்தவர்களில் முக்கியமானவர்கள். இவ்வாறு 1969ம் ஆண்டு மீலாத்விழாவில் பேச இறக்குமதி செய்யப்பட்டவர்தான் M.M. பீர் முஹம்மது என்ற பேச்சாளர். இவர் தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினரும் கூட.

பல மீலாத் வைபவங்களில் பேசிய இவருக்கு கொழும்பு திருக்குறள் மன்றம் வரவேற்பொன்றை அளித்துக் கௌரவித்தது. அவர் அக் கூட்டத்தில் அல்குர்ஆனையும் திருக்குறளையும் ஒப்பிட்டுப் பேசி இருந்தார். இப்பேச்சு நாட்டில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. அவ்வேளை மூதூர் எம்.பி யாகவிருந்த மஜீத் அவர்கள் (இன்றைய அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் அவர்களின் தந்தை) தனக்கு முக்கிய இடம் கொடுக்கும் பத்திரிகையான தினபதியில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அல்லாஹ்வால் அருளப்பட்ட அல்குர்ஆனையும் மனிதனால் உருவாக்கப்பட்ட குறளையும் ஒப்பிடுவது எவ்வளவு தவறானது என்ற வகையில அக்கண்டன அறிக்கை அமைந்திருந்தது.

இஸ்லாமிய சோஷலிஸம் பேசும் அரசியல்வாதியான மஜீத் இவ்வாறு ஓர் அறிக்கையை வெளியிட்டதும் கல்முனையில் த.வாப்பணியை மூச்சாகக் கொண்டு செயற்பட்ட இருபது வயதையுடைய இளைஞர் அஷ்ரப் உசாரடைந்தார். மஜீதின் அறிக்கை சரியானது எனினும் அவரது அரசியல் சிந்தனைக்கு மாறானது என்பதை அவருக்கு உணர்த்துமுகமாக "திருக்குர்ஆன் கூறுவதை சோஷலிஸத்துடன் ஒப்பிட்டுப் பேசலாமா? மூதூர் மஜீதிடம் ஒரு கேள்வி என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டார்

அவரது அறிக்கைக்கு முக்கிய இடம் கொடுத்து தினபதி பிரசுரித்திருந்தது. அதில் அஷ்ரப், அல்லாஹ்வுடைய அல்குர்ஆனும் மனிதனுடைய குறளும் ஒன்று சேராது எனக்கூறும் மஜீதின் கருத்தை வரவேற்றதுடன் இதன் மூலம் தனது அரசியல் கொள்கையை அவர் மாற்றிக் கொண்டாரா? அவ்வாறெனில் என்னைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற முஸ்லிம்கள் மகிழ்ச்சிக்கடலில் நீந்துவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை என்று குறிப்பிட்டார்.

ஏனெனில் மஜீத் அல்லாஹ்வின் இஸ்லாத்தையும் மனிதனின் சோஷலிஸத்தையும் இணைத்து அரசியல் செய்பவர் என்பது அஷ்ரபின் வாதம்.

அஷ்ரபின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து மஜீத் அவர்கள் இஸ்லாமிய சோஷலிஸம் என்று கூறுவதில் தவறில்லை ஜனாப் அஷ்ரபிற்கு மூதூர் மஜீத் பதில் என்று ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் சோஷலிஸத்துக்கும் இஸ்லாத்துக்குமுள்ள தொடர்பைப் புரிந்த கொள்ளாதவர்கள் தான் இவ்வாறு சந்தேகம் எழுப்புகின்றனர் என்ற சாரப்படி அவரது அறிக்கை அமைந்திருந்தது.

இதற்குப் பதில் அளிக்க அஷ்ரப் விரும்பினார். நீண்ட விரிவான அறிக்கை ஒன்றை எழுதி மூதூர் மஜீதிடம் மேலும் பல கேள்விகள், என்ற தலைப்பிட்டு தினபதிக்கு எழுதி அனுப்பினார். அதனை முழுமையாக என்னிடம் வாசித்துக் காட்டினார். ஆனால் அவ்வறிக்கையும் பிரசுரமாகவில்லை. பிரசுரமாவதற்கு அவர் எடுத்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

தினபதி பிரசுரிக்காவிட்டாலும் இவ்வறிக்கைகள் அனைத்தையும் தான் ஒரு பிரசுரமாக பிரசுரிக்கப்போகிறேன் என அஷ்ரப் கூறினார். அதுவும் நடைபெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் - அக்ஸா எரிப்பும் அஷ்ர.ப்பின் கொதிப்பும்

## 1969ம் ஆண்டு

உலக முஸ்லிம்களின் மூன்றாம் புனிதஸ்தலமான ஜெரூஸலத்திலுள்ள அல்-மஸ்ஜிதுல் அக்ஸா யூதர்களின் திட்டமிட்ட சதியினால் தீக்கிரையாக்கப்பட்டது. இச்செய்தி உலகமெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் ஆத்திரத்தைக் கிளறிய சம்பவமாக அமைந்தது. முஸ்லிம்கள் கொதித்தெழுந்தனர். இஸ்ரவேலுக்கு எதிராக கண்டனங்கள் ஆர்ப்பாட்டங்கள்.!!

இச்சம்பவம் இலங்கை முஸ்லிம்களின் உள்ளத்தையும் பெரிதும் பாதித்தது. அவர்கள் கவலையடைந்தனர். கண்டனத்தைத் தெரிவித்தனர். இவ்வேளை ஆட்சியில் இருந்த டட்லி சேனநாயக்காவின் அரசாங்கம் இஸ்ரவேலின் நலன்புரி நிலையம் ஒன்றை அனுமதித்திருந்ததால் அதனை மூடவேண்டுமென்ற வேண்டுகோள் முஸ்லிம்களின் ஏகோபித்த கோரிக்கையாக மாறியது.

இஸ்ரவேலின் அடாவடித்தனத்துக்கு இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் கட்சிபேதமின்றி ஐக்கியப்பட்டு தமது கண்டனத்தை தெரிவிக்க வேண்டுமென்று முடிவுசெய்தனர். அவ்வேளை அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த அமைச்சர் எம்.எச்.முகம்மத், டாக்டர் பதியுதீன் மஹ்மூத், முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம்.சீ.எம். கலீல், சோனக சங்கத்தலைவர் சேர், நாஸீக் பரீத் போன்ற தலைவர்களுடன் கொழும்பிலிருந்த அனைத்து முஸ்லிம் இயக்கங்களையும் ஒன்றிணைத்து மருதானை ஸாஹிறாக் கல்லூரி முன்பாக அவ்வேளை பிரசித்தி பெற்ற மார்க்க அறிஞர் ஏ.ஏ.எம்.மகூத் ஆலிம் தலைமையில் நடந்த மாபெரும் கண்டனக் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

முஸ்லிம்கள் ஐக்கியப்பட்டு இஸ்ரவேலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய அந்த பிரமாண்டமான கூட்டத்தில் அமைச்சர் முஹம்மத் மஸ்ஜிதுல் அக்ஸாவைப் புதுப்பித்துக்கட்ட நிதிசேகரித்து வழங்குவோம். எமது அரசாங்கமும் அதற்கு உதவும் என்று பேச செல்வச் செழிப்பு மிக்க அறபு நாடுகளுக்கு நாங்களா காசி சேர்த்து அனுப்பவேண்டும்? என்று டாக்டர் பதியுதீன் அக்கூற்றை நிராகரிக்க கண்டனக் கூட்டமே குழப்பத்தில் முடிந்தது. முஸ்லிம் சமூகம் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்குயிரான மஸ்ஜிதுல் அக்ஸா தீயிட்டுக் கொளுத்தப்பட்டதைக் கூட ஒன்றுபட்டு எதிர்ப்புக்காட்ட முடியாத ஒரு பலவீன சமூகமாகவே இருந்தது. அவ்வேளை இலங்கையிலிருந்த இஸ்ரவேல் நலன்புரி உத்தியோகத்தர்கள் இலங்கை முஸ்லிம்கள் பற்றி என்னதான் நினைத்திருப்பர்!

இவ்வேளையில்தான் கல்முனையில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி, கண்டனக்கூட்டம் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன.

கல்முனைக்குடி ஜும்ஆ பள்ளிவாசலில் இருந்து பாரிய ஊர்வலம் ஒன்றை அஷ்ர.ப் ஏற்பாடு செய்து அவரே அதற்கு தலைமை தாங்கி கல்முனை நகரிற்கு அழைத்து வந்தார்.

மருதமுனையில் இருந்து வந்த பேரணிக்கு பழீல் மௌலானா தலைமை தாங்கினார். கல்முனையில் நடந்த மாபெரும் கூட்டத்தில் இலங்கையில் இருந்து இஸ்ரவேலர்கள் வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கோரிக்கை இலங்கை முஸ்லிம்களின் கோரிக்கையாக மாறியது. 1970ம் ஆண்டு பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக தமது கட்சி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் இஸ்ரவேலர்களை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதாக வாக்குறுதியளித்தார். அத்தேர்தலில் அவர் பெற்ற அபார வெற்றியை தொடர்ந்து (அத்தேர்தலில் ஐ.தே.க. 8 ஆசனங்களை மாத்திரம் கைப்பற்றியது) இஸ்ரவேல் தூதுவராலயத்தை மூடினார். இது முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு ஸ்ரீமாவே கொடுத்த கௌரவமாக அமைந்தது.

இஸ்ரவேலுக்கு எதிரான கல்முனைக் கூட்டம்பெரும் வெற்றியில் முடிந்தது. இவ்வெற்றிக்கு காரணமாக அமைந்தவர் சகோதரர் அஷ்ர.ப் அவர்களாகும். அவர் இதனை சிறப்பாக செய்ய பெரும்பாடுபட்டார். அன்று கல்முனையில் நடந்த ஊர்வலமும் அஷ்ர.பின் தலைமைத்துவ சிறப்பும் அவ்வேளை மக்களால் சிலாகித்துப் பேசப்பட்ட விடயங்களாகும். அஷ்ர.ப் அவர்கள் இது தொடர்பாக எழுதிய கவிதை ஒன்றை இங்கு எடுத்துக்கூறுவது பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்ஸாவைத் தீயிட்ட கரங்களெல்லாம்
அழிந்தால் தான் கண்களினைத் தூக்கம் சேரும்
இக்காலம் நாமெல்லாம் விழித்துக்கொண்டோம்
இனி யெம்மை சாடுபவர் சரம்பலாவார்
அக்காலம் தொட்டே நாம் பாதுகாத்த
அக்ஸாவும் நெருப்பினிலே எரியும் போது
கக்காத கனலையுமே கக்கும் நெஞ்சம்
காதுகளில் போர் முரசம் கேட்கும் நாளை
ஈட்டியின் முனைமீது வளர்ந்த நாங்கள்
இன்றேனோ கோழைகளாய் மாறிப்போனோம்?
பூட்டியே நாம் சுர்ஆனை இற்றை நாளும்
புதுக் கொள்கை தேடியதால் தாழ்ந்து போனோம்
தீட்டுவதால் சமானை நாளும் நாமும்
திறன்மிக்க வீரர்களாய் மாறிப்போவோம்
ஓட்டிடுவோம் யூதரினை பலஸ்தீன் விட்டும்
ஓதிடுவோம் அல்லாஹு அக்பரென்றே.

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

இது அக்கவிதையின் ஒரு பகுதியாகும். இதனை அன்று புதுமைக்குரல் பிரசுரித்திருந்தது.

(புதுமைக்குரல் இன்றைய நவமணி ஆசிரியர் எம்.பி.எம். அஸ்ஹர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மாதப்பத்திரிகையாகும். இதனைக் கொழும்பு மஜ்லிஸே இஸ்லாமி வெளியிட்டது.)

அஷ்ர.்ப் அந்த இளம் வயதில் இஸ்ரவேல் உலகளாவிய முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகச் செய்த அநியாயத்திற்காக கொதித்தெழுந்தமையும் அவரது பேனாவாலும், உழைப்பாலும் தமது கண்டனத்தை, ஆத்திரத்தை வெளிப்படுத்தியதையும் இதன்மூலம் எம்மால் அறிய முடிகிறது.

இவ்வேளையில் பதுளையில் நான் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அங்குள்ள முஸ்லிம்கள் ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து பெரும் கண்டன ஊர்வலமொன்றை நடத்தினர். ஜும்ஆ பள்ளிவாசலிலிருந்து சேனநாயக்க விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த ஊர்வலத்தினர் அம்மைதானத்தில் மாபெரும் கூட்டமொன்றை நடத்தினர். சகல சமயத் தலைவர்களும் உரையாற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூட்டத்திலும் ஊர்வலத்திலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் இனபேதமின்றி கலந்து கொண்டனர். இஸ்ரவேல் நலன்புரி நிலையம் மூடப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். இம்மைதானத்தில் அன்றைய இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சர் மோஷேடயானின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

இலங்கை முழுவதிலுமுள்ள முஸ்லிம்கள் தங்கள் நகரங்களில் மேற்கண்டவாறு தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னோடியாக அமைந்தது கல்முனைக் கூட்டத்தின் வெற்றியென்றால் அது மிகையாகாது.

## நட்புக்கு இலக்கணம்

அஷ்ர.ப் தன் நண்பர்களுக்கு உதவுவதில் ஆர்வம் உள்ளவர். அவர்களது முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை காட்டுவார். அவர்களது முன்னேற்றம் தனது முன்னேற்றம் போல கருதுவார். பெருமையென்ற ஒன்றை என்னவென்று தெரியாத காரணத்தினால் அவருக்கு நாடெங்கும் நண்பர்கள் நிறைந்து இருந்தார்கள். நான் அறபுக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது எனது நண்பர்களை அவரது கல்முனைக்குடி இல்லமான "பைத்துல் பறக்கத்திற்கு" (இது தற்போது சட்டத்தரணி நிஸாம் காரியப்பரின் இல்லம்) அழைத்துச் செல்வேன். அவர்களை வரவேற்பார்; உபசரிப்பார். கல்லூரியிலிருந்து வீடு வந்தால் அவரை சந்திக்கவில்லையென்றால் கோபிப்பார்.

அண்மையில் எனது வீட்டிற்கு எனது அறபுக் கல்லூரி நண்பர் ஒருவர் வந்தார். பொலநறுவையைச் சேர்ந்த மௌலவி எம்.ஐ.மாக்கான் மாக்காரை நான் 1968ல் அஷ்ர.ப்.பின் வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகவும் அவரோடு அன்று மட்டும் கதைத்துக் கொண்டிருந்த அந்த பற்று பாசத்தினால் பின்னாளில் அஷ்ர.ப் அரசியற் கட்சியை ஆரம்பித்தபோது அக்கட்சிக்கு தான் பல வகையில் பொலநறுவையில் உதவியதாகவும் அன்றைய சந்திப்பே தனது அளப்பெரிய பங்களிப்பிற்கு காரணம் என்றும் அவர் கூறினார்.

நட்பாகப்பழகி வாஞ்சையோடு பேசி பிறரின் உள்ளத்தை வெல்லும் அந்த உத்தம குணம் பெரியவர்களான பலரிடம் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ர.ப் சட்டக்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது கொள்ளுப்பிட்டியில் 25ம் இலக்க ஒழுங்கையில் 08ம் இலக்க வீட்டில் வாடகைக்கு தங்கியிருந்தார். அவருடன் கல்முனையைச் சேர்ந்த சகோ.ஏ.எல்.கே. தாஸிம் அஹ்மத், கெலிஓயாவைச்சேர்ந்த முஹாஜிரீன் (மர்ஹூம்) ஆகியோரும் தங்கியிருந்தனர்.

1971ம் ஆண்டு ஜூலை மாதம் மௌலவி ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சைக்காக கொழும்புக்கு வருமாறு அழைக்கப்பட்டேன். அஷ்ரப் வீடு வந்தபோது நேர்முகப்பரீட்சை பற்றிக்கூறவே கொழும்பில் தன் அறையை வந்தடையும் வழியை எனக்குக் கூறி கட்டாயம் வந்து சேருமாறு அழைத்து விட்டுச் சென்றார்.

கொழும்பு சென்றதும் மலே வீதியிலுள்ள கல்வி அமைச்சிற்கு எனக்குத் தனியாகப் போகத் தெரியாததால் தான் சட்டக்கல்லூரிக்குப்போகும் வழியில் அஷ்ர.ப் என்னை அமைச்சிற்கு அழைத்துச் சென்றார். நாங்கள் சற்று நேரத்தோடு கல்வி அமைச்சுக்குச் சென்றதால் அங்கு வேறுஆட்களைக் காணவில்லை. எவ்விடத்தில் பரீட்சை நடைபெறும் என்ற அறிவித்தல் கூட இருக்கவில்லை. தற்போது இராணுவத்தினர் இருக்கும் அன்றைய கல்வியமைச்சின் நீண்ட அக் கட்டடத்தில் அதிகாரியைத் தேடிச் சென்றார். மௌலவி நியமனத்திற்கு பொறுப்பான கல்வி அதிகாரி ஏ.எல்.எம். இஸ்மாயில் அவர்களிடம் சென்று "நீங்கள்தானா இந்த நேர்முகப்பரீட்சைக்கு பொறுப்பு" என்று கேட்க அவர் ஆம் என்றார். இந்த நீண்ட கட்டிடத்தில் எவ்விடத்தில் பரீட்சை என்று அறிவித்தல் வைக்காவிட்டால் எவ்வாறு இடத்தைக் கண்டுபிடிப்பது என்று கேட்க வாயடைத்துப்போன அதிகாரி தான் உடனடியாக அவ்வாறு செய்வதாக வாக்குறுதியளித்தார்.

என்னை நோக்கிய அஷ்ர.ப் இவ்விடத்தில் தான் நேர்முகப்பரீட்சை நடக்கும் எனக்கூறிவிட்டு முடிந்ததும் தான் வரும் வரை காத்திருக்குமாறும் எங்கும் போக வேண்டாம் என்றும் கூறிவிட்டுச் சென்றார்.

நேர்முகப்பரீட்சைக்கு வருகின்ற மௌலவிமார் அலைந்து திரியாமல் அறிவித்தல் போடுவதற்கு அவர் எடுத்த நடவடிக்கை ஒரு தலைவன் உருவாகிறான் என்பதை எதிர்வு கூறியது. அந்த நீண்ட கட்டிடத்தில் உரிய அதிகாரியை அவர்தேடி அலைந்த பாங்கும் அவரைக் கண்டதும் கேட்ட வினாக்களும் இன்றும் எனது நினைவில் நிழலாடுகிறது. பிறரின் உரிமைக்காக வாதாடுகின்ற பண்பு அவரது தொழிலினால் வந்த ஒன்று அல்ல. அது அவருடன் ஒட்டிப்பிறந்த பண்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்முகப்பரீட்சை முடிந்தவுடன் கல்வி அமைச்சுக்கு வந்து என்னை மீண்டும் கொள்ளுப்பிட்டிக்கு அழைத்துச் சென்று நேர்முகப்பரீட்சையில் நடந்தவற்றை யெல்லாம் கேட்டுவிட்டு எனது மௌலவி. அல்-ஆலீம் தராதரப்பத்திரங்களை வாங்கிப் பார்த்தார்.

உடனே அவர் தற்போது கொழும்பில் ஒரு புதிய மெஷின் வந்துள்ளது. எமது தராதரப்பத்திரத்தை அதே போன்று பிரதி எடுக்கலாம். அவ்வாறு எடுப்போமா? என்று கேட்டார். போட்டோக் கொப்பி இயந்திரம் பற்றிய அறிவே இல்லாத அக்கால கட்டத்தில் அதற்கு சம்மதம் தெரிவித்தேன். வாருங்கள் என்று என்னை அழைத்த அவர் காலி வீதியாக கோல்பேஸ் நோக்கி நடந்தார். நானும் எனது தராதரப்பத்திரச் சுருளைக் கையில் எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் பின்தொடர்ந்தேன்.

கோல்பேஸில் உள்ள மாக்கான் மாக்கார் பில்டிங்குக்கு முன்னால் என்னை நிற்கச் சொல்லிவிட்டு உள்ளே சென்றவர் அங்கு பலரைத்தேடி அலைந்தார். எனது தராதரப் பத்திரம் போல் இன்னொரு பத்திரம் உருவாகும் அதிசயத்தைப் பார்க்கப்போகும் ஆவலில் நான் காத்துக்கொண்டிருந்தேன். சில நிமிடங்களில் அஷ்ரப் வந்து அந்த மெஷின் பழுதாகி விட்டதாம். தற்போது எடுக்க இயலாதாம் என்று கூறினார். எனக்கு பெரும் ஏமாற்றம்

மீண்டும் கொள்ளுப்பிட்டி நோக்கி நடையைக் கட்டினார். பஸ்ஸில் ஏறுவோம் என்றேன். இந்தா இருக்கும் இடத்துக்கு பஸ்ஸுக்கு காத்துக்கொண்டிருப்பதற் கிடையில் போய்விடலாம் என்று கூறி நடக்கத் தொடங்கினார். கோல்பேஸிலிருந்து கொள்ளுப்பிட்டி தற்போதைய லிபர்டி பிளாஸாவுக்குப் பக்கத்திலிருந்த அவரது "றூமை" நோக்கி மீண்டும் நடை.

எனது மௌலவி மற்றும் அல்-ஆலிம் தராதரப்பத்திரங்களை பார்த்த அவர் அடைந்த பூரிப்பை என்னால் இன்னும் மறக்க முடியாது. மௌலவி என்ற தராதரப் பத்திரத்தை உயர்வான ஒரு சான்றிதழாக அவர் கருதியதைக் கவனிக்க முடிந்தது.

தராதரப்பத்திரங்களை வாசித்த பின் அவர் என்னிடத்தில் எனக்குள் ஒரு குழப்பம். உங்களை நான் மௌலவி என்று அழைப்பதா அல்லது ஆதம்பாவா என்று அழைப்பதா என்பதுதான். ஆதம்பாவா என அழைக்கும் போது ஒரு மௌலவியை அவ்வாறு அழைப்பதா என்று தோன்றுகிறது. மௌலவி என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கும் போது. நம்மைவிட இளைய ஒருவரை அப்படி அழைப்பதா என்றும் எண்ணம் வருகிறது என்றார்.

இரவு எட்டு மணிக்கு மட்டக்களப்புக்கு புகையிரத சேவை இருந்தது. கிழக்கு மாகாண மக்களின் கொழும்பு - மட்டக்களப்பு பிரயாணத் தேவையை அச்சேவையே நிறைவேற்றிக் கொண்டிருந்தது. இரவு எட்டு மணிக்கு கொழும்புக் கோட்டையில் இருந்து ரயிலில் ஏறினால் அதிகாலை ஐந்து மணிக்கு மட்டு நகரை அடையும். எனவே அந்த ரயிலில் ஏற்றுவதற்காக அஷ்ரப் கோட்டைப் புகையிரத நிலையம் வந்து ஏற்றி விட்டுச் சென்றார்.

# எனது திருமணத்திற்காக

## 1975ம் ஆண்டு

கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்து கொண்டிருந்தேன். சகோ. அஷ்ர.ப் அவ்வேளை அரச சட்டத்தரணியாகக் கொழும்பில் தொழில் புரிந்துகொண்டிருந்தார். இவ்வேளை எனது திருமணம் ஏற்பாடாகியது. திருமணத்துக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காக கொழும்பு சென்றேன். நண்பர் அஷ்ரபுக்குத் தகவல் அனுப்பியதும் புறக்கோட்டை மெயின் வீதியில் ஓரிடத்தில் நிற்குமாறு கூறினார். பின்னர் அவ்விடம் வந்து சேர்ந்து கொண்டார். இருவருமாக எனக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தோம்.

அடுத்ததாக நாம் வாங்க வேண்டியது கழுத்துப்பட்டி (Tie). அஷ்ரப் என்னிடம் தற்போது புதிதாக "Broad Tie" என்று ஒன்று வந்துள்ளது. அது கட்டுவதற்கும் இலகு. அதை வாங்குவோமா? என்றார். சரி என்றேன். பிரதான வீதியின் ஒவ்வொரு கடை கடையாக ஏறி இறங்கினார். அவர் தேடிய அந்தப் புது வகை "டை" கடைகளில் காணப்படவில்லை. ஒன்றில் இறங்கினால் முடிவு காண மட்டும் விடாதவரல்லவா அவர். முயற்சியைத் தொடர்ந்தார். நான் பின்னால் இழுபட்டுக் கொண்டிருந்தேன். எத்தனையோ கடைகள் ஏறி இறங்கியதும் ஒரு கடையில் அது இருந்தது. அதனை எடுத்துப் பார்த்தார். விலை? கடைக்காரர் சொன்னார், ரூபா 60/=.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நேரமும் தேடி அலைந்தது கிடைத்துவிட்டதே என்ற சந்தோஷம் எனக்கு. ஏனெனில் அது கிடைக்கவில்லை என்றால் இன்னமும் ஏறி இறங்க வேண்டுமே! ஆனால் அஷ்ரப் அதன் விலையை மீண்டும் கேட்டுவிட்டு வேண்டாம் என்று கூறி கடையை விட்டு இறங்கினார். நான் வாங்குவோமே என்றேன். இல்லை, இவ்வளவு காசைக் கொடுத்து அதை வாங்குவதா? நீங்கள் திருமணத்தன்று மாத்திரம் தானே அணிவீர்கள். ஒரு நாளைக்காக இவ்வளவு காசைக் கொடுப்பதா என்ற அவர் முன்பு "Broad Tie" க்காக ஏறி இறங்கிய கடைகளில் மீண்டும் ஏறி சாதாரண "டை"யைத் தேடி பதினைந்து ரூபாவுக்கு ஒன்றை வாங்கித் தந்தார்.

வாசகர்களுக்கு இது ஒரு சாதாரண விடயமாகத் தெரியலாம்.

தன்னை நம்பி வந்த ஒரு நண்பனுக்கு அதிகபட்ச உதவி ஒத்தாசை புரியும் அஷ்ரபின் வெளிப்பாடுதான் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்பியதாகும். எப்படியோ ஒரு பிரச்சினையை முடித்து விடுவோம் என்றில்லாமல் எதையும் சரியாகச் செய்ய வேண்டும் என்ற அவரது மனப்பாங்கு இங்கு வெளியாகின்றதல்லவா! உதவிகளை ஒழுங்காகச் செய்து முடிப்பவர் அவர்.

எனது திருமணம் 27.06.1975 வெள்ளிக்கிழமை என்று தீர்மானிக்கபட்டிருந்தது. அவ்வேளை எனக்கு வயது 23.

எம்மைப் போன்றவர்கள் இளம் வயதில் திருமணம் முடிப்பது மிகவும் நல்லது. ஏனெனில் அது ஒழுக்க வாழ்க்கைக்கு முக்கியமானது என்ற அஷ்ரப் தங்களின் திருமண தினத்தன்று தவிர்க்க முடியாத வழக்கொன்று கொழும்பில் உள்ளது. நினைத்த மாதிரி லீவு எடுக்கவும் முடியாத தொழில் என்னுடையது. உங்கள் திருமண தினத்தை சனி அல்லது ஞாயிறாக மாற்ற முடியாதா? என்று கேட்டார். ஏற்கனவே அழைப்பிதழ் அச்சிட்டு முடிந்துள்ளதால் மாற்றுவது கடினம் என்றேன். பின்னர் அவர் ஊர் வந்ததும் தனது சகோதரிகள் சகிதம் எனது வீடு வந்தார். தான் திருமண வீடுகளுக்கு அன்பளிப்புகள் கொண்டு போவதில்லை என்று அடிக்கடி கூறும் அவர் என்னிடம் பெரும் சுமையுடன் வந்ததும் என்ன கொள்கையை மாற்றி விட்டீர்களா என்றேன். இல்லை முடீதா விடவில்லை என்றார்.

எனது திருமணத்தன்று அவர் எனக்கு அனுப்பிய வாழ்த்துத் தந்தி இன்னமும் என் கைவசம் இருக்கிறது. ஆனால் அவர் எனக்கு எழுதிய எத்தனையோ கடிதங்கள் ஒன்றுமே என் கைவசம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரப் அமைச்சராக இருந்தபோது என்னைச் சந்தித்த அவரது விடுதி நண்பனான டாக்டர் ஏ.எல்.கே தாஸிம் தங்களுக்கு அஷ்ரப் எழுதிய கடிதங்கள் கைவசம் இருக்கிறதா எனக் கேட்டார். ஒரே றூமில் இருந்த தாஸிமுக்கு நான் அவருக்கு எழுதுவதும் அவர் எனக்கு எழுதுவதும் நன்கு தெரியும். தற்போது கைவசம் ஒன்றும் இல்லை என்றேன். அது இருந்தால் இன்று அதன் பெறுமதி வேறு என்றார்.

## மௌலவி பட்டமளிப்பு விழாவும் கல்லூரி நினைவுகளும்

அட்டாளைச் சேனையிலுள்ள கிழக்கிலங்கை அறபுக்கல்லூரியில் பயின்ற எமக்கு மௌலவிப் பட்டமளிப்புவிழா 29.05.1969 ல் நடைபெற்றது. அவ்விழாவில் பிரதம அதிதி அவ்வேளை உதவி சமூக சேவைகள் அமைச்சராகவிருந்த நிந்தவூர் எம்.பி. M.M. முஸ்தபா. பிரதம பேச்சாளர் முன்னாள் மாவட்ட நீதிபதி எம்.ஏ.எம் ஹுசைன். அஷ்ரப் அவ்விழாவுக்கு தனது மச்சான் நீதவானுடன் வந்தார். கூடவே தினபதி பத்திரிகையொன்றும் கையில். அன்று தினபதி எமது பட்டமளிப்பு விழாவையொட்டி விசேட மலரொன்றை வெளியிட்டிருந்தது. அதில் பட்டம் பெறுவோரில் ஒருவரான சம்மாந்துறை M.I. முஹம்மத் தம்பியின் கவிதையொன்றும் இடம்பெற்றிருந்தது.

அஷ்ரப் விழாவுக்கு வருவதைக்கண்டு நாம் அவரை வரவேற்றவேளை கையிலிருந்த தினபதியை எடுத்து விழா மலரையும் எமது பெயர்கள் இடம் பெற்றிருப்பதையும் கவிதையையும் காட்டி அதில் உள்ள எழுத்துப் பிழைகளைச் சுட்டிக் காட்டினார். எவ்வளவோ சரிகள் இருக்கும்போது சிறு பிழைகளை நன்றாகக் கண்டு பிடிக்கிறீர்களே என நாம் கூறியதும் பத்திரிகை அப்பிழையை விட்டிருக்கக் கூடாதென்றார்.

20671

எமது விழா மிகச் சிறப்பாக நடந்தது. தனது நண்பர்கள் மௌலவிப் பட்டம் பெறும்போது தான் சமூகமளித்தது பெருமகிழ்ச்சியைத் தருகிறது என்றார்.

மௌலவிப் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து என்னை எனது ஊருக்கு அழைத்துச் செல்ல எனது உறவினர்கள் பலகார்களை வாடகைக்கமர்த்தி அட்டாளைச்சேனைக்கு கொண்டு வந்திருந்தார்கள். அதனைத் தொடர்ந்து வந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில் எனது கன்னிப் பிரசங்கத்தை நிகழ்த்தினேன். அதனைத் தொடர்ந்து மரைக்காயர் சபையினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலமாக்களும் பொதுமக்களும் உறவினர்களும் என்னை எனது வீட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அவ்வேளை எனக்கு வயது பதினேழுதான்.

அதன்பின் என்னைச் சந்தித்த அஷ்ரப் மௌலவிப்பட்டம் பெற்று விட்டோமென்று இருக்காமல் தொடர்ந்து படியுங்கள். உங்களை ஒரு பட்டதாரியாகப் பார்க்க ஆசைப்படுகிறேன் என்றார்.

சில வாரங்களில் பதுளையில் உள்ள ஒரு மத்ரசாவுக்கு நான் ஆசிரியராகச் செல்ல எனக்கும் அஷ்ரபுக்குமிடையே கடிதங்கள் தொடர்ந்தன. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அவரது கடிதம் என்னை அடையும். அவ்வேளை தபால் சேவை மிகவும் சிறந்த சேவையை வழங்கிக் கொண்டிருந்தது.

பின்னர் சில மாதங்களில் அவர் கொழும்புக்குச் சென்று விட்டார். ஒருநாள் என்னிடம் பாகிஸ்தான் தூதுவராலயத்தில் தனக்குத் தெரிந்த ஓர் அதிகாரி உள்ளார். அவரின் மூலம் பாகிஸ்தான் பல்கலைக்கழகத்தில் "ஸ்கொலர்ஷிப்" எடுக்க முடியும். அவ்வாறு ஒரு முயற்சியைச் செய்வோமா என்று கேட்டார்.

மிகவும் மகிழ்ச்சியுடன் அதனைச் செய்து தருமாறு கேட்டு சில நாட்கள் கழியவில்லை.

நான் பயின்ற கல்லூரியின் தலைவர் பஸீல் ஏ. மஜீத் தன்னை தனது கல்முனை வீட்டில் சந்திக்குமாறு ஆளொன்றை அனுப்பினார்.

கல்முனை நகர ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் கல்முனை பாத்திமாக் கல்லூரிக்கு அருகில் இருந்த ஜனாப் பஸீல் ஏ.மஜீத் அவர்களின் வீட்டுக்கு நான் சென்றதும் கல்லூரியில் (கிழக்கிலங்கை அரபுக்கல்லூரியில்) தற்போது கடுமையான ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தகுதியான ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்றும் அங்கே சென்று கற்பிக்குமாறும் கேட்டதுடன் இது உனக்குக் கிடைக்கும் பெரும் கௌரவம் என்றும் கூறினார்.

1969 ல் நான் வெளியாகிய போது அதிபராக இருந்த அட்டாளைச்சேனை E.L.M. இஸ்மாயில் ஹஸரத் காலமாகியிருந்தார். இவ்வேளை நிந்தவூரைச் சேர்ந்த S.L.M. இஸ்மாயில் ஹஸரத் அதிபராகக் கடமை புரிந்து கொண்டிருந்தார். கல்லூரியின் பரிபாலன சபைச் செயலாளராகவிருந்த P.M. உமரலியார் ஹஸரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் புனித ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தார். அவ்வேளை ஹஜ்ஜுக்கு ஒருவர் சென்றால் திரும்பி வர பல மாதங்கள் எடுக்கும். அவர் வரும் வரை கல்லூரியின் செயலாளர் பதவியை அவரது மருமகனும் நான் மிகவும் நேசிக்கும் எனது ஆசிரியருமான மௌலவி ஏ.எல்.எம். ஹாஷிம் வகித்துக் கொண்டிருந்தார். கல்லூரியின் அதிபர் மட்டுமே அவ்வேளை பணியில்! அவ்வளவு ஆசிரியர் தட்டுப்பாடு.

தலைவர் பஸீல் மிகவும் அன்பாக அழைத்து இப்பணியை ஏற்குமாறு கூறும்போது மறுத்தால் ஆத்திரப்படுவார். 18 வயது கூட பூர்த்தியாகாத நிலையில் இவ்வாறான பாரிய பொறுப்புக்களைச் சுமப்பது என்பது என்னைப் பொறுத்தவரை விருப்பமில்லாத ஒரு விடயம். பொறியில் அகப்பட்ட எலிபோல் திணறினேன். அஷ்ரபின் பெயரைக் கூறினால் தப்பலாம் என நினைத்து அஷ்ரப் எனக்கு பாகிஸ்தான் ஸ்கொலசிப் பெற்றுத் தர முயற்சி செய்து கொண்டிருக்கிறார். எனவே இவ்வேளை ஆசிரியர் பொறுப்பை எடுப்பது சிரமம் என்று கூறியதுதான் தாமதம்.

எரிந்து வீழ்ந்தார் தலைவர் பஸீல். என்னைவிட அஷ்ரபுக்கு அவ்வளவு ஏச்சு: தப்ப முடியாது என்பதைத் தீர்மானித்து விட்டேன். பயந்தால் ஓர் ஆசிரியரை நீங்கள் தேடி எடுக்கும் வரை பணி புரிகின்றேன் என்றேன்.

அவ்விடத்திலேயே கடிதம் எழுதி நாளை காலையில் கல்லூரி செல்ல வேண்டுமெனப் பணித்தார்.

காலையில் சென்று கடிதத்தை அதிபரிடம் கொடுத்து கடமையில் சேர்ந்தேன்.

அவ்வேளை அக்கரைப்பற்று மௌலவி S.L.M. ஹனீபா (மதனி) A.B. ஷரிப்தீன் (கல்வி அதிகாரி) கிண்ணியா P.A. பரீத் (மர்ஹூம்) ஆகியோர் இறுதி வகுப்பு மாணவர்கள் கலாநிதி தீன் முஹம்மத், கல்முனை Z.A.M. நதீர் மௌலவி S.H.M. அபுல்ஹசன் (மதனி) போன்றோர் அங்கு மாணவர்களாகப் பயின்று கொண்டிருந்தனர்.

அதிபர் இரவுவேளைகளில் வீடு செல்வதால் சில மாணவர்களின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களை நன்கு கவனிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் எனது நண்பர்கள் ஏன் இந்தப் பிரச்சினையில் மாட்டினேன் என்று மேலும் கவலை.

அட்டாளைச்சேனை அறபுக்கல்லூரியில் பயின்று வெளியேறிய மாணவர்களில் முதன்முதலாக அங்கு ஆசிரியராக நியமிக்கப்பட்ட பெருமை எனக்கே என்றாலும் அந்நியமனம் அந்த வயதில் எனக்குத் தாங்க முடியாத பழுவாக இருந்தது.

எனவே அஷ்ரபுக்கு விடயத்தை எழுதினேன். அவருக்கு நான் ஷர்க்கிய்யாவில் ஆசிரியராகப் பணிபுரிவது பெருமை அளிக்கிறது என்றும் பாகிஸ்தான் சரிவரும் வரை தொடர்ந்து பணி புரியுமாறும் கேட்டார்.

ஆனால் ஒரு தவணையோடு நான் முடியாது என்று நின்றுவிட்டேன்.

1987 ம் ஆண்டு நான் மதீனாப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து வந்து ஒரு வருடத்தின் பின் கல்லூரித் தலைவர் பஸீல் ஏ.மஜீத் அவர்களும் பரிபாலன சபையைச் சேர்ந்த மௌலவி ஏ.எல்.எம். ஹாஷிம் யூ.எல்.ஏ வாஹித் ஆகியோர்களும் எனது வீடு வந்து என்னைக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பெடுக்குமாறு அழைத்தார்கள். அவ்வேளை அதிபராக இருந்த எனது நண்பர் மௌலவி S.H.M. அபுல் ஹசன் (மதனி) இராஜினாமாச் செய்திருந்தார். ஷர்கிய்யாவின் மாணவர்களில் முதலில் அதிபராக இருந்த பெருமை அவரையே சாரும்.

அவரைத் தொடர்ந்து சுமார் நான்கு வருடங்கள் ஷர்க்கிய்யாவின் அதிபராக நான் பணிபுரிந்தேன்.

இதன் பரிபாலனசபை உறுப்பினர்களில் ஒருவராக ஒரு காலத்தில் அஷ்ரபும் பணிபுரிந்தார்.

அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கியது முதல் இன்றுவரை அட்டாளைச்சேனை முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாகவே இருந்து வருகிறது.

1989 தேர்தல் பிரச்சாரத்துக்கு அஷ்ரப் அட்டாளைச்சேனைக்கு வந்தார். நான் அங்கு செல்லவில்லை. ஆனால் அவர் தமது உரையின்போது முஸ்லிம்களுக்கு ஒரு கட்சி வேண்டுமா! வேண்டாமா! எனது பேச்சை நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்காவிட்டாலும் உங்கள் அறபுக்கல்லூரி அதிபரிடம் சென்று அவர் என்ன கூறுகின்றார் என்பதைக் கேட்டு விட்டாவது முடிவெடுங்கள் என்று பேசியதாக என்னிடம் அங்கு சென்றோர் கூறினர்.

நான் ஷர்க்கிய்யாவில் அதிபராகக் கடமை புரிவதைக் கேள்வியுற்று அவர் பெருமகிழ்ச்சியடைந்ததாக என்னைச் சந்தித்தவேளை ஒருமுறை கூறினார்.

## சில நினைவுகள்

**ஒரு மாலைகாலம் :** அஷ்ரப் ரெம்பக் குஷியாக இருந்தார். அதாவது மகிழ்ச்சிப் பிரவாகத்தின் மிக உச்சத்தில் அவர்,

நடந்தது இதுதான்!

அஷ்ரப் இருந்த வீட்டுக்குப் பக்கத்தில் குளமும் வயலும், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வயலும் குளமும் நீரால் சங்கமமாகி இருந்தன. இவரது வீட்டைத் தொட்டதுபோல் வெள்ளம் கிடந்தது.

வள்ளமொன்றை எடுத்துக்கொண்டு அவர் தனியாக நீண்ட தூரம் போய் வந்திருந்தார். தூண்டல் மூலம் சில மீன்களையும் அப்பயணத்தில் பிடித்திருந்தார்.

மீண்டும் அப்பயணத்தைத் தொடர ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். இப்பயணத்தின் நோக்கம் வலைவீசி மீன் பிடிப்பது. எனவே வலையொன்றை ஒருவரிடம் கேட்டு அனுப்பியிருந்தார். அது வரும் வரையும் அவர் காத்திருந்தார். வலை வீசும் தொழில்நுட்பத்தைப் பற்றி விபரித்துக் கொண்டும் இருந்தார். என்னையும் வருமாறு அழைத்தார். நான் மறுத்து விட்டேன்.

பின்னர் நான் அவரைச் சந்தித்தபோது அன்றைய நாளின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இது ஒரு சிறிய சம்பவம்தான். ஆனால் இங்கு வெளிப்படுவது அஷ்ரபின் அசாதாரண துணிச்சல் ஆகும். தனக்குப் பரிச்சியமில்லாத ஓர் ஆபத்தான விடயத்தை துணிச்சலாக அவர் எதிர்கொண்டார். வள்ளமொன்றை வெள்ளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சென்று மீண்டும் அதனை தனது இலக்குநோக்கிக் கொண்டு வருவது என்பது மிகுந்த அனுபவசாலிகள் மேற்கொள்ளும் ஒரு பணியாகும்.

ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்து அதனைத் தன் இலக்கு நோக்கி வெற்றி கண்ட அவரது துணிச்சலைத்தான் இச் சம்பவம் எமக்குக் காட்டுகிறது.

## தந்தையின் பார்வையில்

கேட் முதலியார் M.S. காரியப்பர் கல்முனை நாடாளுமன்ற உறுப்பினராக, பிரதி அமைச்சராக, அமைச்சராக இருந்தவர். கல்முனை சாஹிராவுக்குப் பக்கத்தில் உள்ள கடற்கரைப்பகுதியில் அவர் தமது அந்திமக் காலத்தில் வாழ்ந்தார். மாலை வேளைகளில் அவர் தமது மக்களுடன் காரில் கல்முனைப் பக்கம் சென்று திரும்புவது வழக்கம்.

1969 டிசம்பர் ஆக இருக்கலாம். G.C.E O/L பரீட்சை நடைபெற்ற காலம் அது. நானும் அஷ்ரபும் அவரது வீட்டில் இருந்து பரீட்சைக்காக சில விடயங்களைக் கலந்துரையாடிக் கொண்டிருந்தோம். அப்பரீட்சைக்கு நானும் அஷ்ரபும் சேர்ந்து படித்தோம்.

இவ்வேளை முதலியார் காரியப்பரின் கார் அஷ்ரபின் "கேற்" அடியே வந்து நின்றது. ஹுசைன் விதானை சென்று அவரை அழைத்துக் கொண்டு வந்தார். நாங்கள் இருவரும் எழுந்து விறாந்தைப் பக்கம் போகும்போது காரியப்பர் விதானையிடம் மகன் என்ன செய்கிறார் என்று கேட்க சோதனைகள்தான் எழுதி எழுதிக் கொண்டு இருக்கார் என்று வருத்தம் கலந்த தொனியில் கூறினார்.

அப்பொழுது காரியப்பர் மிக ஆறுதலளிக்கும் தொனியில் அப்படித்தான் பிள்ளைகள் இருப்பார்கள். நாளைக்கு அதெல்லாம் சரியாகிப்போய் விடும் என்று கூறினார்.

இந்த நாட்டு முஸ்லிம்களின் தேசியத் தலைவர்தான் அந்த வீட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி அவ்விரு தலைவர்கட்கும் அன்று தெரிந்திருக்க நியாயமில்லைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக கட்டணம்

சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்த காலம் முதல் கொழும்பிலேயே அஷ்ரப் தொழில் பார்த்து வந்தார். கல்முனைக்கு வந்து தொழில் செய்யுங்கள் என அழைத்தபோது தற்போது ஊர் வந்தால் படித்ததெல்லாம் மறந்து விடும். கொழும்பிலேயிருந்தால்தான் புதுப்புது வழக்குகள் கிடைக்கும். அனுபவம் நிறையவரும் என்றார்; பின்னர் 1977ம் ஆண்டு தேர்தல் காலத்திலேயே கல்முனைக்கு வந்து சட்டத்தரணி சம்சுதீனின் தேர்தல் வேலையைக் கவனித்துக் கொண்டு கல்முனை நீதிமன்றத்துக்கும் வழக்குகளுக்காகச் சென்றார். அஷ்ரப் இங்கு சட்டத்தொழில் புரிய வந்ததுடன் அவருக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது. மட்டக்களப்பு, கல்முனை நீதிமன்றங்களில் உள்ள பெரும்பாலான வழக்குகள் இவரது வசமாகின.

இவ்வேளை அஷ்ரப் அதிக கட்டணம் அறவிடுகிறார் என்ற ஒருகுற்றச் சாட்டும் இருந்தது. ஏனைய சட்டத்தரணிகள் ஒரு வழக்குக்கு ரூபா 100/= 200/= என்று, பெறும் போது இவர் குறைந்தது 500/= வாங்குகிறார். இது நியாயமா? என்றெல்லாம் கேள்விகள் பிறந்தன. நான் அவரிடம் இதனை ஒரு முறை கேட்டு விட்டேன். அப்போது அவர் என்னிடம் கூறியபதில் "ஒரு சட்டத்தரணி வாங்குகின்ற பணத்தொகையைக் கொண்டு அவனது தகுதியை தீர்மானிக்கின்ற காலம் இது. நான் 100 பெற்றால் நூறு ரூபா சட்டத்தரணி, 500 பெற்றால் அத்தொகைக்குரிய சட்டத்தரணி. எனவேதான் அவ்வாறு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் ஏழைகளைப் பொறுத்தவரை நீங்கள் என்னிடம் கூட்டிவாருங்கள். அவர்களிடம் ஒரு சதமும் வாங்காமல் வழக்குப் பேசிக்கொடுக்கிறேன். எத்தனை ஏழைகள் என்றாலும் பரவாயில்லை என்று கூறினார்.

தனது சட்டத்தரணி பற்றி மக்களுக்கு நம்பிக்கை வேண்டும். அவரிடத்திலே இவ்வழக்கை ஒப்படைத்தால் அவர் வென்று தருவார் என்ற நம்பிக்கை வந்தால்தான் மக்கள் சட்டத்தரணியிடம் வருவார்கள். எனவே இவர் அதிக கட்டணம் பெற்ற போதும் அவரிடத்திலேயே அதிகம் வாடிக்கையாளர்கள் வந்து குவிந்து கொண்டிருந்தனர்.

மதீனாப் பல்கலைக்ககழகத்தில் பயின்று கொண்டிருந்தபோது கல்முனை நீதி மன்றப் பக்கம் ஏதோ ஒருவேலையாகப் போன வேளை அஷ்ரபை அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டேன். தான் நாடுவந்தது பற்றி விசாரித்துவிட்டு நாளை சனிக்கிழமை வீட்டிலிருப்பேன். கட்டாயம் வாருங்கள் என்றார். எனக்கு அன்றையநாள் போகக்கிடைக்கவில்லை. மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அவர்வீடு சென்றேன். அங்கே ஏகப்பட்ட சனக்கூட்டம். பெரும்தொகையானோர் மட்டக்களப்பில் இருந்து வந்திருந்த தமிழ்ச் சகோதரர்கள்! இவரது அதிக வாடிக்கையாளர்களும் அவர்களே!

என்னைக் கண்டதும் என்னை வரவேற்று உங்களை நான் நேற்று சனிக்கிழமை வரச்சொன்னேன். அதிகமான விடயங்களை பேசவேண்டுமென்று! சனி நான் வழக்குவேலைகள் செய்வதில்லை. இன்று எனக்கு முழுவேலை. பரவாயில்லை என்றார்.

என்னையும் அவருடன் இருக்கச் செய்து தனது வாடிக்கையர்களைச் சந்தித்தார். பல வழக்குகள் அன்று தயார் பண்ணப்பட்டன. அவ்வளவும் அவர் வாயால் சொல்ல மற்றொருவர் டைப் செய்தார்.

தாளெடுத்துப் பேனா எடுத்துச் செய்யும் வேலையை அவர் மளமளவென்று வாயால் செய்து முடித்தார். அன்று பகல் அவருடன் உணவுண்டபின் பல விடயங்களைக் கலந்துரையாடினோம். சில தினங்களில் தனது மனைவி சகிதம் எனது வீடுவந்த அவர் இரவுணவை எம்முடனேயே உட்கொண்டார். பின்னர் நான் மதீனா சென்று நாடு திரும்பியவேளை அஷ்ரப் கல்முனையை விட்டு வெளியேறியிருந்தார்.

அவரது சட்ட வல்லமையை மக்கள் நம்பினர். அதற்காக அவருக்கு அதிகப் பணம் கொடுத்தனர். இவ்வாறான தொழிலும் வருமானமும் அவரது பாசையில் சொல்லப்போனால் பூத்துக்குலுங்கிய காலத்தில்தான் அவர் கல்முனையை விட்டு வெளியேறவேண்டியிருந்தது. சட்டத்தொழில் மூலம் நிறையச் சம்பாதிக்கும் திறன் இருந்தும் அவற்றையெல்லாம் விட்டு விட்டு அரசியலுக்குள் புகுந்து தன்னை எரித்து தன் சமூகத்துக்கு ஒளி கொடுத்தார்.

சாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷரீஆச் சட்டம்

இந்தியாவின் உயர்நீதிமன்றமொன்று ஷரீஆ சட்டத்துக்கெதிராக வழங்கிய தீர்ப்பொன்று இந்திய முஸ்லீம்களை ஆத்திரமடையச் செய்தது. இத்தீர்ப்பு ஆட்சியாளர்களுக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது. அத்தீர்ப்பு இதுதான்: மூன்று தலாக்குகளும் கூறி விவாக விடுதலையளிக்கப்பட்ட பெண்ணுக்கு அவள் வேறு திருமணம் செய்யும் வரை விவாக விடுதலை வழங்கிய கணவன் ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்பதே அத்தீர்ப்பு.

இத்தீர்ப்பின் பின் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இந்திய முஸ்லிம்களால் மேற் கொள்ளப்பட்டன. எனவே அரசாங்கம் இத்தீர்ப்பிலிருந்து பின்வாங்கி நீதிமன்றத்தின் தீர்ப்பு பிழையானது என்று பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றும் அளவுக்கு விடயம் பூதாகரமானது.

இந்நிலையில் முஸ்லிம் சமய விவகாரத்திணைக் களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் M.H. முகம்மத் இலங்கையில் நடைமுறையிலுள்ள ஷரீஆச் சட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு குழுவை நியமித்தார். இஸ்லாமிய சட்டங்களை மாற்றவேண்டும் என்று கோஷமெழுப்பிக் கொண்டிருந்த சிலரும் அக்குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். இது எம் நாட்டில் இஸ்லாமிய ஆர்வலர்கள் மீது அச்சத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில்தான்; மேற்படி குழுவின் நோக்கங்களுக்கெதிராக அஷ்ரப் சீறி எழுந்தார். மக்கள் உணர்வுகளைத் தட்டி எழுப்பினார். தினகரன் பத்திரிகையில் தொடர்கட்டுரையொன்றையே அதற்கெதிராக எழுதினார். நாட்டில் பெரும் பரபரப்பை இவ்விடயம் ஏற்படுத்தியது.

இந்நிலையில் கல்முனை நகர ஜும்ஆப் பள்ளிவாசலில் 'சுபீட்சம் தரும் ஷரீஆச் சட்டம்' எனும் தலைப்பில் குத்பாப் பேருரையொன்றை நிகழ்த்தினேன். (அந்த எனது பிரசங்கம் எனது 'சாந்திவழி' என்ற குத்பாப் பேருரை நூலில் முழுமையாக இடம்பெற்றுள்ளது) அவ்வேளை எனது குத்பாப்பிரசங்கம் பலராலும் சிலாகித்துப் பேசப்பட்டது. மனிதனைப் படைத்த அல்லாஹ்வால் மனிதனுக்கென உருவாக்கப்பட்ட ஷரீஆச் சட்டமே நிலையானது என்பதனை பல்வேறு ஆதாரங்களுடன் அதில் விளக்கியிருந்தேன்.

தனது உறவினர் ஒருவரின் மரணத்திற்கு கல்முனை வந்திருந்த அஷ்ரப் எனது 'குத்பா' வைப் பற்றிக் கேள்விப் பட்டதாகவும் அது எழுத்தில் உள்ளதா என்றும் கேட்டுவிட்டுச் சொன்னார். தாங்கள் நிகழ்த்தும் குத்பாப் பிரசங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல தாங்கள் கூட்டங்களில் பேசும் அத்தனை பேச்சுக்களையும் எழுதிப் பேசுங்கள். அது மிகவும் முக்கியமானது என்றார். இந்த வேண்டுகோளை ஏற்று எனது குத்பாப் பிரசங்கங்களை எழுதியே நிகழ்த்தினேன். ஒருவருடம் எழுதி வாசித்த வழக்கத்தைச் சிரமத்தினால் தவிர்த்துக் கொண்டேன். அஷ்ரபின் அந்த வேண்டுகோளை நிறைவேற்றியதால் எழுதி நிகழ்த்திய எனது பிரசங்கங்களை நான் அட்டாளைச் சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி அதிபராக இருந்தபோது எனது மாணவர்கள் அதனைப் பிரசுரித்தார்கள். "சாந்திவழி" என்ற அந்த நூலின் வெளியீட்டு விழாவில் அஷ்ரபே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அவரின் வேண்டுகோளை நான் தொடர்ந்து நிறைவேற்றியிருந்தால் இன்று எத்தனையோ குத்பாப்பிரசங்கத்தொகுப்புக்களை என்னால் வெளியிட்டிருக்க முடியும்.

## விரிவுரையாளர் அஷ்ரப்

இலங்கையில் திறந்த பல்கலைக்கழகம் என்ற ஓர் அமைப்பு 1975ம் ஆண்டளவில் அறிமுகமானது. அது தொழில்நுட்பக்கல்வி விஸ்தரிப்புப் பிரிவு எனும் பெயரில் பல்வேறு பாடநெறிகளை அறிமுகப்படுத்தியது. அதில் ஒன்றுதான் தேசிய உயர்தர முகாமை டிப்ளோமா (Higher National Diploma in Management) பாடநெறி. நான்கு வருடங்களைக் கொண்ட இப்பாடநெறிக்கு சிலர் தெரிவு செய்யப்பட்டு பயின்று கொண்டிருந்தோம். மாதாந்தம் பாடங்கள் தபாலில் வரும். அடியில் வினாக்கள் இருக்கும். அதில் நாம் எழுதும் விடைகளைத் திருத்தி புள்ளியிட்டுத் திருப்பி அனுப்புவார்கள்.

சாய்ந்தமருதைச் சேர்ந்த M.H.A. சமத் (முன்னாள் தெஹிவளை தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்) அதன் தமிழ் மொழி மூல பாடநெறிக்குப் பொறுப்பாக விருந்தார்.

தபால் மூலம் அனுப்பப்படும் இப்பாடநெறிக்கு மாதாந்தம் கிழக்கு மாணவர்கட்காக சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் கலந்துரையாடல் வகுப்புக்கள் ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தன. தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் M.S. மரைக்கார் தம்பி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். ஒவ்வொரு பாடத்துக்கும் சிறந்த விரிவுரையாளர்களை அவர் ஏற்பாடு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் வருட மாணவர்கட்கான பாடங்களில் ஒன்று வர்த்தக, கைத்தொழில் சட்டங்கள் (Commercial & Industrial law) இதற்கு எமக்கு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டவர் சகோதரர் M.H.M. அஷ்ரப். இப்பாடத்தை எடுப்பதற்காக கல்முனையில் இருந்து அவர் சம்மாந்துறை வந்து கொண்டிருந்தார். அவருடைய பாடம் மாலையில் இறுதிப்பாடமாக அமைந்ததால் அவரது காரிலேயே நாங்கள் விரிவுரை முடிந்து வீடு திரும்புவோம்.

எமக்கு வழங்கப்பட்ட பாடங்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு அதன் தமிழ் மொழிபெயர்ப்புக்களே தரப்பட்டன. இதனால் அதனை விளங்குவது சிலவேளை கடினமாக இருப்பதுண்டு. எமது பாடத்தில் முதலாம் விடயம் இலங்கையில் நீதிமன்ற அமைப்பு என்பதாகும். அந்த மொழி பெயர்ப்புக்கள் கடினமாக அமைந்திருந்தன. எனவே அஷ்ரப் அவற்றையெல்லாம் வெட்டுங்கள் என்று கூறிவிட்டு தனது சொந்த நடையில் அவ்விடத்தில் எழுதுவதற்கு குறிப்புக்கள் கூறினார். மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் அவரது குறிப்புக்கள் அமைந்திருந்தன. மிகவும் திருப்திப்பட்டோம். அவரது கற்பித்தல் ஆற்றல் மிகவும் சிறப்பாக அமைந்தது.

அவர் அவ்விடத்தில் அப்பீல் கோட் அல்லது சுப்ரீம் கோட்டுக்கு தமிழ் வார்த்தையாக மீயுயர் மன்று என்ற ஒரு வார்த்தைக் கூறிவிட்டு "இது அஷ்ரபின் சொற்பிரயோகம்" என்றார். அந்தச் சொல் அவ்வேளை புழக்கத்தில் இருக்கவில்லை.

## இலக்கிய வாதி

கதை, கட்டுரை எழுதுவதில் அஷ்ரப் ஈடுபட்டாலும் கவிதை எழுதுவதில்தான் அதிகம் கவனம் செலுத்தினார். இதனால் பிரசுரங்களில் அவரது பெயரைக் குறிப்பிடும்போது 'கவிஞர் அஷ்ரப்' என்றே பெரும்பாலும் அவர் அறிமுகம் செய்யப்பட்டார்.

இவ்வேளையில்தான் மூதூர் இக்பால் கழகம் நடத்திய கவிதைப் போட்டியில் "கவிஞர் கண்களில் இக்பால்" என்ற இவரது கவிதைக்கு முதற்பரிசு கிடைத்தது. இச் செய்தி பத்திரிகைகளில் பிரசுரமானபோது அஷ்ரபைப் போல் அவரது நண்பர்களும் மகிழ்ந்தனர். கவிஞர் அஷ்ரப் எனத் தன்னை அறிமுகம் செய்யும் அஷ்ரபுக்கு இது ஒரு நல்ல அங்கீகாரமாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு அட்டாளைச்சேனை அறபுக்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த சம்மாந்துறை முஹம்மத்தம்பி கவிதை எழுதும் ஆற்றல் உள்ளவர். அவர் அஷ்ரபைச் சம்மாந்துறையைச் சேர்ந்தவர் என்பார். நாம் அதை மறுத்து அவர் கல்முனை என்போம். எனவே எமக்கு அறிவூட்டுவதற்காக மூதூரில் அஷ்ரப் கவிதையில் முதலிடம் பெற்றதற்காக ஒரு பாராட்டுக்கவிதையை எழுதினார் நீண்ட அக்கவிதையின் சிலவரிகள் இன்னமும் என் நினைவில் உள்ளது.

**எங்கள் ஊர்க்கும் ஊரவர்க்கும்**
**என்றும் அழியாப் புகழ்தன்னை**
**திங்கள் வதன அஷ்ரபே நீர்**
**தேடித் தந்தீர் உனை மறவேன்**

இந்த அடிகள் மூலமாக அஷ்ரபைச் சம்மாந்துறை எனக் குறிப்பிட்டுக் காட்டவே எனது நண்பர் முயன்றார். முஹம்மத்தம்பி என்னோடு பயின்று மௌலவிப்பட்டம் பெற்று பின் வெலிப்பன்னையில் திருமணம் செய்து சில வருடங்களுக்கு முன் காலமாகிவிட்டார்.

அஷ்ரப் 1969 களில் ஒரு கையெழுத்துப் பத்திரிகை நடத்தினார். அதிலே சில கதைகளை எழுதினார். அநீதியைத் தட்டிக்கேட்கும் பாணியில் அமைந்த அவரது கதை ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது.

அவரது கதை இவ்வாறு அமைந்தது.

பள்ளிவாசல் ஒன்றுக்கு கொழுத்தும் வெயிலில் ளுஹர்த் தொழுகைக்காகச் செல்கின்றார். வெயிலின் உஷ்ணம் தாங்க முடியாமல் மின் விசிறியைப் போட்டுக்கொண்டு தொழுகிறார். இதனைக்கண்ட ட்ரஸ்டி வந்து மின்விசிறியை நிறுத்திவிட்டு ஏசி விட்டுச் செல்கின்றார்.

பின்னர் இவர் இரவு நேரத்தில் இஷாத் தொழுகைக்காகச் செல்கின்றார். கடும் குளிர் அவ்வேளை அதே ட்ரஸ்டி மின்விசிறியைச் சுழலவிட்டு விட்டு அதன் கீழ் தொழுவதை இவர் காண்கின்றார்.

இவ்வாறு அக்கதை அமைந்தது.

மனிதாபிமானத்தை நேசித்த அஷ்ரபின் கதைகளில் நிறைய மனித நேயக் கருத்துக்கள் நிறைந்தன.

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு கதை இது தினகரனில் வெளிவந்தது.

பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் சிகரட் புகைத்து விட்டு அதன் அடித் துண்டை வெளியே வீசுகிறார். அத்துண்டு பின்னால் வந்து கொண்டிருந்த வைக்கோல் லொறியில் வீழ்கிறது. சில நிமிடங்களில் அந்த லொறி பற்றி எரிகிறது.

இவ்வாறு சிலர் கவனயீனமாகச் செய்யும் சிறு தவறுகள் பெரும் வினையை ஏற்படுத்தும் என்பதை இக்கதை மூலம் உணர்த்தினார்.

## கவியரங்கில் நானும் அஷ்ரபும்

'தினபதி' என்ற பத்திரிகை கவிதா மண்டலம் என்ற ஒரு பகுதியை ஆரம்பித்து அதில் மூத்த கவிஞர்களால் சிபார்சு செய்யப்படும் இளங் கவிஞர்களின் கவிதைகளைப் பிரசுரிக்கும் திட்டமொன்றைச் செயற்படுத்தி வந்தது. 1969ம் ஆண்டுகளில் எனது பல கவிதைகள் கவிஞர் எம்.ஏ.நு.ஃமானின் சிபார்சுடன் "தினபதியில்" பிரசுரமாயின. ஆனால் அஷ்ரபின் கவிதைகள் மூத்த கவிஞர்களின் சிபார்சுகளின்றியே பிரசுரம் பெற்றன. அவ்வாறு குறிப்பிட்ட சிலரின் கவிதைகளே பெரிய கவிஞர்களின் அறிமுகமின்றி பிரசுரமாயின. அவரது "காற்பந்து" என்ற கவிதை அவ்வேளை பலராலும் பாராட்டப்பட்ட கவிதையாகவிருந்தது.

கவிஞர் எம்.ஏ.நு.ஃமான் 'கவிஞன்' என்ற காலாண்டுக் கவிதைச் சஞ்சிகையொன்றைப் பிரசுரம் செய்துகொண்டிருந்தார். அந்த இதழில் ஒரு முறை மஹாகவியின் கோடை நாடகத்தைப் பிரசுரம் செய்து அதன் வெளியீட்டு விழாவில் ஒரு கவியரங்கையும் ஏற்பாடு செய்திருந்தார். நோ.இராசம்மா, பரீதா இஸ்மாயில், எம்.எச்.எம். அஷ்ரப் நான் உட்பட எட்டுப்பேர் அதில் கவிதை வாசித்தோம். அஷ்ரப் தனது கவிதைகளையெல்லாம் ஒரு பெரிய C.R. கொப்பியில் எழுதி வைத்துக்கொள்வது வழக்கம். அவரது சிறுவயது கால பாடல்கள் உட்பட அனைத்து கவிதைகளும் அதில் அடங்கி இருந்தன. அக்கவியரங்குக்கென அவர் விசேடமாகக் கவிதையொன்றைத் தயாரிக்காமல் தனது கொப்பியில் இருந்து மூன்று கவிதைகளை வாசித்தார். அதில் ஒரு கவிதை என்னவெனில் 1970ம் ஆண்டு நிதியமைச்சராக இருந்த டாக்டர் N.M. பெரேரா நாட்டில் வழக்கில் இருந்த அனைத்து பணத்தையும் செல்லாமல் ஆக்கிவிட்டு புதிய நோட்டுக்களை விநியோகித்தார். அது சம்பந்தமாகவே அக்கவிதை அமைந்திருந்தது. அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனக்கு மிகவும் நெருக்கமான மூத்தம்மாவாகிய ஒரு மூதாட்டியிடம் கொஞ்சம் காசி கடனுக்குக் கேட்கிறார். பிறகு தருவதாகக் கூறுகிறார். அப்போது அம் மூதாட்டி

**"அல்லாஹ் அறியமனே**
**ஆகிறத்து நாளறிய"** என்று சத்தியம் பண்ணி தன்னிடம் ஒரு சதக் காசியும் இல்லை என்கிறார்.

பின்னர் இரவோடிரவாக பணம் செல்லாக்காசியாக மாறியபின் அக்கிழவி இவரிடம் வந்து பிகு பண்ணி தன்னிடம் உள்ள பணக்கத்தையைக் காட்டி அதனை மாற்றித்தருமாறு வேண்டிநிற்கிறார்.

அக்கவிதை நல்ல ஹாஷ்யமாக அமைந்தது. இதனை இங்கு நான் குறிப்பிடக் காரணம் அவரது "நான் எனும் நீ" எனும் கவிதைத் தொகுப்பில் அவர் அன்று வாசித்த மூன்று கவிதைகளும் இடம்பெறாமையைக் குறிப்பிட்டுக் காட்டுவதாகும்.

அன்று நான் "குடிகாரன்" என்ற தலைப்பில் அவ்வரங்கத்துக்கென கவிதை எழுதி வாசித்தேன். அக்கவியரங்குக்கு கவிஞர் பாண்டியூரன் தலைமை தாங்கினார். அவர்,

**மௌலவியாய்த் தேறும் மாபெரிய பாக்கியத்தை**
**ஔடதமாய்ப் பெற்ற அருமைக் கவிஞர் இவர்**

என்று கூறியே என்னைக் கவிதை வாசிக்க அழைத்தார். மஹாகவி எனது கவிதையைப் பாராட்டியது எனக்கு பெரும் மகிழ்ச்சியா கவிருந்தது. எனது கவிதையைக் கேட்ட அஷ்ரப் உங்களின் கற்பனைத் திறன் மிகச்சிறப்பானது எனப் பாராட்டினார். தனது நண்பர்களைப் பாராட்டுவதில் என்றும் முன்னிற்பவர் அவரல்லவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய இலக்கியத்துக்கெதிராக

## 1979ம் ஆண்டு

ஜூன் 29 முதல் ஜூலை 01 வரை. கொழும்பு பண்டாரநாயகா சர்வதேச மகாநாட்டு மண்டபம் அனைத்துலக நான்காவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாட்டிற்காக விழாக் கோலம் பூண்டிருந்தது.

இந்தியா, இலங்கை, மலேஷிய, போன்ற நாடுகளிலிருந்து தமிழ் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் அங்கு நிரம்பி வழிந்தனர்.

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன மகாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

நாகூர் E.M. ஹனீபா "இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லை என்று சொல்லுவதில்லை." என்று கிறாஅத்தைத் தொடர்ந்து பாடினார். விழாவின் இறுதியில் காயல் ஷேக் முஹம்மது உலக முஸ்லிம்களே நில்லுங்கள் என்று பாடி விழாவை முடித்தார்.

விழாவில் இலங்கை அமைச்சர்களுடன் தமிழக கல்வி அமைச்சர் C. அரங்க நாயகம் தமிழக கிராம அபிவிருத்தி அமைச்சர் ராஜா முஹம்மத் உட்பட உலகப் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு A.K.A. அப்துஸ்ஸமத் M.P. நீதியரசர் M.M. இஸ்மாயில், பிறை ஆசிரியர் M. அப்துல் வஹ்ஹாப், செந்தாமரை K.P.S. ஹமீத் கவிக்கோ அப்துல்ரஹ்மான், பேராசிரியர் நெய்னார் முகம்மத் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

12 நூற்கள் இம்மகாநாட்டில் வெளியிட்டு வைக்கப்பட்டன. பேராசிரியர் M.M. உவைஸ் இம்மகாநாட்டின் செயலாளராகவிருந்து வெற்றிகரமாக நடத்தி முடித்தார். இலங்கையில் நடைபெற்ற சர்வதேச இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாடாக இது அமைந்தது.

இம்மகாநாட்டில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனும் தலைப்பில் இரு கருத்தரங்குகள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கருத்தரங்கில் 12 கட்டுரைகளும் இரண்டாவதில் 25 கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

கட்டுரைகள் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவையினர் கருத்துக்களைப் பகிர்ந்தனர். அவ்வேளை சட்டத்தரணியாகக் கொழும்பில் பணிபுரிந்து கொண்டிருந்த நண்பர் அஷ்ரப் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற சொற்றொடரை விமர்சித்தார். தமிழ் இலக்கியத்தை இஸ்லாமிய இலக்கியம், கிறிஸ்தவ இலக்கியம், வைணவ இலக்கியம், சைவ இலக்கியம் எனப் பங்குபோட்டுக் கொண்டால் தமிழ் இலக்கியம் என்று சொல்வதற்கே ஒன்றுமில்லாமல் போகும். அவ்வாறு பங்கு போடக் கூடாது என இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டில் கருத்துத் தெரிவித்தார்.

இளம் சட்டத்தரணியான அவரின் பேச்சு அன்று எடுபடாவிட்டாலும் பின்னாளில் அவரது அரசியல் போக்குக்கு மாற்றமான பேச்சாகவே அன்றைய அவரது உரை அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## டியூசன்

1975 கல்முனை சாஹிறாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமைபுரிந்து கொண்டிருந்தேன். அஷ்ரபின் சகோதரிகளான முபீதாவும் பெரோசாவும் என்னிடம் (A/L) வகுப்பில் இஸ்லாமிய நாகரிகம் பயின்று கொண்டிருந்தனர். நான் A/L வகுப்பு மாணவர்களுக்கு அதிகமாக எழுத்துப் பயிற்சி கொடுப்பது வழக்கம். பரீட்சைக்கு வரும் என எதிர்பார்க்கும் வினாக்களைக் கொடுத்து விடை எழுதுமாறு பணிப்பேன். முபீதா கொடுக்கும் வேலையை நேர்த்தியாகவும் புனிதமாகவும் செய்து கொண்டு வருவார். பெரோசா எப்படியோ செய்து முடிப்பார். அவ்வேளை வானொலி முஸ்லிம் சேவையில் செவ்வாய்க் கிழமை இடம்பெறும் நிகழ்ச்சியொன்றுக்கு அதிகமாக ஆக்கங்களை பெரோசா அனுப்பிக் கொண்டிருந்தார். இதனால் சிலவேளை பயிற்சி தாமதமானால் என்னிடம் பேச்சியும் வாங்குவார். ஆனால் அவரது ஆக்கங்கள் மிகப்பெறுமதியாக இருக்கும். பெரோசா கலைவகுப்பில் சேருவதில் பிரச்சினை இருந்ததால் அவர் தொடர்பாக சிலவேளை அதிபரும் முணுமுணுப்பதுண்டு. இவருக்கு அளவையியல் பாடத்தை எனது மைத்துனர் சித்தீக் வீடு சென்று படிப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை அஷ்ரப் அரச சட்டத்தரணியாகப் பதவி வகித்துக் கொண்டிருந்ததால் அதிகமாக அவர் கொழும்பிலேயே தங்கினார். தங்கைமாரின் படிப்பிற்காக சாஹிறாவுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தார். சனி, ஞாயிறு தினங்களில் இவர் கல்முனை வருவார். நான் அவரைச் சந்திப்பது வழக்கம்.

A/L பரீட்சைக்கு புவியியலை ஒரு பாடமாக முபீதா படித்துக் கொண்டிருந்தார். புவியியல் பாடப்பரப்பு அதிகமாதலால் அதனைக் கற்பித்த ஆசிரியர் சாஹிறாவில் படித்த மாணவர்கள் அனைவரையும் டியூசனுக்கு வருமாறு கட்டாயப்படுத்தினார். இது முபீதாவுக்கு சங்கடமானது. ஏனெனில் பாடசாலை ஆசிரியர் ரியூசன் கொடுக்கும் வழக்கம் அறிமுகமாகாத காலமது. அது சட்டவிரோதம் என்ற நிலையிலேயே சமூகக் கணிப்பு இருந்தது. இவ்வாறு சட்டவிரோத ஒரு வேலைக்கு மாணவர்களை ஆசிரியர் கட்டாயப்படுத்துவதா?

அஷ்ரப் என்னிடம் கடுமையாகத்தன் ஆட்சேபனையைத் தெரிவித்தார். பாடசாலைக்கு வரும் மாணவர்களை இவர் எவ்வாறு தனது வீட்டுக்கு டியூசனுக்கு அழைக்கமுடியும்? இதனை அனுமதிக்கும் அதிபரையும் திட்டித் தீர்த்தார். நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறினார்.

எனினும் அவரைச் சமாளித்து தான் அதிபரிடம் பேசுவதாகவும் புவியியல் பாடம் மூன்று வினாப் பத்திரங்களைக் கொண்டது. எனவே அதற்கு அதிக ஆயத்தம் தேவை என்பதையும் விளக்கினேன். பின்னர் அதிபரிடம் அஷ்ரப் சொன்ன விடயத்தைக் கூறியபோது அதை அவர் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவர் பெரோசா விடயத்தைச் சுட்டிக் காட்டி அதை அனுமதிப்பது கஷ்டம் என்றார். பின்னர் அஷ்ரபிடம் விடயத்தைக் கூறி ஒருவாறு நிலைமையைச் சமாளித்துக் கொண்டேன்.

இங்கு அஷ்ரப் எடுத்த நிலைப்பாடு என்னவெனில் ஒரு சட்டவிரோத டியூசனுக்கு ஓர் அதிபர் எவ்வாறு அனுமதியளிக்க முடியும் என்பதாகும். ஆனால் இந்தச் சட்டவிரோத டியூசன் இன்று சட்டபூர்வமானதாகவும் அவசியமானதாகவும் மாறியுள்ளது. மாணவர்கள் இன்று பாடசாலைக் கல்வியைப் பொருட்படுத்தாமல் டியூசனுக்குச் சென்று படிப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். ஏனெனில் மாணவர்கள் விரும்பும் ஆசிரியர்களை டியூசனிலேயே பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையை அஷ்ரப் அமைச்சராக இருந்தபோது நன்கு உணர்ந்திருந்தார். அவர் ஒரு முறை கூறினார். இன்று எமது பாடசாலைகள் நல்ல பௌதிக வளத்தைக் கொண்டுள்ளன. A/C கூட அரச பாடசாலைக்குள் வந்துவிட்டது. சகல வளங்களையும் கொண்ட பாடசாலை பூட்டிக் கிடக்கிறது. மாணவர்களோ கொட்டில்களில் இடுப்புக் கூனும் வகையில் அமர்ந்து டியூசன் வகுப்புக்காகப் படிக்கிறார்கள் என்று கூறினார். உண்மையிலே இக் கல்முனைப் பிரதேசத்தில் தற்போது முதலாம் வகுப்பு மாணவர்களும் டியூசன் எடுக்கிறார்கள்.

1978ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சை எழுதுவதற்கு நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். எனது மைத்துனர் எம்.வை.எம். ரிந்தீக் அவ்வேளை யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்றதால் காதி அபூபக்கர் வீதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த அவருடன் நானும் தங்கியிருந்தேன். அங்கே காலை 6.00 மணிக்கு 1ம் வகுப்பு மாணவர்கள் டியூசன் வகுப்புக்கு வந்து படிப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அவ்வளவு நேரத்தோடு அந்தச் சின்னஞ்சிறுசுகள் டியூசனுக்கு வந்திருந்தார்கள். இது எனக்கு அன்று ஆச்சரியத்தைத் தந்தது. கல்முனை திரும்பிய நான் இதனை மற்றவர்களிடம் கூறியதும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் இக்காட்சி தற்போது கல்முனையில் சர்வ சாதாரணமாகும்.

இவ்விடத்தில் நான் பொருத்தத்துக்காக ஒரு விடயத்தைக் கூற வேண்டும். O/L ல் புவியியல் பாடம் எடுப்பதற்காக டியூசன் எடுப்பதற்கு ஓர் ஆசிரியரிடம் சென்று தனக்கு அப்பாடத்தில் டியூசன் தருமாறு கேட்டேன். அவர் அந்த டியூசன் என்ற வார்த்தையைக் கேட்டதும் பயந்துவிட்டார். 'கைலஞ்சம்' என்ற வார்த்தையைப் போன்ற ஒரு சொல்தான் அன்று அது. மிகவும் நேர்மையான அந்த ஆசிரியர் அன்று அதனைச் செய்ய முடியாது என மறுத்து விட்டார். ஆனால் பின்னாளில் அதாவது டியூசன் அத்தியாவசிய சேவை என்ற அந்தஸ்தைப் பெற்றபோது இந்த ஆசிரியர் இப்பிரத்தியேக தொழிலை அரசாங்கப் பாடசாலை ஆசிரியராக இருந்து கொண்டே செய்து வந்தார்.

கல்முனைப் பிரதேசம் இந்நாட்டில் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு இந்த டியூசன் கலாச்சாரம் முக்கிய காரணம் என்றால் மிகையாகாது. மர்ஹூம் M.I.M. நளீம் ஹாஜியாரின் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் உதவியுடனும் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடனும் கல்முனையில் A/L விஞ்ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளீம் ஹாஜியாரின் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் உதவியுடனும் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடனும் கல்முனையில் A/L விஞ்ஞான மாணவர்களுக்கு அன்றைய விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக உருவான டியூசன் கலாசாரம் இன்று அங்கு முதலாம் வகுப்பு மாணவர்களையும் பிடித்துள்ளது.

## அஷ்ரப் - பேரியல் திருமணம்

அஷ்ரபின் திருமணம் எவ்வாறு அமையும் என்பதை அவரது நண்பர்கள் மிக ஆவலாய் எதிர்பார்த்துக்காத்திருந்தார்கள். காரணம் சீதனம் எடுப்பதையிட்டு மிகக் கடுமையாக விமர்சனம் செய்தவர் அவர். மேடைப்பேச்சுக்களில் அதனைக் கண்டிப்பார். சீதனம் எடுப்பவர்களை கைலஞ்சக் குற்றச் சாட்டின் பேரில் கைது செய்ய வேண்டுமென்று அடிக்கடி கூறுவார்.

அஷ்ரப் போன்ற சட்டத்தரணிகள் கொழுத்த சீதனத்துடன் திருமணம் முடித்துக் கொண்டிருந்த நேரம் அது. பல பணக்காரக் குடும்பங்களிலிருந்தும் அவருக்கு திருமணப் பேச்சுக்கள் இடம்பெற்றன. சாய்ந்தமருதிலிருந்து ஏதாவது திருமணப் பேச்சென்றால் என்னையே கூப்பிட்டு விசாரிப்பார்.

திடீரென ஒருநாள் "தினகரன்" பத்திரிகையில் விளம்பரம் ஒன்று வெளியானது. "அஷ்ரப் - பேரியல் திருமணம் நிச்சயதார்த்தம்" என்ற தலைப்பிலான அவ்விளம்பரத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு நாங்கள் இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டோம் என்ற பொருள்பட விளம்பரம் இடம் பெற்றிருந்தது. இனிமேல் ஏனையோர் கல்யாணம் பேசிவந்து தொல்லை கொடுக்கக்கூடாதென்பதற்காகத்தான் அவ்விளம்பரத்தைப் போட்டதாகக் கூறினார்.

ஒருநாள் திகதி நினைவில்லை. எனது வீட்டு முன்றலில் ஒருகார் வந்து நின்றது. அஷ்ரப் இறங்கிவந்தார். எனக்குத் திருமணம், கம்பளைப் பள்ளிவாசலில்! இந்த சாய்ந்தமருதில் இரண்டு பேருக்கு மட்டும்தான் அழைப்பு. அதில் ஒன்று உங்களுக்கு மற்றது பீர்முஹம்மதுக்கு! நீங்கள் கட்டாயம் வரவேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் என்வலப்பை நீட்டினார். அவரது திருமண அழைப்பு ஒரு **கொப்பித்தாளிலேயே கையால்** எழுதப்பட்டிருந்தது. கம்பளைக்கு என்னால் போகமுடியவில்லை.

மணமகள் கல்முனை வந்தபின் பரிசுப் பொருட்களுடன் நானும் எனது மனைவியும் அவரது கல்முனைக்குடி வீட்டுக்குச் சென்றோம். அப்போது எனது மனைவியிடம் கம்பளைக்கு வராமல் விட்டு விட்டு லேசாக இங்கு வருகிறீர்கள் அல்லவா என்றார். கம்பளைக்கு வராதவர்கள் இங்கு வரக்கூடாது என்றும் (செல்லமாகக்) கூறினார். நாங்கள் எமது நியாயமான காரணத்தைச் சொன்னதும் ஏற்றுக் கொண்டார். கம்பளையில் திருமணம் மிகச் சிறப்பாக நடந்ததாகவும் கூறினார். அவரது குடும்பத்தவர்களில் யார் யார் வந்தார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நான் அவரிடம் விசாரிக்கவில்லை.

அஷ்ரப் இவ்வாறு திருமணம் முடிக்க எடுத்த முடிவு அவர் சீதனத்துக் கெதிராக இதுவரை பேசிவந்ததை உண்மைப்படுத்தியது. இதனால் அவரைக் குற்றம் காணக் காத்திருந்தவர்கள் வாயடைத்தனர். இத்திருமணம் மூலம் அவர் ஒரு புரட்சியைச் செய்தே காட்டினார். அஷ்ரப் ஒரு காலத்தில் அரசியல் வாதியாக வருவார் என்ற பலரின் எதிர்பார்ப்பு இவரது இம்முடிவால் தகர்ந்து போனது. இனி இவருக்கு அரசியல் எதிர்காலமே இல்லை எனப் பலர் முடிவுக்கு வந்தனர். ஏனெனில் கல்முனைத் தொகுதிக்கு எம். பி யாக வரும் ஒருவருக்கு சாய்ந்தமருது, கல்முனைக்குடி ஆகிய இரண்டு ஊர்களுடன் தொடர்பு இருக்க வேண்டும் என்ற ஓர் எண்ணக்கரு மக்களிடம் இருந்தது. முன்னாள் எம். பி க்களான காரியப்பரும், அகமதும் சாய்ந்தமருதில் பிறந்தவர்கள். கல்முனைக் குடியில் திருமணம் செய்தவர்கள் மன்சூர் கல்முனைக்குடியில் பிறந்து கல்முனைக்குடியில் காரியப்பர் மகளை முடித்தவர். எனவே ஊரைத் துறந்து திருமணம் முடித்ததால், அரசியல் வாழ்வு அழிந்தவிட்டது என்றே பலரும் நம்பினர். ஆனால் அல்லாஹ்வின் நாட்டம் அவருக்கு மாத்திரமா? அவர் அழைத்து வந்த மனைவிக்குமல்லவா எம்.பி ப்பதவியையும் அமைச்சர் பதவியையும் அல்லாஹ் ஏற்பாடு செய்து வைத்திருந்தான். அவன் தான் ஆட்சி அதிகாரங்களுக்குச் சொந்தமானவன். அவன்தான் அதனைக் கொடுப்பவன். மனிதர்களல்ல. என்ற இஸ்லாமியத் தத்துவம் இதன் மூலம் நிரூபணமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமான் பிறப்பு

## 1981ம் ஆண்டு

ஆகஸ்ட் மாதம் என நினைக்கிறேன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்ட இறுதிப் பரீட்சையை எழுதிக்கொண்டிருந்தேன். அவ்வேளை எனது மருமகன் மர்ஹூம் S.M. இஸ்மாயில் B.Sc உடன் E. குவாட்டசில் தங்கி இருந்தேன். (அவர் அவ்வேளை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் M.Sc (Agriculture) க்குப் படித்துக் கொண்டிருந்தார்) கண்டி - கம்பளை வீதியால் நான் போய்க் கொண்டிருந்த போது ஒரு கார் என்னைக் கண்டு நின்றது. அதிலிருந்து அஷ்ரப் இறங்கினார். குசலம் விசாரித்தபின் தனக்கு ஒரு ஆண்குழந்தை கண்டி Lake Side மருத்துவமனையில் பிறந்துள்ளதாகவும் முடியுமானால் வருமாறும் கூறிச் சென்றார்.

எனது பரீட்சையில் இறுதிப் பாடம் முடிந்தவுடன் கண்டி "Lake side nursing home" சென்றேன். அங்கே அஷ்ரபும் பேரியலுமே இருந்தனர். என்னைக் கண்ட அஷ்ரப் 'அல்லாஹ் உங்களை மிகவும் பொருத்தமான நேரத்தில் இவ்விடம் கொண்டு சேர்த்துள்ளான். நாங்கள் இருவரும் குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்பதில் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நீங்களே இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கூறிவிட்டு 'அஹ்மத் அஷ்ரப்' என்பதில் உடன்பாடு கண்டுள்ளோம். முன்னுக்கு A யில் ஒரு பெயர் வேண்டும் என்றார். சகோதரி பேரியல் 'அமான்' என்ற சொல்லின் பொருளென்ன? அது நல்ல பெயரா? எனக்கேட்டார். ஆனால் அஷ்ரபோ திருப்தியடையாதவராக வேறு ஒரு பெயரைக் கூறுங்கள் என்றார். அவ்விடத்தில் நினைவுக்கு வந்த சில பெயர்களை கூறியபோதும் இருவரும் திருப்திப்படவில்லை. அப்போது நான் 'அமான் என்ற பெயர் நல்லதுதான். அதனையே வையுங்கள்' என்று கூறினேன். ஏனெனில் சகோதரி பேரியல் அந்தப் பெயரில் அலாதி பிரியமாக இருந்ததை என்னால் யூகிக்க முடிந்தது. இன்று எப்படியோ பெயர் கொடுக்கவேண்டும் என்று அஷ்ரப் ஆதங்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாசம் மிகுந்த

அஷ்ரபின் பெற்றோருக்கு அவர் மட்டுமே ஆண்பிள்ளை. இவருக்கு மூத்த சகோதரி ஒருவரும் இரு தங்கைகளும் இருந்தனர். மூத்த சகோதரியின் இரு பிள்ளைகளும் இவரது பராமரிப்பில். நாம் அவரைச் சந்திக்கப் போகும் போதெல்லாம் தனது மருமகள் மிஸ்ரியை தோழில் சுமந்த வண்ணமே இருப்பார். தமது சகோதரிகள், மருமக்கள் மீது உயிரை வைத்திருந்ததுபோல் தாய்தந்தை மீதும் அளவுகடந்த அன்பை வைத்திருந்தார். தான் குடும்பத்தில் உள்ள ஒரேயொரு ஆண்பிள்ளை என்ற பொறுப்பை அவர் உணர்ந்திருந்தது போல் தான் ஏக புதல்வன் என்பதைப் பெருமையாகப் பேசுவார். அவ்வேளை எமது பிரதேசத்தில் அஷ்ரப் என்ற பெயருடன் எவரும் இல்லாததைச் சுட்டிக்காட்டி அதனையும் பெருமையாகப் பேசுவார். தனது நன்மை, தீமை அனைத்தையும் பெற்றோருடன் பகிர்ந்து கொள்பவர் அவர். தனது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் போது அதனைப் பெற்றோருக்கே முதலில் அறிவிப்பார். அவர் சட்டத்தரணியாகப் பணிபுரிந்தவேளை வெளிவாரிப் பரீட்சார்த்தியாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் "First in law" எழுதி சித்தியடைந்த போது அதனைத் தந்தி மூலம் முதலில் தனது பெற்றோருக்கே அறிவித்தார். இறுதிப்பரீட்சைக்கு ஆயத்தமாகுமாறு கேட்டபோது அது மிகக் கடினமான பரீட்சை என்றும் போதிய ஆயத்தமில்லாமல் அதனைச் செய்வது கடினம் என்றும் கூறினார்.

1990ல் இவர் தனது தாயாரை அழைத்துக் கொண்டு ஹஜ்ஜுக்கு வந்திருந்தார். மக்காவில் நான் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் பக்கத்திலேயே அஷ்ரப் தங்கியிருந்த ஹோட்டல் இருந்ததால் இவரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சேப்வே ட்றவல்ஸ் மூலம் இவர் ஹஜ்ஜுக்கு வந்திருந்தார். மௌலவி கலீலும் சேப்வே மூலமே வந்திருந்தார்.

தாயார் தடியின் உதவியுடன் நடக்கக் கூடியவராக இருந்தார். அவருக்கு இவர் செய்த பணிகளைக் கண்டு எவரும் ஆச்சரியப்படுவர். வயோதிபத் தாய் ஒருவருக்கு ஒரு தனயன் செய்ய முடியாத அளவுக்கு அவருக்குப் பணி புரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு ஒரு தனயன் செய்ய முடியாத அளவுக்கு அவருக்குப் பணி புரிந்தார். தாயின் கையைப் பிடித்துக் கொண்டுபோய் பாத்றூமில் குளிப்பாட்டி அவரது ஆடைகளை இவர் கழுவி அதனைக் கொண்டுவந்து கொடியில் காயப் போட்டு விட்டு அவரை அழைத்து றூமுள் கொண்டு சேர்க்கும் பாங்கு! அத்தாய் உண்மையில் கொடுத்து வைத்தவர்தான்.

நான் பண்டாரவளை ஹிதாயா ஹோட்டல் உரிமையாளர்கள் ஏற்பாடு செய்த ட்ரவல்ஸில் ஹஜ்ஜுக்குச் சென்றதால் அவர்கள் பல்வேறு வகையான உணவுப் பதார்த்தங்களைத் தயாரித்து ஹாஜிகட்கு வழங்கினர். அவ்வாறு கிடைக்கும் விசேட உணவுகளில் ஒரு பகுதியை அஷ்ரபிடம் கொண்டு கொடுப்பேன். ஒரு முறை புட்டுப் பீங்கானை எடுத்துச் சென்றபோது "உம்மா, முபீதாவின் சேர் உங்களுக்குப் புட்டு கொண்டு வந்திருக்கிறார்" என எடுத்துச் சென்று அதனை அத்தாய்க்கு ஊட்டிய முறைமை! அவரது தாய்ப்பாசத்துக்கு நிகராக எதுவும் கிடையாது.

இப்பாசம் பிற்காலத்தில் எல்லைகடந்து சென்றதையும் இங்கு என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அஷ்ரப் வபாத்தாகி நான்காம் நாள் அவரது இல்லம் தேடிச் சென்றேன். அஷ்ரபின் தாயாரோடு அவரது கட்டிலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தேன். மகனது பிரிவு தாங்க முடியாமல் அடிக்கடி அழுவதும் பின்னர் சுதாகரித்துக் கொண்டு கதைப்பதுமாகவிருந்தார். அஷ்ரப் தேர்தல் காலமொன்றில் காலமானதால் அந்த நியமனப் பத்திரம் தாக்கல் செய்த தினத்தன்று நடந்த சம்பவமொன்றை அவர் கூறினார். நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய அம்பாறைக் கச்சேரிக்குச் சமூகமளிக்கச் செல்லமுன் மருதமுனையிலுள்ள தனது வீட்டுக்கு மற்றொரு வேட்பாளரான தொப்பி முகைதீனுடன் வந்த மகன் தனது காலடியில் படுத்து எனது காலை அவரது தலையில் வைக்குமாறு கூறினார். தாங்கள் பிரார்த்தித்தால் எமக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்று அவர் கூறியதாகவும் தாயார் கூறி அழுதார். அண்மையில் சகோதரர் அமைச்சர் நஜீப் ஏ. மஜீத் என்னிடம் ஒரு விடயத்தைக் கூறினார். அஷ்ரப் அவர்களிடம் ஒரு பிறீப்கேஸ் (பெட்டி) இருந்ததாகவும் அதனுள் தனது தாயாரின் செருப்பை ஒரு தாளில் சுற்றி பத்திரமாக வைத்திருந்ததாகவும் அதனைத் தன்னிடம் காட்டியதாகவும் கூறினார்.

உண்மையாகவே அஷ்ரப் தனது தாயாரை அளவுக்கதிகமாக நேசித்தார். தனது ஏக புதல்வனான அஷ்ரபை அதே போன்று அத்தாயும் நேசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்

1970 முதல் 1977 வரை கல்வி அமைச்சராகக் கடமையாற்றியவர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத். கல்வித்துறையில் பாரிய சீர்திருத்தங்களை மேற் கொண்டவர் இவர். தரப்படுத்தல், மாவட்டக் கோட்டா முறை என்பனவற்றை அறிமுகப்படுத்தி கிராமப்புற மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற வழிவகுத்தவர்.

முஸ்லிம் கல்வி வரலாற்றில் டாக்டர் பதியின் காலம் பொற்காலம். அவரது காலத்தில்தான் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் அறபு போன்ற விசேட பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்கள் தொழில்நுட்பக்கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் என்பவற்றுக்கு அதிக முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். G.C.E O/L, A/L சித்தியடைந்தவர்கள் ஆசிரிய நியமனத்துக்கு உள்வாங்கப்பட்டனர். மௌலவி தகைமை பெற்ற அனைவரும் மௌலவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். பலர் அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டனர். கல்வி அதிகாரிகளாக பலர் நியமனம் பெற்றனர். இவ்வாறு இன்னும் எவ்வளவோ கூறலாம். முஸ்லிம் சமூகம் இன்று கல்வியில் ஓரளவு முன்னேறியுள்ளதென்றால் அதற்கு வழிகோலியவர் இந்த பதிதான்.

இவ்வாறு கல்வி உலகு முஸ்லிம்களைப் பொறுத்தவரை பூத்துக் குலுங்கிய ஒருகாலம் டாக்டர் பதியின்காலம். இக்காலத்தில் தான் 1972ல் புதிய கல்விச் சீர்திருத்தத்தை அமுல் செய்தார். அதன்படி, G.C.E O/L பரீட்சை N.C.G.E ஆக மாறியது. தொழில் முன்னிலை, அழகியற்கலை போன்ற பாடங்கள் கட்டாய பாடங்களாயின.

அழகியற் கலைப்பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் ஆகியவைகளில் ஒன்றுக்கு தோற்ற வேண்டிய கடமைப்பாடு ஒருமாணவனுக்கு இருந்தது. இப்பாடங்களில் ஒன்றாக நடனம் இடம்பெறுவது முஸ்லிம் பெற்றோர்களைப் பொறுத்தவரை அதிருப்தியான விடயமாக இருந்தது. தமது பெண் பிள்ளைகளுக்கு நடனம் கட்டாயமாகப் பயிற்று விக்கப்படுவதை முஸ்லிம் பெற்றோர்கள் விரும்பவில்லை. இது டாக்டர் 'பதி' மீது இஸ்லாமிய ஆர்வலர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. தான் கொண்ட கொள்கையில் விடாப்பிடியாக இருக்கும் டாக்டர் பதி இவ்விடயம் பற்றி அறபு ஆசிரியர் சங்கக் கூட்டம் மௌலவி M.J.M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியாழ் தலைமையில் கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற போது உலமாக்களான அறபு ஆசிரியர்கட்கு விளக்கினார்.

இவ்வாறு ஆலிம்களுக்கு நடனத்தைப்பற்றி கல்வி அமைச்சர் விளக்கிய போது எந்தவொரு ஆலிமும் அவ்விடத்தில் தங்களது அதிருப்தியைத் தெரிவிக்காமல் இருந்தது வெளியில் நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருந்த சகோதரர் அஷ்ரபுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியது.

மௌலவிமாரின் இந்த வாளாவிருந்த செயற்பாடு அஷ்ரபைச் செயற்படவைத்தது. அவர் இரவோடிரவாக பிரசுரம் ஒன்றை எழுதினார்.

"அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்" என்பதே அச்சிறு நூலின் தலைப்பு. அதிலே நடனத்தைப் பாடசாலைகளில் அமுல்நடத்தும் அமைச்சரையும் அவர் அதுபற்றி விளக்கும்போது பேசாமடந்தைகளாக இருந்த அறபு ஆசிரியர் சங்கத்தையும் அவர் கிழி கிழியென கிழித்தார். ஓரிடத்தில் பதியுதீனுக்கு எச்சரிக்கை என்று தலைப்பிட்டு அமைச்சரை எச்சரித்தார். அந்த நூலின் இறுதியில் பின்வருமாறு கூறிமுடிக்கிறார்.

"அமைச்சரின் முடிவு எவ்வாறு தவறானதோ அவ்வாறே ஆலிம்களின் மௌனமும் தவறானது என்பதைச் சுட்டிக் காட்டவும் - அதற்காக தூதுக் குழுக்கள் செல்லவும் - உரிய அதிகாரிகளைப் பேட்டி காணவும் - அமைச்சரவையின் முடிவை மாற்றவும் - பொதுக் கூட்டங்கள் கூட்டவும் - பொது சன அபிப்பிராயத்தைத் திரட்டவும் உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.

எதற்கும் துணிந்தவரான அஷ்ரப் தனக்குச் சரியென்றுபடுவதை எவ்விடமானாலும் சொல்லியே தீர்வார். எவ்வித இடர்வரினும் அதனை எதிர் கொள்ளத் தயங்கமாட்டார். அஷ்ரபின் துணிச்சலுக்கு இது மற்றுமோர் உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டக் கல்லூரியும் சவால்களும்

சட்டக்கல்வி பயில வேண்டும் என்ற ஆசை எனக்கு நீண்ட காலமாக இருந்தது. 1977ல் சட்டக் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரப்பட்டபோது நான் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இறுதி வருடப் பயிற்சி ஆசிரியராக இருந்தேன்.

விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பெற்று நண்பர் அஷ்ரபிடம் கொண்டு சென்று அதனை நிரப்புமாறு கூறினேன். நான் சட்டம் பயில விரும்பியதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அவர் எனது படிவத்தை நிரப்பினார். தொழில் பற்றிக் கேட்கப்பட்ட பகுதியை நிரப்பும்போது எதனைப் போடுவோம் என்று கேட்ட அவர் 'ஆசிரியர்' என்றே போடுவோம் என்று கூறி நிரப்பினார். பின்னர் எனது படிவத்தை அவருக்குத் தெரிந்த கொழும்பில் வேலை பார்க்கும் சட்டத்தரணி ஒருவருக்கு அனுப்பினார். அவரே அதனை சட்டக்கல்லூரியில் கையளித்துவிட்டு எனக்கு ரிசீட்டை அனுப்பியிருந்தார்.

அவ்வருடம் தேர்வுப் பரீட்சை இன்றி விண்ணப்பித்த அனைவரையும் தெரிவு செய்வதற்கு சட்டக்கல்விக் கமிஷன் முடிவு செய்திருந்தது. ஏனெனில் சட்டக் கல்விக் கமிஷன் சட்டக்கல்வி பயில்வதற்காக க.பொ.த. உயர்தரத் தராதரத்தைக் கோரியிருந்தது. இதனால் பலர் விண்ணப்பிக்கும் தகைமையை இழந்திருந்தனர். எனவே நான் சட்டக்கல்வி பயிலத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் எனது இலக்கம் 99 என்றும் கொழும்பு கிறீன் லேஸ் வங்கியில் ரூபா 322/= கட்டிய பின் தாரதரப் பத்திர மூலப்பிரதிகளுடன் சட்டக்கல்லூரிக்கு சமூகளிக்குமாறும் கேட்கப்பட்டேன். காலையில் சென்று வங்கியில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டோடு சட்டக்கல்லூரிக்குச் சென்றேன்.

நீதியரசர் எஸ்.டீ.எஸ். ஜயதிலக அவ்வேளை அதன் அதிபராக இருந்தது ஞாபகம். எனது முறை வந்து நான் நேர்முகப் பரீட்சைக்கு உட்கார்ந்தபோது எனது கோவையை எடுத்துப் பார்த்த அதிபர் தாங்கள் ஓர் ஆசிரியரா எனக் கேட்டார். ''ஆம்'' என்றேன். அவ்வாறானால் தாங்கள் கல்வித் திணைக்களத்திலிருந்து படிக்க அனுமதிக் கடிதம் பெற்று வரவேண்டும். சில வாரங்கள் தங்களுக்குத் தவணை தருகிறேன். விரிவுரைகள் ஆரம்பமாக முன் அதனைச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கூறினார். மிகுந்த ஏமாற்றத்துடன் வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த நான் அக்கடிதத்தைப் பெறுவதற்குரிய சாத்தியத்தைப் பார்த்தேன். பல பிரமுகர்களிடம் தொடர்பு கொண்ட போதும் அது இலகுவானதொன்றல்ல என்பது தெளிவானது. சட்டக் கல்லூரியில் பயில்வோரில் அதிகமானோர் ஆசிரியர்கள். நீங்கள் ஏன் தொழிலைப் போட்டீர்கள் என சட்டம் பயிலும் நண்பர்கள் கேட்டார்கள். பல வாரங்கள் பல்வேறு சிரமங்களைச் சந்தித்த பின் சட்டக் கல்வி முயற்சியில் ஈடுபடுவதில்லை என்று முற்றாக ஒதுங்கிக் கொண்டேன்.

பின்னர் என்னை அஷ்ரப் அழைத்து விசாரித்தபோது எனது ஆர்வமின்மையை வெளிப்படுத்தினேன். அஷ்ரப் ஒரு தாளை எடுத்து பல கோடுகளை வரைந்து விட்டு இதெல்லாம் சிக்கல்கள், பிரச்சினைகள், இவற்றைத் தாண்ட வேண்டும். உங்கள் பிரச்சினை மிகவும் சிறியது. அதனை வெல்வதில் மன உறுதி வேண்டும். சவால்களை வெற்றி கொள்வதில் இன்பமடைய வேண்டும். என்றெல்லாம் கூறினார். எனினும் நான் சட்டக் கல்லூரிக்குச் செலுத்திய பணத்தை மீளப்பெற்றுக் கொண்டு கல்முனை ஸாஹிறாவில் எனது ஆசிரியர் பணியைத் தொடர்ந்தேன்.

மூன்று வருடங்களுக்குப் பின் 1981ல் மதீனாப் பல்கலைக்கழக புலமைப்பரிசில் பெற்று அங்கு சென்ற எனக்கு அஷ்ரப் ஒரு கடிதம் எழுதினார். இறைவன் உங்களை அவனது மண்ணில் அவனது பணிக்காக தெரிவு செய்து வைத்திருக்கும் போது வேறு கல்விகள் எவ்வாறு தங்களுக்கு ஒத்துவரும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார். நான் மதீனாப் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று வந்தபின் என்னைச் சந்தித்த அவர் விடுபட்ட சட்டக்கல்வியைத் தொடருமாறு வற்புறுத்தினார். நான் அவற்றில் ஆர்வம் இல்லை எனக் கூறினேன். பின்னர் எனது 'சாந்தி வழி' என்ற நூல் வெளியீட்டு விழாவின் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட அவர் இவ்வேண்டுகோளை பகிரங்கமாக விடுத்தார்.

அஷ்ரபைப் பொறுத்தவரை அவர் சவால்கள் வந்தால்தான் உஷாரடைவார். அதனை வெற்றிகொள்வதில் பேரின்பம் காண்பார். தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் வெற்றியாக அதை மாற்றுவார். அவரின் இந்தப் பண்பு அவரின் நண்பர்கள் எல்லோரிடமும் எதிர்பார்க்க முடியாதல்லவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டளையிடும் திறன்

1979ம் ஆண்டு காத்தான்குடி றஊப் மௌலவி "மனித உருவில் இறைவன் வெளியானான்" ஹிரா மலைக்குகைக்கு வஹீயை ஜிப்ரீல் கொண்டுவந்த போது அங்கே அல்லாஹ்வையே அவர்கண்டார்" போன்ற அத்வைத தத்துவங்களைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். இவரது பேச்சுக்கள் மக்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தின. இப்பேச்சுக்கள் இஸ்லாத்துக்கு மிகவும் பாதகமானது என்று அன்றைய உலமாப் பெருமக்கள் முடிவுக்கு வந்தனர். இப்பிரச்சினை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுக்கு வந்த போது அக்கொள்கையைப் பரப்புவது; பின்பற்றுவது மதமாற்றத்தை ஏற்படுத்தும் என்று அறிஞர்கள் 'பத்வா' வழங்கினர்.

இவ்வேளை கல்முனை பிரதேசத்திலும் றஊபின் கெசட்கள், பேச்சுக்களுக்கு பெரும் மவுசு ஏற்பட்டிருந்தது. கல்முனையில் புதிதாக நிறுவப்பட்ட ஹிமாயத்துல் இஸ்லாம் இயக்கம் இப்பிரச்சினையில் ஒரு தெளிவை ஏற்படுத்த வேண்டும் என்று முடிவுக்கு வந்தது.

மருதமுனை முஸ்தபா மௌலானாவைத் தலைவராகவும் நற்பிட்டிமுனை யூசுப் ஹஸரத்தை செயலாளராகவும் மேலும் பாறூக் மௌலவி, ஷேகு இப்றாஹீம் ஹஸரத் இப்றா லெப்பை (தேவுபந்து), போன்ற பல்வேறு சிரேஷ்ட உலமாக்களுடன் இளம் உலமாக்களும் கல்முனையில் உள்ள வர்த்தகப் பிரமுகர்களும் இணைந்து பாரிய மகாநாடொன்றுக்கு ஏற்பாடு செய்தனர்.

கல்முனைப் பிரதான வீதியில் நடைபெறும் இம் மகாநாட்டுக்கு இலங்கையின் முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள், நாடெங்கிலுமுள்ள அறபுக்கல்லூரி அதிபர்கள், உலமாப்பெருமக்கள் கலந்து கொள்ள வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

அவ்வேளை கல்முனை நகரில் இருந்த முதலாளிகளைப் பொறுத்தவரை தீனுக்காக அதுவும் தவ்ஹீதுக்காக தமது பணங்களை வாரிவழங்கும் மனம் கொண்டவர்களாக இருந்தனர்.

கல்முனை நகரில் றஊபின் கருத்துக்களை ஆதரிப்பவர்கள் இருந்ததால் மிகவும் கவனமாக மகாநாடு திட்டமிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவுக்கு இலங்கையின் பிரபல அறிஞர் அல்ஹாஜ் A.A.M. மஸ்ஊத் ஆலிம் தலைமை தாங்கினார். மஹறகம கபூரிய்யா அதிபர் இந்தியாவைச் சேர்ந்த ஷம்சுத்தீன் ஹஸரத், சம்மாங்கோட்டைப் பள்ளி பிரதம இமாம் அபுல்ஹஸன் காஹிரி. உலமாசபைத்தலைவர் அப்துஸ்ஸமது ஹஸரத் செயலாளர் M.J.M. றியாழ் காத்தான்குடி அப்துல்லா ஹஸரத் உட்பட அவ்வேளை முஸ்லிம் கலாச்சார திணைக்களத்துக்குப் பொறுப்பான போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் M.H. முகம்மது எம்.பிக்களான A.R. மன்சூர், M.A. மஜீத், பரீத் மீராலெவ்வை, M.A.M. ஜலால்தீன் போன்ற முக்கிய அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

அறிவுசார்ந்த எந்த இடத்துக்கும் அரசியல் வாதிகளை முதன்மைப்படுத்தும் போது அது விருப்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு அந்த மாபெரிய மகாநாடு சான்றாக அமைந்தது.

மகாநாட்டில் பங்குபற்றவென கொழும்பில் இருந்து ஹெலிக் கொப்டரில் கல்முனை வந்த அமைச்சர் M.H. முகம்மத் பின்னேரமானால் ஹெலி பறக்காது எனக்கூறி நேரகாலத்தோடு பேசிவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

கல்முனை எம்.பி. A.R. மன்சூரின் பேச்சு மகாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்குச் சாதகமாக அமையவில்லை. பொத்துவில் M.P. ஜலால்தீன் உணர்ச்சிபூர்வமாகப் பேசினார். இவ்வாறான கொள்கையைப் பரப்புவோரைக் கொல்ல வேண்டும் என்று அவர் பேசினார். அவரது பேச்சு மக்களை உணர்ச்சி வசப்படுத்தியது. அவரது பேச்சு முடிந்ததும் அவரைப் பாராட்டிய மஸ்ஊத் ஆலிம் உண்மையில் இவர் 'ஜலாலுத்தீன்' என்பதை நிரூபித்துள்ளார் எனக் கூறினார்.

அவரைத் தொடர்ந்து மட்டக்களப்பு எம்.பி. பரீத் மீராலெப்பை எழுந்து ஜலால்தீன் எம்.பிக்குப் பதில் கூற ஆரம்பித்தார்.

றஊபிற்கு ஆதரவை இதுவரை மறைத்துக் கொண்டிருந்த பரீத் மீரா லெவ்வை, M.P. அம்மகாநாட்டில் வைத்து உலமாக்களை கண்டித்து றஊபை ஆதரித்த அவரின் பேச்சு சபையோரைப் பொறுமை இழக்கச் செய்து கொண்டிருந்தது. இங்கு றஊபைக் கொல்ல வேண்டும் என்று சகோதரர் பேசினார். அவரைக் கொல்ல யாருக்கு இங்கே துணிவிருக்கிறது? என்று கேட்டதுதான் தாமதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள், இளம் உலமாக்கள் கொதித்தெழுந்தனர்; கைகளை உயர்த்தி எழும்பியவர்கள் பரீத் மீரா லெவ்வையின் மைக்கைப் பறித்தனர். கூட்டத்தைக் குழப்ப வேண்டுமென வந்திருந்தவர்கள் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தினர்.

மேடையை நோக்கி கல்லெறி, பொல்லெறி! கூட்டம் குழம்பியது. மகாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் தலை தெறிக்க ஓடினார்கள். அல்லோல கல்லோலம் வெளியூர்களிலிருந்து வந்த பெரிய ஹஸரத்மார் வெளியேற முடியாத நிலை.

இவ்வேளையில் தான் மகாநாடு நடைபெற்ற செயின் முதலாளியின் கட்டிடத்துக்கு பக்கத்தில் உள்ள தனது வீட்டில் இருந்த சட்டத்தரணி அஷ்ரப் ஓடி வந்தார். பொலிஸாரை அழைத்தார். பொலிஸாருக்கு கட்டளைகள் பிறப்பித்தார். வந்திருந்த அறிஞர் பெருமக்கள் அவ்விடம் இருந்து அகன்று செல்ல அன்று கைகொடுத்தவர் இந்த அஷ்ரப்தான். மகாநாட்டு ஏற்பாட்டாளர்கள் கூட ஓடித் தப்பி விட்டனர். வந்திருந்த அறிஞர் பெருமக்கள் எமது எதிர்காலத் தலைவருக்கு நன்றி கூறினர்.

அந்த நெருக்கடியான நேரத்தில் அஷ்ரபின் துணிச்சலும் நிதானமும் யாவரையும் வியக்க வைத்தது. அண்மையில்நான் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் முன்னாள் தலைவர் மௌலவி M.M.A முபாரக் அவர்களிடம் அந்த கூட்ட நிகழ்வுகள் நினைவு இருக்கிறதா? எனக் கேட்க (ஏனெனில் அவரும் அந்த மகா நாட்டுக்கு வந்தவர்களில் ஒருவர்)

"ஓமப்பா அன்றுதான் நாங்கள் அஷ்ரப் என்ற ஒருவர் பற்றியும் அவரது கட்டளையிடும் திறன் பற்றியும் அறிந்தோம். அன்று அவர் பொலிஸ் அதிகாரிகளை நோக்கி இட்ட கட்டளைகள் இன்றும் எனது நினைவில் நிழலாடுகிறது" என்றவர் அஷ்ரபின் அந்த நேரத்திலான துணிச்சலினால்தான் நாம் பாதுகாப்பாக வெளியே வர முடிந்தது. அவர் முன்நின்று கொழும்பிலிருந்து வந்திருந்த அறிஞர் பெருமக்களுக்கு வாகன ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தார். எனக் கூறி அவருக்கு துஆச் செய்தார்.

இந்த மகாநாட்டைத் தொடர்ந்து தான் கூட்டங்கள், மகாநாடுகள் மூலம் அல்ல, திட்டமிட்ட அறிவு பூர்வமாகத்தான் இஸ்லாத்துக்கெதிரான சவால்களை முறியடிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இதே ஏற்பாட்டாளர்களால் கல்முனை அல்ஹாமியா அறபுக் கல்லூரி உருவாக்கப்பட்டது. ஹிமாயதுல் இஸ்லாம்

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமே இதை உருவாக்கியதால் அக்கல்லூரிக்கு அல் ஹாமியா எனப் பெயரிடப்பட்டது. ஹிமாயதுல் இஸ்லாம் தலைவராக இருந்த முஸ்தபா மௌலானா அல் ஹாமியாவின் முதல் அதிபரானார்.

# ஜம்இய்யதுல் உலமா கருத்தரங்கில்

## 1986ம் ஆண்டு

இலங்கை / இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகமுன் முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கை எழும்பிக்கொண்டிருந்த காலமது. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளர். மௌலவி M.J.M றியாழ் இது தொடர்பான ஒரு முழுநாள் கருத்தரங்கை தெமட்டக் கொடை வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தார். இதில் முக்கிய பேச்சாளர்களாக எம்.ஐ.எம். முஹிதீனும் எம்.எச்.எம். அஷ்ரபும் அழைக்கப்பட்டிருந்தனர். இருவருக்கும் தலா ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் கருத்துரை வழங்கவென மூதூர் மஜீத், தொப்பி முஹிதீன், காத்தான்குடி அகமத் லெவ்வை எம்.எம். முஸ்தபா, போன்றவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இக் கூட்டத்தில் எம்.ஐ.எம். முஹிதீன் உத்தேச முஸ்லிம் மாகாண எல்லையை வரைந்து பெரும்படத்துடன் வந்து கொழுவி அது பற்றி விளக்கமளித்துக் கொண்டிருந்தார். அஷ்ரப் எதிர்கால இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான ஆழமான ஓர் உரையை ஆற்றினார். வரலாற்று ரீதியாக முஸ்லிம் சமுதாயம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருப்பதை புள்ளி விபரமாக எடுத்துக் கூறிய அவர் முஸ்லிம் மாகாண சபையின் அவசியத்தை மிகவும் முக்கியப்படுத்தி தனது உரையை முடித்தார். தான் கண்டியில் நடைபெறும் திருமண நிகழ்வொன்றில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதற்காக அவசரமாகப் போகவிருப்பதையும் வெளிப்படுத்தினார். இவரைத் தொடர்ந்து முன்னாள் நிந்தவூர் பாராளுமன்றப் பிரதிநிதி எம்.எம். முஸ்தபா சபையை வெகுவாகக் கவரும் விதத்தில் உரையாற்றினார். அஷ்ரப் பேசிய அனைத்தும் பேப்பர்கதையென்றும் சட்டக்கல்லூரியில் கொடுக்கும் பாடக் குறிப்பென்றும் சாடினார். இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட மாட்டாதென்றும் முஸ்லிம் மாகாணக் கோரிக்கை தேவை அற்றதென்றும் அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பே தேவை என்றும் வலியுறுத்தி சபையையே ஒரு கலக்குக்கலக்கி விட்டார் முஸ்தபா. இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் இரண்டு மணிநேரங்கள் பேசப்பட்ட விடயங்கள் சுக்கு நூறாகும் நிலையில்; உடனே அஷ்ரப் றியாழ் மௌலவிக்கு ஒரு குறிப்பை அனுப்பினார். தான் அவசரமாக கண்டி செல்லவிருப்பதால் முஸ்தபாவின் பேச்சுக்கு பதிலளிக்க ஒரு சந்தர்ப்பம் தருமாறும் கேட்க பத்து நிமிடம் அவருக்கு வழங்கப்பட்டது. அப்பொழுது அஷ்ரப் மிகவும் நிதானமாகப் பேசினார். இனப்பிரச்சினை ஓர் ஆபத்தான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்று நாம் கூற அவ்வாறான நிலையில் அது இல்லை என்று கூற சகோதரர் முஸ்தபாவுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இந்தியாவின் பிரதம மந்திரி இந்திரா காந்தியின் காரியாலயத்தில் இலங்கை விவகாரத்துக்கென ஒரு மேசை ஒதுக்கப்பட்டு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்திய வானொலிச் செய்திகளைக் கேட்டால் கூட அவர்கள் இலங்கை விவகாரத்தில் எடுக்கும் அக்கரையை அவதானிக்க முடியும் என்று ஆற்றொழுக்காக இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு எவ்வாறு உள்ளது என்பதைத் தெளிவாக்கிவிட்டு கண்டிக்குச் சென்றார். அதன்பிறகு சபை அஷ்ரபின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அஷ்ரபின் பேச்சின்பின் முஸ்தபாவின் வாதம் சுக்கு நூறாகியது. முஸ்தபா நடப்பு விவகாரங்கள் பற்றிய அறிவில்லாதவர் என்பது போல் நிலைமை உருவானது. உண்மை என்னவென்றால் இந்தியாவின் தலையீடு பற்றி அன்று அஷ்ரப் கூறிய எதிர்வு கூறல்கள் அனைத்தும் பின்னாளில் நடைபெற்று இலங்கை இந்திய ஒப்பந்தம் வரை அது சென்றதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

இக் கருத்தரங்கில் அஷ்ரப் பேசியபோது முஸ்லிம் மாகாணசபை என்ற எண்ணக்கருவைச் சாத்தியமானதாகக்காட்டிய பெருமை M.I.M. முகைதீனையே சாரும் என்றும் முஸ்லிம்களாகிய நாங்கள் இலங்கையில் பலபாகங்களிலும் செறிந்து வாழ்கின்றோம். அதாவது தமிழ்ப்பிரதேசங்களில் தமிழர்களுடனும் சிங்களப் பிரதேசங்களில் சிங்கள மக்களுடனும் வாழ்கின்றோம். தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்து ஒரு மாகாணமாக ஆக்க வெண்டுமென்று தமிழ்மக்களும் அதனை அவ்வாறு இல்லாமல் இரண்டும் வெவ்வேறாகவே இருக்கவேண்டுமென்று சிங்கள மக்களும் கூறி வருகின்றனர். இந்நிலையில் முஸ்லிம்களாகிய நாம் இணைப்புக்கு ஆதரவாக இருந்தால் சிங்கள மக்களுடன் வாழும் எமது முஸ்லிம் சகோதரர்களுக்குப் பிரச்சினை ஏற்படும். இணைப்புக்கு எதிராக இருந்தால் வட,கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எம்மை எதிரியாகக் கருதுவர். எனவேதான் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையை நாம் எடுக்க விரும்புகின்றோம். அதுவே முஸ்லிம் மாகாணக் கோரிக்கையின் ஒரு காரணமாகும் என விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்கூட்டத்தில் காத்தான்குடி அகமத்லெவ்வை, மசூர்மௌலானா ஆகியோர் முஸ்லிம் மாகாணத்தை ஆதரித்து உரையாற்றினர். மூதூர் மஜீதும் தொப்பி முகீதீனும் அவ்வேளை சுதந்திரக் கட்சியில் இருந்ததால் அக்கட்சி முன்வைத்த வடகிழக்கு இணைப்புக்கெதிரான கருத்தையே முன்வைத்தனர்.

கருத்தரங்கின் இறுதியில் அவ்வைபவத்துக்கு தலைமை தாங்கிய அன்றைய ஜம்இய்யதுல் உலமா உபதலைவர் மௌலவி M.M.A. முபாரக் அவர்கள் மதீனா என்ற தளத்தில் வேரூன்றிய பின்னர்தான் இஸ்லாம் பெரு வளர்ச்சி பெற்றது. எனவே வளர்ச்சிக்கு ஒருதளம் தேவை. இவ்வகையில் முஸ்லிம் மாகாணம் அமைவது தேவையானது என்ற கருத்தைத் தெரிவித்து கூட்டத்தை நிறைவு செய்தார்.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற நான் சென்றபோது சகோதரர் அஷ்ரபும் சேகு இஸ்ஸதீனும் அங்கு வந்து கொண்டிருந்தனர். மதீனாப் பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து வந்த பின்னர் அன்றே சந்தித்ததால் என்னை சேகு இஸ்ஸதீனிடம் அறிமுகப்படுத்திய அஷ்ரப் இவர் சட்டக்கல்லூரியின் மாணவர், இவரைத் தொடர்ந்து பயிலவேண்டுமென்று நான்கேட்கிறேன். நீங்களும் கூறுங்கள் என்று கூறினார். அவ்வேளை அவ்விடத்தில் முன்னாள் எம்.பி. முஸ்தபா வந்தவுடன் அவர் புதிதாக ஹஜ்ஜுக்குச் சென்றுவந்ததால் அஷ்ரப் அவருடன் கட்டித் தழுவி முஸாபஹாச் செய்தார்.

## நூல் வெளியீடு

நான் எழுதிய முதல்நூலான "இஸ்லாமும் கவிதையும்" 1987ம் ஆண்டு கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதற்கு பிரதம அதிதி பொத்துவில் எம்.பி. சகோதரர் M.I. உதுமாலெவ்வை அவர்கள். அவ்விழாவில் சகோதரர் உதுமாலெவ்வை பேசிய பேச்சு கிழக்கு முஸ்லிம்களும் கொழும்புத் தலைமையும் எனும் தலைப்பில் பத்திரிகைகளில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

அந்நூலில் அமைச்சர்களான M.H. முகம்மத், A.R. மன்சூர் ஆகியோர்களின் வாழ்த்துச் செய்திகளும் இடம்பெற்றிருந்தன. புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவிலுள்ள மௌலானா ஹோட்டலில் இந்நூல் விற்பனைக்கிருந்த போது அதனைப் புரட்டிப் பார்த்த சகோதரர் அஷ்ரப் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாட வில்லை என்று ஹோட்டல் உரிமையாளர் சகோதரர் M.T.M. றஷீன் என்னிடத்தில் கூறினார். அந்த இரு வாழ்த்துச் செய்திகளும்தான் அதற்குக் காரணம் என்பது எனது எண்ணம்.

1990ல் எனது இரண்டாவது நூலான "சாந்திவழி" என்ற குத்பாப் பேருரையை வெளியிட்ட போது சகோதரர் அஷ்ரப் மு.கா. வை ஸ்தாபித்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். எனவே இவரை அழைத்தே விழாவை நடத்த வேண்டுமென்று முடிவெடுத்தேன். றண்முத்துஹோட்டலுக்குச் சென்று அதன் தவிசாளர் அல்ஹாஜ் A.W.M. அமீரிடம் விழா பற்றிக் கதைத்தபோது யார் யார் அதிதியாக வருகிறார்கள் எனக்கேட்டதும் நான் அஷ்ரப் பெயரைச் சொன்னதுதான் தாமதம் அஷ்ரப் வருவதென்றால் நான் ஹோட்டலைத் தரமுடியாது என மறுத்து நீ ஒரு முஸ்லிம்காங்கிரஸ்காரனா? இங்கு முஸ்லிம்காங்கிரஸுக்கு இடமில்லை என்று ஒரேயடியாகக் கூறிவிட்டார். அவ்வேளை நான் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக்கல்லூரி அதிபராகவிருந்ததால் அதன் தலைவர் பஸீல் ஏ.மஜீதின் கொழும்பு இல்லத்தில் இருந்து சகோதரர் அஷ்ரபுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் அவ்வேளை பைப் றோட் வீட்டில் வசித்தது ஞாபகம். தாங்கள் தற்போது எங்கு இருந்து பேசுகிறீர்கள் எனக் கேட்க பஸீல் ஏ. மஜீத் வீட்டில் என நான் கூறியதும் நீங்கள் அங்கேயே இருந்துகொள்ளுங்கள் நான் அங்கு வந்து உங்களைச் சந்திக்கின்றேன் என்றவர், சில நிமிடங்களில் சகோதரர் ஹஸன் அலியுடன் அவ்விடம் வந்து சேர்ந்தார்.

கிழக்கில் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் நிலவிய நேரமது. ஊர் நிலமையை விசாரித்த பின் நூல் வெளியீடு பற்றிக் கலந்துரையாடினார். கொழும்பு பழைய நகரமண்டபத்தில் வெளியீட்டு விழாவை நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

நீண்ட நேரம் அங்கு நாம் பலவிடயங்கள் பற்றிக் கலந்துரையாடினோம். எமது அனைவருக்கும் பஸீல் ஏ. மஜீத் அவர்களின் இளைய மகள் திருமதி மஹ்ரூப் இரவு உணவைத் தயாரித்து வழங்கினார்.

அன்றைய எமது தீர்மானத்தின் படி கொழும்பு நகர மண்டபத்தில் எனது "சாந்திவழி" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. சகோதரர் அஷ்ரப் மட்டக்களப்பு எம்.பி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் கலாச்சார அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். அன்றைய முஸ்லிம் கலாச்சார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.எம். ஜெமீல் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் பேசிய அஷ்ரப் 'அவ்வேளை கிழக்கில் நடைபெற்றுக்கொண்டிருந்த வகை, தொகையற்ற கைதுகள், கம்பங்கேட்டல் போன்ற நிகழ்வுகளைப் பற்றிப் பிரஸ்தாபித்ததுடன் இந்நூலாசிரியர் ஒரு சட்டமாணவன் என்பது பலருக்குத் தெரியாது என்று குறிப்பிடவும் தவறவில்லை.

# புனித மக்காப் பயணத்திலே

## 1992ம் ஆண்டு

பிரேமதாஸ ஜனாதிபதியாக பதவிவகித்துக்கொண்டிருந்த காலமது. அஷ்ரப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் ஜனாதிபதியை ஆதரித்தவராக இருந்தார். கல்முனையைச் சேர்ந்த ஏ.ஆர். மன்சூர் வர்த்தக வாணிப அமைச்சர்.

இவ்வேளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அஷ்ரப் கரையோர மாவட்டம் அமைவதன் அவசியத்தை வலியுறுத்திக்கொண்டிருந்தார். ஜனாப் மன்சூர் இதற்கு ஆதரவான நிலையில் இருக்கவில்லை.

இவ்வேளை 1992 புனித ஹஜ்ஜுக்காக அக்கரைப்பற்று ஹானி ட்ரவல்ஸ் உடன் அஷ்ரப் இணைந்துகொண்டார். அல் றிஸ்மி ட்ரவல்ஸ் இன் பிரதம வழிகாட்டியாக நான் இருந்ததாலும் விமானத்தை எனது ட்ரவல்ஸே வாடகைக்கு அமர்த்தியதனாலும் முதலாம் வகுப்பில் எனக்குப் பக்கத்தில் சகோதரர் அஷ்ரபுக்கு ஆசனம் வழங்கப்பட்டது.

விமானத்துள் அஷ்ரப் வந்ததும் அல்றிஸ்மி உரிமையாளர் நாபி ஹாஜியார் அவரை வரவேற்றபோது நாபியை இனங்கண்ட அஷ்ரப் என்னோடு சாறன் வியாபாரம் செய்த நாபியா நீங்கள்? எனக் கேட்க அவர், ஆம் சேர் என்றார். (சகோதரர் அஷ்ரப் சட்டக் கல்லூரியில் படிக்கும்போது மருதமுனையில் இருந்து சாறன்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக் கொண்டு கொழும்பில் விற்கும் பகுதி நேரத் தொழிலிலும் சில காலம் ஈடுபட்டார். அதனை அவர் எப்போதும் பெருமையாகப் பேசிக் கொள்வார்)

விமானம் பறந்து கொண்டிருந்தபோது மைக்கில் மக்களுக்கு ஏதாவது பேசுங்கள் என்று கூறினேன். அப்போது அவர், நான் பேசினால் உங்களுக்கும் சேர்த்து ஆட்கள் ஏசுவார்கள். விட்டுவிடுங்கள் என்றார். ஆனாலும் நான் விடவில்லை. நான் ஹாஜிகளுக்கு முக்கியமான சில விடயங்களை பேசிவிட்டு அவரை அழைத்தேன். உணர்ச்சிபூர்வமாக பிரயோசனமான முறையில் பேசினார்.

அன்று அவரிடம் பல விடயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். தாங்கள் தற்போது கரையோரத் தேர்தல் மாவட்டம் கோரிக் கொண்டிருக்கிறீர்கள். அது வருவது நிச்சயம் மு.கா.வின் வாக்கு வங்கிக்குப் பாதகமாக அமையும். ஏனென்றால் தற்போதைய நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை கட்சிகளுக்கு வழங்கப்படும் வாக்குகளினால் சிங்களப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதால் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காகவும் முஸ்லிம்கள் மு.கா.வுக்கு வாக்குப் போடுகிறார்கள். கரையோரத் தேர்தல் மாவட்டம் வந்து தெரிவு செய்யப்படுபவர்கள் எல்லோரும் முஸ்லிம்கள் எனும் நிலை ஏற்பட்டால் முஸ்லிம் காங்கிரஸுக்குத்தான் வாக்குப்போட வேண்டும் என்ற உந்தல் மக்களிடம் ஏற்படாது. கரையோரத் தேர்தல் மாவட்டம் வருவது மன்சூர் போன்றவர்களுக்கு அரசியல் ரீதியில் இலாபமானது. ஆனால் அவர் அதைப் புரிந்து கொள்ளாமல் தாங்கள் கேட்கிறீர்கள் என்பதற்காக எதிர்க்கிறார்என்று நான் கூறியதும் அஷ்ரப் சொன்னார். "குறுகிய தேர்தல் இலாபத்தை மையமாக வைத்து நான் எதையும் கோருவதில்லை. அம்பாறை மாவட்ட முஸ்லிம்களாகிய நாம் இன்று மட்டக்களப்புப் பாதையை இழந்துவிட்டோம். எமக்கு மிஞ்சியிருப்பது அம்பாறை மார்க்கம் ஒன்றே. நாளை ஒரு தேர்தலில் முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு அது சிங்களப் பிரதிநிதித்துவத்திற்கு சரிவை ஏற்படுத்துவதாக சிங்கள மக்கள் உணரும்போது எமது அம்பாறை வழிக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தும். எனவேதான் அம்பாறை சிங்கள மக்களிடம் இது தொடர்பான பிரச்சினைகளை விட்டு நாம் ஒதுங்க வேண்டியுள்ளது. கரையோரத் தேர்தல் மாவட்டம் கோருவதற்கு இது முக்கிய காரணம்" என்றார்.

இவ்விடத்தில் முக்கிய விடயம் ஒன்றை நான் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கௌரவ ஜே.ஆர். ஜெயவர்தன ஆட்சிக்காலத்தில் (1977-1988) மாவட்டக் கச்சேரிகளை நிறுவுவது தொடர்பாக ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. மொரகொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமிஷன் என்பது அதன் பெயர், அக்கமிஷன் பல புதிய மாவட்டங்களை நிறுவுவதற்கு சிபாரிசு செய்தது. கம்பஹா, கல்முனை போன்றவை அவற்றுள் அடங்கும். அவ்வாறு அக்கமிஷன் கல்முனை மாவட்டக் கச்சேரியைச் சிபாரிசு செய்தபோது, அவ்வேளை இருந்த இம்மாவட்ட அரசாங்கக் கட்சி முஸ்லிம் எம்.பிக்கள், அமைச்சர்கள் அவ்வாறு கல்முனையில் மாவட்டம் நிறுவ வேண்டாம் என அரசைக் கேட்டுக் கொண்டார்கள்.

இதனால் அச்சிபாரிசு கிடப்பில் போடப்பட்டது. முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கு அழுத்தம் கொடுத்து இதனை நிறுவக் கோரும் முயற்சியில் இப்பிரதேச மக்களும் அதிக கவனம் செலுத்தவில்லை. அக்காலத்தில் மக்கள் இது போன்ற விடயங்களில் அதிகம் அலட்டிக் கொள்ளும் தன்மை இருக்கவில்லை.

ஜே. ஆரின் பின்னர் ஜனாதிபதியான ஆர். பிரேமதாசவிடம் அஷ்ரப் இக் கோரிக்கையை முன்வைத்தபோதும் அவ்வேளை J.R. அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தவர்களே இவரின் ஆட்சியிலும் அமைச்சர்களாக விருந்து அதனை எதிர்த்ததால் அதனை வழங்க பிரேமதாச முன்வரவில்லை.

1994ல் அஷ்ரப் பலம் வாய்ந்த அமைச்சராக இருந்தபோதிலும் கரையோர மாவட்டம் ஒன்றைப் பெற்றுக்கொள்வது அவருக்கு பெரும் பிரச்சினையாக மாறியது. ஏனெனில் அதனை எதிர்க்கும் தரப்புக்கள் அதிகரித்துவிட்டன. அம்பாறைச் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு இருந்ததால் அஷ்ரபின் இக்கோரிக்கையை அரசு தட்டிக்கழித்தது.

எனவே 2000ம்ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கு அரசாங்கத்தோடு ஒத்தழைப்பதற்கு நிபந்தனையாக கரையோர மாவட்டக் கோரிக்கையை அஷ்ரப் முன்வைத்தார். அத்தேர்தல் காலத்தில் அஷ்ரப் காலமானதால் அவரைத் தொடர்ந்து கட்சித் தலைமைப் பதவியைப் பெற்ற சகோதரர் றவூப் ஹக்கீம் இக்கோரிக்கையை வலியுறுத்தியபோது, அரசாங்கத்தின் கோபத்திற்குள்ளானார். இக்கோபம் இறுதியில் அவரது அமைச்சுப் பதவிக்கும் ஆபத்தாக முடிந்தது.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரச மாற்றத்தை தொடர்ந்து பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அவர்களிடம் மு.கா. இக்கோரிக்கையை முன்வைத்த போது அதற்கெதிராக அம்பாறையில் பெரும்பான்மை மக்களும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் J.V.P. யினரும் இணைந்து கோரிக்கைக்கு எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம் என்னவெனில் இதனை எதிர்ப்பதில் தமிழ் மக்கள் சிங்களவர்களுடன் ஒன்றிணைந்தது தான் தமிழ்த் தரப்பினர் சிலரும் இணைந்து இக்கோரிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். விளைவு: விடயம் கிடப்பில் போடப்பட்டது.

இங்கு நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் ஜே.ஆர். அரசில் எமக்கு இலகுவாகக் கிடைக்கவிருந்த ஒரு மாவட்டக் கச்சேரி, அன்றிருந்த அரசியல் வாதிகளின் சாணக்கியமற்ற, தீர்க்கதரிசனமற்ற முடிவுகளினால் எமது முஸ்லிம் பிரதேசங்கள் எவ்வளவு தூரம் பாதிப்புக்குள்ளானது என்பதுதான். அன்று இலகுவாகக் கிடைக்கிவிருந்தது இன்று போராட்டம் நடாத்தியும் கிடைக்காத தொன்றாக மாறிவிட்டது. சுனாமி ஏற்பட்டபின்தான் இக்கச்சேரி இல்லாத குறை நன்கு உணரப்பட்டது.

மொரகொட கமிஷன் சிபாரிசு செய்துள்ள கல்முனைக் கச்சேரியை ஏன் எதிர்க்கிறீர்கள் என எமது மாவட்ட முஸ்லிம் பிரதிநிதி ஒருவரிடம் அவ்வேளை கேட்கப்பட்ட போது அவர் அளித்த பதில் "நாம் கல்முனைக்கென்று ஒரு கச்சேரியைப் பிரித்தெடுத்தால் எமது மாடுகளை மேய்ப்பதற்கு இடம் பிரச்சினையாகி விடும். அம்பாறையில்தானே எமது மாடுகள் மேய்கின்றன" என்றாராம்.

அஷ்ரப் இம்முறை ஹஜ்ஜுக்கு ஹானி ட்ரவல்ஸ் மூலம் வந்ததாகக் கூறினேன் அல்லவா! அந்தப் பிரயாணத்தில் ஹானி ட்ரவல்ஸ் உரிமையாளர் மௌலவி அபுல் ஹஸன் அவரது ஹாஜிகளோடு வருவதற்குரிய விமான ஆசனம் கிடைக்க வில்லை. கடைசி நேரத்தில் அவர் வேறு விமானத்தில் வருவதாகவும் அவரது குறூப்பை மக்கா கொண்டு சேர்க்கும் பொறுப்பை சகோதரர் அஷ்ரபே ஏற்க வேண்டியிருந்தது.

ஹாஜிகளை மக்காவுக்கு அழைத்துச் செல்லும் முகவர்கள் ஜித்தா விமான நிலையத்தில் வைத்து பல்வேறு நிருவாக நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். அது மிகவும் சிரமமும் சிக்கல் நிறைந்ததும் ஆகும். மிகவும் அனுபவம் நிறைந்த முகவர்கள் கூட இதற்காக மிகவும் சிரமப்படுவர்.

ஜித்தா விமான நிலையத்தை எமது விமானம் அடைந்ததும் பொருட்களுடன் விமான நிலையத்தை விட்டு மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். ஆனால் சகோதரர் அஷ்ரபும் பொத்துவில் டாக்டர் அமீனுதீனும் முகவர் நிலையத்துக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உணவுப்பொருட்கள் கொண்ட மூடைகளை சுமந்து சுமந்து வெளியேற்றிக் கொண்டிருந்தனர். இருவரையும் பார்க்கும்போது பாவமாக இருந்தது. டாக்டரின் முகத்திலிருந்து வியர்வை கொட்டிக்கொண்டிருந்தது. ஒருவாறாக சாமான்களை அப்புறப்படுத்தி விட்டு வெளியே ஹாஜிகளுடன் வந்தார்கள். ஹானி ட்ரவல்ஸ் ஏஜென்ஸ் வேலை சகோ. அஷ்ரபிடம், அப்போது சகோதரர் அஷ்ரப் தனது வேலை எவ்வளவு சிரமமானது என்பதை அறிந்திருந்தார். எனினும் துணிந்த கட்டையல்லவா அது! என்னிடத்தில் அவர் ஆதம்பாவா, எம்மை விட்டு விட்டு நீங்கள் போகக் கூடாது, எமக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உண்மையில் ஜித்தா விமான நிலையத்தில் அந்த உதவியை ஓர் ஏஜென்ஸியுடன் வந்தவர் மற்றோர் ஏஜென்ஸிக்குச் செய்வது சிரமம். ஏனெனில் அந்தளவுக்கு அந்தந்த முகவர்களுடன் வந்த ஹாஜிகள் பொறுமையாக இருக்கமாட்டார்கள். நடைமுறையிலும் அது சாத்தியமில்லை. எனவே நான் அவரிடம் அது மிகவும் சிரமமாக இருக்குமே என்று கூறிவிட்டு எனது ஹாஜிகளை விமான நிலையத்திலிருந்து மக்கா அழைத்துச் செல்லும் பணியை தொடர்ந்து கொண்டிருந்தேன். இவ்வேளை சகோதரர் அஷ்ரப் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் கவனிக்காமலும் இல்லை.

நான் எனது ஹாஜிகளை மக்கா செல்வதற்கான பஸ்ஸில் ஏற்றிவிட்டு அவர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருக்கும் போது அஷ்ரப் தனது ஹாஜிகளுடன் பஸ்ஸை நோக்கி வந்து கொண்டிருந்தார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் முன் அனுபவம் இல்லாதவர்களால் அவ்வாறு விரைவாக ஹாஜிகளை பஸ்ஸில் ஏற்றுவதற்கு கொண்டுவர முடியாது. நான் அவரிடம் சென்றபோது என்னை விட்டுவிட்டுத்தானே வந்தீர்கள், நாங்களும் வந்து விட்டோம் என்றார்.

எந்த இடத்திலும் தனது திறமை முத்திரையைப் பதிக்கும் ஆற்றலை அவரிடம் அல்லாஹ் அளித்திருந்தான். எப்பிரச்சினையிலும் எதிர் நீச்சல் போட்டு வெல்வதுதான் அவருக்கு மிகவும் விருப்பமானது -மினாவில் குர்பான் கொடுக்கச் சென்று கொண்டிருந்தபோது அஷ்ரபும் பாலமுனை ஹாஷிம் மௌலவியும் வந்தார்கள். அஷ்ரப் தலைப்பாகை கட்டிக்கொண்டும் சாறமும் பெனியனும் அணிந்து கொண்டு வந்தார். அப்போது என்னிடம் அஷ்ரப் தங்களின் 'மதீனாவின் மாண்புகள்' நூலை இரண்டு தரம் வாசித்து முடித்து விட்டேன். மூன்றாம் முறையும் வாசிக்க வேண்டும் போல் இருக்கிறது. உண்மையாகவே நல்லதொரு புத்தகம் என்று பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்நூல் வடகிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசுக்காகத் தெரிவான போது கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் எனக்குரிய பரிசும் பொன்னாடையும் இவரால்தான் வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது)




அப்போது ஹாஷிம் மௌலவியிடம் அஷ்ரப் என்ன செய்கிறார் என்று கேட்டேன். அவர் என்னிடம் கூறினார். "ஹஸரத் நாங்கள் ஒரே சகனிலே சாப்பிடுகிறோம். சாப்பிட்டு முடிந்ததும் எல்லோருக்கும் முன்பு எழுந்து அவரே குடிக்க நீர் கொண்டு வருகிறார். எங்களால் ஒரு நேரம்கூட அதனைச் செய்வதற்கு சந்தர்ப்பம் தராமல் அவரே செய்கிறார். எமது சகனைக்கூட அவரே கழுவுகிறார். இவரா அந்த அஷ்ரப் என்று நாம் வியக்கும் அளவுக்கு அவர் ஊழியனாகச் செயற்படுகிறார்' என்றார்.

இதற்கு முன்னரும் அவர் 1990ல் 'சேப்வே' ட்ரவல்ஸுடன் இணைந்து தனது தாயாருடன் ஹஜ்ஜுக்கு வந்திருந்தார் எனக் கூறினேன் அல்லவா?

அவர் மினாவுக்குச் சென்று குர்பான் கொடுத்த ஆட்டை உரித்து அவருடன் சாய்ந்தமருது ஸ்டார் ஓப்செட் உரிமையாளர் ஹதியதுல்லாவும் இருவருமாக இரண்டு ஆடுகளைத் தோளில் சுமந்து கொண்டு வந்தனர். இவற்றாம் ஆடையுடன் உரித்த ஆட்டைச் சுமந்து கொண்டு வந்த காட்சி இன்னமும் நினைவில் நிழலாடுகிறது.

90ல் மினாவில் நாங்கள் இருந்தபோது வடகிழக்கில் அரச புலிகள் யுத்தம் ஆரம்பமாகி இருந்தது. அந்த ஹஜ்ஜுக்கு வருவதற்காக கல்முனையிலிருந்து நாம் கொழும்புக்கு வரப்பட்டபாடு சொல்லிலடங்காது. மினாவில் ஒவ்வொருவர் வாயிலும் இலங்கை நிலை பற்றிய கதையே! நான் சகோதரர் அஷ்ரபிடம் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தை இது உண்மைதானா என்று கேட்டபோது அவர் பதில் சொல்லவில்லை. பின்னர் என்னிடம் கூறினார் நான் உங்களிடம் ஏதும் கூற நான் கூறுகின்றேன் என்று கதை பரவும்" இது போன்ற நேரங்களில் நாங்கள் மௌனமாக இருப்பது நல்லது என்றார். மினாவில் அஷ்ரபும் நானும் தங்கியிருந்த கூடாரங்கள் பக்கத்தில் அமைந்திருந்ததால் அடிக்கடி சந்திக்கமுடிந்தது. சேப்வேட்ரவல்ஸில் வந்திருந்த கண்டி சலாஹுதீன் மௌலவியின் பயானைக் கேட்டு அடிக்கடி அழுத கண்ணும் சிந்திய முக்குமாகவே அஷ்ரப் காணப்பட்டார்.

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தந்தை

இலங்கையில் பல பல்கலைக்கழகங்கள் இருந்தபோதும் 1970 வரை தமிழ்ப் பிரதேசங்களில் அவ்வாறான பல்கலைக்கழகங்கள் எதுவும் இருக்கவில்லை. 1965-1970 வரை பதவி வகித்த ஐ.தே.க. ஆட்சியில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் போன்ற தமிழ் அரசியல்கட்சிகள் முக்கிய பங்காளிகளாக இருந்த போதும் தமிழ்ப்பிரதேசங்களில் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்ற போதும் அதனை நிறுவுவதற்கு சிபாரிசு செய்வதற்காக பல்கலைக்கழகக் கமிஷன் நியமிக்கப்பட்டபோதும் விடயம் நிறைவேறவில்லை. தமிழ் அரசியல் கட்சிகளோ ஒத்த கருத்தின்றி ஒவ்வொரு விதமாகக் கோரிக்கைகள் விட்டுக் கொண்டிருந்தன. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி திருமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்றும் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் இந்து பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்றும் வி. பொன்னம்பலம் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்றும் இவ்வாறு பல்வேறு கோரிக்கைகள் எழுந்து கொண்டிருந்தன. கோரிக்கைகள் நிறைந்ததால் அரசோ கமிஷனை நியமித்தது, அவ்வளவுதான். இவ்வாறு தமிழ்க்கட்சிகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென்று கோரிக்கை விட்டுக் கொண்டிருந்த வேளை மூதூர் எம்.பியாக விருந்த M.E.H. முகம்மதலி முஸ்லிம் கலாச்சார பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து தனி நபர் பிரேரணையாக பாராளுமன்றத்தில் மசோதா ஒன்றைச் சமர்ப்பித்தார். ஐ.தே.க., சுதந்திரக்கட்சி என்பன இம்மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தன. தமிழரசுக்கட்சி இதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. பின்னர் சில மாதங்களில் மூதூர் அலியை தமிழரசுக்கட்சி கட்சியிலிருந்து விலக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சி அமைத்தபோது கல்வி அமைச்சராக டாக்டர். பதியுதீன் மஹ்மூத் நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் தேசியப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவுவது என அரசு முடிவு செய்தது. திருநெல்வேலியில் கலைப்பீடத்தையும் வட்டுக்கோட்டையில் விஞ்ஞான பீடத்தையும் நிறுவுவதென முடிவெடுத்து. யாழ் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைக்க கல்வி அமைச்சர் டாக்டர். பதீ யாழ்ப்பாணம் சென்றார். இரு கல்லூரிகளை அழித்து பல்கலைக்கழகம் நிறுவப்படுவது தமிழினத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகம், அநீதி என பாரிய ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்கள் எல்லாம் நடந்தன. எனினும் முன்வைத்த காலைப் பின்வைக்காமல் டாக்டர் பதீ பல்கலைக்கழகத்தைத் திறந்து வைத்தார். டாக்டர் கைலாசபதி அதன் உபவேந்தராக நியமிக்கப்பட்டார். இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் பலர் அங்கு சென்று படிப்பைத் தொடர்ந்தனர்.

பின்னர் 1977ல் ஜே.ஆர் அரசு ஆட்சிக்கு வந்தபோது முக்கிய அமைச்சராக கல்குடா எம்.பி.கே. டபிள்யூ, தேவநாயகம் நியமிக்கப்பட்டார். கிழக்கு மாகாணத்தின் ஒரேயொரு 'கெபினட்' அந்தஸ்து அமைச்சரும் இவரே. யாழ்ப்பாண விரோத மனப்பாங்கைக் கொண்டிருந்த தேவநாயகம் கிழக்கில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ முன்வந்தார். முந்தைய அரசு யாழ்ப்பாணத்தில் இரண்டு சிரேஷ்ட பாடசாலைகளைச் சுவீகரித்து பல்கலைக்கழகம் அமைத்தது போல் கிழக்கில் புகழ்பூத்த வந்தாறு மூலை மத்திய கல்லூரியில் இப்பல்கலைக்கழகத்தை நிறுவ முன்வந்தார்.

தமிழ்ப் பிரதேசத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் கொடுக்கப்பட்டு விட்டதால் கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. அவ்வேளை அம்பாறை மாவட்டத்தில் சிரேஷ்ட அரசியல்வாதியாக இருந்தவர் பிரதியமைச்சர் சம்மாந்துறை எம்.பி எம். ஏ. அப்துல் மஜீத் ஆவார்.

திரு. தேவநாயகம் அவர்கள் பிரதியமைச்சர் மஜீத் சகிதம் உத்தேச பல்கலைக்கழகம் தொடர்பாக ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினார். உத்தேச கிழக்குப் பல்கலைக்கழகம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஐம்பதுக்கு ஐம்பது என்ற அடிப்படையில் அமைக்கப்படும் என்றும் இரு சமூகங்களினதும் கலை, கலாச்சார மேம்பாட்டிற்கு அது பாடுபடும் என்றும்

சாந்துளை பதிப்பகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் நிருவாக பீடம் மட்டக்களப்பு நகரிலும் வளாகங்கள் வந்தாறு மூலை, காத்தான்குடி நகர்களிலும் விவசாயபீடம் சம்மாந்துறையிலும் கலாசாரபீடம் கல்முனையிலும் அமைக்கப்படும் என்றும் அப்பத்திரிகையாளர் மாநாட்டில் பிரகடனப்படுத்தினார். அம்மகாநாட்டில் கிழக்கின் பலமுஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகம் தேவநாயகத்தின் அருமுயற்சியால் உருவானது. வந்தாறு மூலையில் பிரதான வளாகம் அமைந்த போதிலும் மட்டக்களப்பிலும் வளாகம் ஒன்று அமைக்கப்பட்டது. உபவேந்தராக தமிழர் ஒருவரும் வேந்தராக முஸ்லிம் பேராசிரியர் ஒருவரும் பதிவாளராக முஸ்லிம் ஒருவரும் நியமிக்கப்பட்டனர். பீடாதிபதிகளாக இரு இனத்தவரும் நியமனம் பெற்றனர்.

இவ்வாறு அப்பல்கலைக்கழகம் செயல்பட்டுக் கொண்டிருந்தவேளை 1990ல் ஏற்பட்ட யுத்தம், இனங்களுக்கிடையிலான மோதல்கள், ஏறாவூர்-காத்தான்குடிப் படுகொலைகள் என்பன இப் பல்கலைக்கழகத்தைப் பெரிதும் பாதித்தன. முஸ்லிம் மாணவர்கள் பாதுகாப்புத் தேடி வேறு பல்கலைக்கழகங்களை நாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

சில வருடங்களின் பின் ஓரளவு சுமூக நிலை ஏற்பட்டு முஸ்லிம் மாணவர்கள் கல்வியைத் தொடர மட்டக்களப்பு வந்தபோது வந்தாறு மூலையில் பயின்ற தமிழ் மாணவர்கள் மட்டக்களப்பில் வளாகம் இருக்கக் கூடதென்றும் சகல பீடங்களும் வந்தாறு மூலைக்கே வரவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர், வீதிப் போராட்டம் நடத்தி துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டனர். தமிழ் மாணவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் முஸ்லிம் மாணவர்களை மேலும் அச்சமுறச் செய்ததால் மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்வது அச்சநிலைக்குள்ளானது. முஸ்லிம் மாணவர்கள் மாத்திரமல்ல, அங்கு கடமையாற்றிய முஸ்லிம் விரிவுரையாளர்களுக்கும் அப்பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. இதனால் எத்தனையோ முஸ்லிம் மாணவர்கள், குறிப்பாக விஞ்ஞான பீடத்தில் பயின்ற அதிக முஸ்லிம் மாணவிகள் தமது கல்வியைத் தொடர்வதை விட்டுவிட்டனர். முஸ்லிம் மாணவர்களும் விரிவுரையாளர்களும் போக்கிடமின்றி அநாதரவாக விடப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில்தான் இவ்விடயத்தில் அஷ்ரப் தலையிட்டார். அமைச்சராக இருந்த அஷ்ரப் பாராளுமன்றத்தில் நடாத்திய கலந்துரையாடல் ஒன்றின் பெறுபேறாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்கள் முஸ்லிம் பிரதேசத்தில் - அம்பாறை மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவுவதற்கான அங்கீகாரத்தை வழங்கினார்.

முஸ்லிம்களுக்கு சமபங்கு என்ற நிலையில் உருவாக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் தன் கதவுகளைத் திறக்க மறுத்தபோது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை ஒலுவில் கிராமத்தில் நிறுவும் முயற்சியில் அஷ்ரப் தீவிரமாக இறங்கினார். புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராகவும் அவர் இருந்ததால் அந்த அமைச்சைப் பயன்படுத்தி பல கோடி ரூபாய்களை பல்கலைக் கழகத்துக்காகச் செலவிட்டார்.

தனக்கு மிகவும் விருப்பமான இப்பல்கலைக்கழகத்தை தனது பிறந்த தினமான 23.10.1995ல் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஒரு பகுதியில் அன்றைய கல்வி அமைச்சர் திரு. றிச்சட் பத்திரண மூலம் திறந்து வைத்தார்.

அஷ்ரபின் அரசியல் வாழ்வுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகவே இப்பல்கலைக்கழக உருவாக்கம் கணிக்கப்படுகிறது. இந்தியாவின் அலிகார் பல்கலைக்கழகத்தின் தந்தையாக சேர். செய்யது அஹ்மத் கான் எவ்வாறு கணிக்கப்படுகிறாரோ, அதேபோல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தந்தையாக அஷ்ரப் போற்றப்படுகிறார். இப்பல்கலைக்கழகம் உருவாகி அதன் முதலாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றபோது அஷ்ரப் உயிருடன் இல்லை. ஆனால் அவ்விழாவில் அவர் கௌரவக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

முஸ்லிம்களுக்கும் தமிழர்கட்கும் 50:50 என்ற வாக்குறுதியில் உருவானதொரு பல்கலைக்கழகத்தில் இருந்து படிக்கவே வழியில்லை என்ற நிலை முஸ்லிம்களுக்கு! அன்றைய முஸ்லிம் தலைமைத்துவங்கள் மேற்படி பல்கலைக்கழகத்தில் முஸ்லிம்களின் உரிமையை உறுதிப்படுத்தத் தவறியதன் விளைவே இது. தமிழ் சமூகத்துக்கு இரண்டு பல்கலைக்கழகங்கள் இருக்க முஸ்லிம்களுக்கோ ஒன்றுமே இல்லாத நிலை. கிழக்கில் ஒரு வளாகத்தைக் கூட முஸ்லிம் பிரதேசங்களில் வீங்களித்ததுபோல் அமைத்திருந்தால் இப்பரிதாப நிலை ஏற்பட்டிருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரப் காலமாவதற்கு சிலதினங்களுக்கு முன், (சரியாக ஒரு வாரம் என நினைக்கிறேன்) ஒரு வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகத்துக்கு வந்தார். அதுதான் அவரது கடைசி விஜயம். அவ்வேளை நான் விரிவுரை நிகழ்த்திக் கொண்டிருந்தேன். நேரடியாகவே அவர் நூல் நிலையப்பகுதிக்கு செல்வதை அவதானித்தேன். விரிவுரை முடிந்தபின் அவரைச் சந்திக்கலாம் என நினைத்து விரிவுரை முடிந்து வெளியே வந்தபோது அவர் பல்கலைக்கழகத்தை விட்டுச் சென்றிருந்தார். முனாஸ் மௌலவியிடம் விசாரித்தபோது தலைவர் வந்தார். ஆனால் உபவேந்தரோ பதிவாளரோ முக்கிய அதிகாரிகளோ இன்று பல்கலைக்கழகம் வரவில்லை. இதனால் அவர் அமைவுறும் நூல் நிலையத்தைப் பார்வையிட்டு விட்டுச் சென்று விட்டார் எனக் கூறினார்.

தனது வாழ்வில் தனது பெரும் சாதனையாகவே அவர் இப்பல்கலைக் கழகத்தைக் கருதினார். தனது நேரடிக் கண்காணிப்பில் இது அபிவிருத்தியடைய வேண்டும் எனவும் அவர் எதிர்பார்த்தார். இங்கு ஒரு சிறந்த முன்மாதிரியான சமூகம் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அதுவே இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு உதவவேண்டும் என நம்பினார். தனது அந்திமக்காலத்தில் இப்பல்கலைக்கழகச் சூழலில் தனது வாழ்வு அமையவேண்டும் என்றும் அவர் எண்ணியிருந்தார்.

# மீலாத்விழா ஏற்பாட்டின் போது

## 1997ம் ஆண்டு

அட்டாளைச்சேனையில் தேசிய மீலாத் விழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் அது. அஷ்ரப் அதற்கான பாரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். பிற்பகல் வேளைகளில் நான் சிலநேரங்கள் மஹ்மூத் மகளிர் கல்லூரிப்பக்கம் செல்வதுண்டு. அங்கு தொழுகை அறை ஒன்றிருந்தது. அதனுள் நான் அஸர் தொழுவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். அவ்வேளை 'ஆதம்பாவா' என்று அழைப்பதைக் கேட்டு திரும்பிப் பார்த்தேன். வேறுயாருமில்லை. அமைச்சர் அஷ்ரப்தான் "கொஞ்சம் பொறுங்கள். நானும் வருகிறேன். ஜமாஅத்தாகத் தொழுவோம்" என்றார். அவர் வந்து இகாமத் சொன்னார். நான் தொழுவித்தேன். அவரோடு இன்னும் சிலர் சேர்ந்து வந்ததால் அச்சிறிய அறையினுள் சிரமப்பட்டுத் தொழுது முடித்தோம். சலாம் கொடுத்தவுடன் அஷ்ரப் எழுந்து சென்றுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மீலாத்விழா தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டமொன்று அக்கல்லூரியில் இருப்பதாகவும் அதற்காகவே அஷ்ரப் வந்ததாகவும் அறிந்து கொண்டேன். நாசிக் பரீத் மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நானும் சில ஆசிரியர்களும் அதிபரின் காரியாலயத்துக்கு முன்னால் அமர்ந்து என்ன பேசப்படுகிறது என அவதானித்துக் கொண்டிருந்தோம்.

அவ்வேளை அங்கு அஷ்ரப் பேசினார். "அல்லாஹ்வும் அவனது மலக்குமார்களும் நபியவர்கள் மீது சலவாத் சொல்லுகின்றார்கள் என்ற அல்குர்ஆன் வசனத்தை எடுத்துக்கூறிய அவர். அல்லாஹ் நோன்பு பிடிப்பதில்லை, தொழுவதில்லை ஆனால் அவன் தனக்கென ஒரு கடமையை வகுத்துக் கொண்டான். அதுதான் நபியவர்கள் மீது சலவாத் சொல்வது' எனப் பேசிக் கொண்டிருந்தார்.

அஷ்ரப் அல்குர்ஆனுக்கு பிழையாக விளக்கம் கொடுக்கிறார் என்பதை அறிந்த நான் அவருக்கு இதன் விளக்கத்தைத் தெரிவிக்கவிரும்பினேன். எனவே வீடு வந்து அந்த அல்குர்ஆன் வசனத்திற்குரிய விளக்கத்தை தப்ஸீர்களின் உதவியால் எழுதினேன். இதனை அவருக்கு எவ்வாறு தெரியப்படுத்துவது என யோசித்துக் கொண்டிருந்தபோது அதே மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இன நல்லிணக்கத்துக்கான ஒரு கருத்தரங்கு இருப்பதாகவும் பிரதம அதிதியாக அஷ்ரப் கலந்து கொள்வதாகவும் என்னையும் அதில் ஒரு அதிதியாக கலந்து கொள்ளுமாறும் அழைப்பு வந்தது. அக்கருத்தரங்குக்கு நான் போன வேளை மேடையில் முன் வரிசையில் சகல ஆசனங்களும் நிரம்பியிருந்ததால் நான் இரண்டாம் வரிசை நோக்கிச் சென்றபோது அஷ்ரப் என்னை அழைத்து அவருக்கு வழங்கப்பட்டிருந்த இரட்டைக் கதிரையின் ஒரு பகுதியில் உட்கார வைத்தார். நான் அவ்வேளை தயாராக வைத்திருந்த அல்குர்ஆன் வசனத்துக்கான விளக்கத்தை அவர் வசம் கொடுத்தேன். ஒருதரம் வாசித்துவிட்டு மீண்டுமொருமுறை கண்ணாடியைப் போட்டு வாசித்தார். இதனை பத்திரிகையில் பிரசுரிக்கவா? எனக் கேட்டார். பிரச்சினையில்லை. ஆனால் நீங்கள் இதன் பொருளை விளங்குவதே எனது நோக்கம் என்றேன்.

ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் சகோதரர் அஷ்ரபின் சீல் குத்தப்பட்டிருந்தது. கடிதத்தை உடைத்துப்பார்த்தேன். நான் கையெழுத்தால் எழுதிக் கொடுத்த கடிதத்தை கொம்பியூட்டரில் போட்டு எனக்கும் ஒரு பிரதியை அனுப்பியிருந்தார். அதில் நான் போட்டிருந்த தலைப்பை மாற்றி விட்டு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கட்டுரையின் தலைப்பாக "அல்லாஹ் சொல்லும் அழகிய சலவாத்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனது விளக்கத்தை அவர் ஏற்றாரா இல்லையா என்பது இங்கு முக்கியமல்ல. ஆனால் எதிர் கருத்துக்களையும் உள்வாங்கும் ஆற்றல் அவரிடம் சிறப்பாகக் குடிகொண்டிருந்தது. அன்று 'பாளிகா'வில் நடந்த அந்த சமூக நல்லிணக்கம் தொடர்பான கூட்டத்தில் குர்ஆனின் வசனங்கள் சிலவற்றின் பொருளையிட்டு கலந்துரையாடினோம். அதிபரிடமிருந்து அல்குர்ஆனின் தமிழ் தப்ஸீரைப் பெற்று நிறைய விடயங்களை குர்ஆனின் நிழலில் பேசிக்கொண்டிருந்தோம். ஏனெனில் அஷ்ரப் மாத்திரமல்ல. அவரது மச்சான் முன்னாள் மாவட்ட நீதிபதி ஹுசைன் அவர்களும் குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் விலாவாரியாக எடுத்துக் கூறும் ஆற்றல் பெற்றவர். அஷ்ரபின் உறவினர்களில் ஒருவரான பஸீல் ஏ.மஜீது அவர்களும் குர்ஆன் பற்றிய நிறைய அறிவைப் பெற்றிருந்தார்.

நான் மதீனாவில் பயின்று கொண்டிருந்தபோது அஷ்ரபின் தந்தை மக்காவுக்கு வந்திருந்தார். அப்போது அவர் அஷ்ரப் தன்னிடம் முஸ்லிம் எனும் ஹதீஸ் கிரந்தத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை வாங்கிவருமாறு கூறியதாகச் சொன்னார். அவர் அதனைக்கடையில் வாங்கிக் கொண்டு சென்றார். மார்க்க அறிவைத் தேடுவதில் முன்னிற்பவர் அஷ்ரப்.

## முஸ்லிம் சமூகமே அவரது கட்சி

1977ம் ஆண்டு நாடு தேர்தல் ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ் என்று பிரிந்திருந்த தமிழ் சமூகம் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எனும் பெயரில் ஒற்றுமைப்பட்டு அத்தேர்தலை தனித் தமிழ் நாட்டுக்கான அங்கீகாரமாக, சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதுவதாக பிரசாரம் செய்தது.

இத்தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சட்டத்தரணி சம்சுதீன், அஷ்ரப், பஸீல் ஏ.மஜீத் போன்றவர்கள் முஸ்லிம் ஐக்கிய முன்னணி எனும் பெயரில் அரசியல் இயக்கம் ஒன்றை நிறுவி தேர்தல் ஒப்பந்தம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு காலமும் கொழும்பில் சட்டத்தரணித் தொழில்புரிந்த அஷ்ரப் இத்தேர்தல் பிரச்சாரத்துக்காகக் கல்முனை வந்து சட்டத் தொழிலையும் இங்கேயே மாற்றிக் கொண்டார். சம்சுதீன் ஒரு முன்னணி சட்டத்தரணியாக இருந்ததால் அவர் தேர்தலில் போட்டியிட்டதால் அவரது வழக்குகளைக் கவனிக்க வேண்டிய தேவையும் இவருக்கு! காலையில் நீதிமன்றமும் மாலையில் தேர்தல் மேடையுமாகச் சுழன்று இயங்கினார். பொத்துவிலில் போட்டியிட்ட கனகரத்தினமும் அடிக்கடி இவரது வீடு வருவதும் போவதுமாக இருந்தார். இக்கால எல்லையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணி ஒரு பத்திரிகையை நடத்தியது. அதன் பெயர் 'சமத்துவம்' அஷ்ரபே அதன் ஆசிரியர் போல் செயற்பட்டார். தேர்தல் காலத்தில் அதில் ஒரு கட்டுரை அஷ்ரப் பெயரில் வெளியானது. சில தேர்தல் தொகுதிகளில் அதாவது முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் பிரதேசங்களில் ஐ.தே.க., சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் சில, வேட்பாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் வெற்றி பெற வேண்டும் என எழுதினார். உதாரணம் அக்குறனையில் A.C.S. ஹமீத், அதனை வாசித்து விட்டு நீங்கள் எதிர்த்துப் பிரசாரம் செய்யும் கட்சிகளின் பிரதிநிதிகளை வெல்ல வேண்டுமென்றும் எழுதியிருக்கிறீர்களே! அது ஏன்? என வினவினேன். ஏனெனில் கல்முனையில் அஷ்ரப் ஆதரித்துப் பிரசாரம் செய்யும் சட்டத்தரணி சம்சுதீனை எதிர்த்து ஐ.தே.க சார்பில் A.R. மன்சூரும் சுதந்திரக் கட்சி சார்பில் M.C. அகமதும் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அஷ்ரப் கூறினார். எமது கட்சி அரசியலுக்கு அப்பால் தகுதியான முஸ்லிம்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டும். அவர்களை நாம் எக்கட்சி என்று பார்க்கக்கூடாது. மிகத்திறமையானவர்கள் அங்கு இருக்க வேண்டும். எனவே தான் மேற்கூறிய நபர்களை அவர்கள் பாராளுமன்றம் வரவேண்டும் என எழுதியுள்ளேன் என்றார்.

ஒரு நாள் கல்முனை தமிழ்ப் பகுதியில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றுக்கு அஷ்ரபின் பேச்சைக் கேட்பதற்காகச் சென்றிருந்தேன். அக்கூட்டத்தில் பிரசாரத்துக்காக மட்டக்களப்பு இராஜதுரையும் வந்திருந்தார். தமிழ் மக்கள் தமது போராட்டங்களை சாத்வீகமான முறையில் மேற்கொண்ட படிமுறைகளை, ஆழ்நொழுக்காக விளக்கினார். அக்கூட்டத்தில் அஷ்ரப் நீலநிறச் சேட்டை அணிந்து கொண்டு வந்திருந்தார். அக்கூட்டம் முடிவடைந்ததும் அவரை நெருங்கிய நான் என்ன சுதந்திரக்கட்சியின் நிறத்தை அல்லவா அணிந்து கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றேன். அப்போது அவர் எமக்கென்று ஒரு நிறம் உள்ளதா? எனக் கேட்டுவிட்டு எல்லா நிறங்களும் எம்முடையதே என்று கூறிச் சமாளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரப் எக்கட்சியிலிருந்தாலும் முஸ்லிம் சமூகத்தின் மேன்மை பற்றிச் சிந்திப்பவராகவே இருந்தார். நாம் ஒன்றாக கல்முனைப் பட்டினசபை வாசிகசாலை சென்று வாசிக்கும் காலத்தில் பல்கலைக்கழக பரீட்சைப் பெறுபேறுகள் பத்திரிகைகளில் குறிப்பாக Dailynews ல் வெளியாவதுண்டு. அவ்வாறு பெயர் வெளியாகும் போது அவற்றில் உள்ள முஸ்லிம்கள் எத்தனைபேர் என்றும் கணக்கெடுத்து விடுவார். இவ்வாறு முஸ்லிம் சமூகம் தமது கட்சி என்ற நோக்கிலேயே அவரது பயணம் அமைந்தது. இதனை அவரது பிந்திய காலத்திலும் அவதானிக்க முடிந்தது. எக் கட்சிக்காரர் என்று பார்க்காமல் அவர்கட்சிக்கப்பால் அவரால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். இது கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் சிலருக்கு பெரும் அதிருப்தியாக விருந்தது. எனவே அவர்களது நியாயமற்ற கோரிக்கையைச் சாடி அவர் பலகூட்டங்களில் கண்டித்துள்ளார். அதாவது அவர் இவ்வாறு பேசுவார் "றிஸ்கு (உணவு) அளிக்கும் பொறுப்பை அல்லாஹ் அவன் பொறுப்பில் எடுத்துக் கொண்டான். தற்செயலாக இது மனிதர்களிடம் இருந்திருந்தால் அவர்கள் அவர்களது கட்சிக்காரர்களுக்கு மட்டுமே அதனை அளிப்பர்" எனப் பேசி தனது சில ஆதரவாளர்களின் மனப்பாங்கு களைக் கண்டித்தார்.

1977ம் ஆண்டுத் தேர்தலில் மு.ஐ.மு.சார்பில் போட்டியிட்ட அனைவரும் தோல்வியைத் தழுவினர். ஆனால் தமிழ்ப் பகுதியில் தமிழர் ஐ.வி.மு. பெரும் வெற்றியை ஈட்டியது. இதன்பின் தமிழர் ஐ.வி.மு. செயற்குழு என நினைக்கிறேன். அதில் அஷ்ரபும் இடம் பெற்றார். இக்கூட்டங்களுக்காக அஷ்ரப் கல்முனையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அடிக்கடி போய்க் கொண்டிருந்தார். தமிழர் போராட்டங்கள் கருக்கட்டிய இக்கால கட்டத்தில் அவர்களோடு அவர் இணைந்திருந்தார். நாம் அறிந்த வரை தமிழ் மக்களின் போராட்டத்தை அவர் மலினப்படுத்தியவரல்ல. அதைச் சரியாக மாற்றியவர்களில் அவரும் ஒருவர். அதனைத் தமிழ் மக்கள் புரியாமல் விட்டதுதான் கவலைக்குரியது.

1977ம் ஆண்டுத் தேர்தலில் மு.ஐ.வி.மு. வேட்பாளர்கள் பெரும் வெற்றி பெறாவிட்டாலும் முஸ்லிம் பகுதிகளில் பிரச்சாரத்துக்கு வந்த தமிழ்த்தலைவர்கள் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து பேசிய வார்த்தைகள் குறிப்பிடத்தக்கதாகும். சகல தமிழ்த்தலைவர்களும் இதனை ஆதரித்துப் பேசினார்கள். கோப்பாய் எம்.பி. கதிரவேற்பிள்ளை சாய்ந்தமருது கடற்கரைவீதியில் நடந்த கூட்டத்தில் பேசிய வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ரீங்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றன. அவர் கூறினார். 'முஸ்லிம்கள் சுய நிர்ணய உரிமையுடையவர்கள். அவர்கள் விரும்பினால் உத்தேச தமிழ் அரசாங்கத்தில் இருக்கலாம். அல்லது அவர்கள் விரும்பினால் பிரிந்து செல்லலாம்.

இவ்வாறு பேசிய தமிழ்த்தலைவர்களின் கட்சிகள் இன்று எடுக்கும் நிலைதான் கவலைக்குரியது.

## முஸ்லிம் மாகாணக் கோரிக்கை ஏன்?

1976ல் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து பிரிந்து செல்லும் பிரசாரத்தைத் தமிழ்க்கட்சிகள் முடுக்கிவிட்டன. 1977 ல் மக்கள் அளித்த பேராதரவு அவர்கட்குத் தூண்டுகோலாயமைந்தன. வட பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வன் செயல்கள் வெடிக்க ஆரம்பித்தன. மத்தியில் ஆட்சியில் இருந்த ஜே.ஆர். உசாரானார். 1983ல் நடந்த பயங்கர இனக்கலவரம் தமிழர் போராட்டத்தைச் சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தும் சாதனமாக அமைந்தது. வடக்கிலும் கிழக்கிலும் தீவிரவாதச் செயல்கள் கூர்மையடைந்தன. வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழராட்சிக்குரிய போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டது. இவ்வேளை ஆட்சியிலிருக்கும் ஐ.தே.க. வின் சார்பில் ஐந்து முஸ்லிம்கள் கிழக்கில் எம்.பிக்களாக விருந்தனர். திருகோணமலை முதல் பொத்துவில் வரை ஐந்து முஸ்லிம்களே எம்.பிக்கள்! ஐவரும் ஐ.தே.க. வினரே. அவர்களில் பிரதியமைச்சராகவிருந்த சம்மாந்துறை மஜீதே சிரேஷ்டமான அரசியல்வாதி, கல்முனை மன்சூரும் மூதூர் ம.ாறூபும் மாவட்ட அமைச்சர்களாகவிருந்தனர். பொத்துவில் ஜலால்தீன், மட்டக்களப்பு பரீத் மீராலெவ்வை ஏனைய எம்.பிக்கள்.

மேற்கூறிய எம்.பிக்கள் அனைவரும் வடக்கு வேறு, கிழக்கு வேறாக இருக்கவேண்டும் என்ற பிரச்சாரத்தை முஸ்லிம்கள் மத்தியில் முடுக்கிவிட்டனர். தமிழ் இயக்கங்களின் தீவிரவாதச் செயல்களால் கிலேசமடைந்திருந்த முஸ்லிம் பொதுமக்களும் கிழக்குவேறாக இருக்க வேண்டுமென்றே விரும்பினர்.

தமிழ்மக்கள் வடக்கையும் கிழக்கையும் இணைக்கவேண்டுமென்று போராடும் போது முஸ்லிம்கள் பிரிக்க வேண்டுமென்று குரல்எழுப்புவது பிரதேசத்தில் இனங்களிடையே ஐக்கியமின்மையை ஏற்படுத்துவதுமட்டுமன்றி தமிழர் போராட்டத்தை நசுக்குவதற்கு முஸ்லிம்களை அரசு ஆயுதமாகப் பாவிப்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உதவுமென்ற ஆபத்துக்களை விட்டும் முஸ்லிம் சமுதாயத்தைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை அஷ்ரப் உணர்ந்தார்.

எனவேதான் வடக்கு கிழக்கு இணைப்பு வேண்டாம் என்ற தீர்மானத்திற்காகக் கூடிய அட்டாளைச்சேனை மாகாநாட்டில் முஸ்லிம் மாகாணம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இது தமிழ் மக்களுக்கெதிராக முஸ்லிம்களை அரசாங்கம் பாவிப்பதற்கு எதிராக இடப்பட்ட முதல் தடைக்கல்லாகும். இங்கு முஸ்லிம் மாகாண சபை கிடைக்குமா இல்லையா என்பதல்ல முக்கியம். தமிழர் போராட்டத்துக்கெதிரான முஸ்லிம் குரல் வேறுபக்கமாக திசை திருப்பப்பட்டது.

**அஷ்ரப் தமிழ் மக்களுக்குச் செய்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இச்சாதனையை தமிழ் சமூகம் விளங்கிக் கொள்ள மறுத்தது.** அஷ்ரபை அவர்கள் ஓர் இனவாதியாக, தீவிரவாதியாக நோக்கினர். படித்தவர்கள், பத்திரிகையாளர்கள் கூட இதற்கு விதிவிலக்கில்லாதவர்களாக விருந்தனர். அஷ்ரப் படித்தது தமிழ் பாடசாலையில், அவர் வசித்தது தமிழ்ப்பகுதியில்! அவரது வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் தமிழ்மக்கள். இனவாதம் பிரதேச வாதத்தைக் கடந்த சிந்தனையையே நாம் அவரிடம் கண்டோம். ஆனால் தமிழ்த்தரப்பு முஸ்லிம் மாகாணத்தின் தாப்பரியத்தை விளங்கிக் கொள்ளாமல் அவரைச் சந்தேகக்கண் கொண்டு பார்த்தது.

இங்கு நான் கூற வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ஜே.ஆர். அரசுடன் பேசுவதற்கு இந்தியாவிலிருந்து வந்து கொண்டிருந்த இந்திய அரசின் பிரதிநிதிகளான சிதம்பரம், நட்வார்சிங், பார்த்தசாரதி போன்றவர்களுடன் பேசுவதற்கு தமிழ்நாட்டில் வசித்துக்கொண்டிருந்த ஈழத் தமிழ்த் தலைவர்களான அமிர்தலிங்கம் போன்றோர் அங்கிருந்து இங்கு வந்து சென்று கொண்டிருந்தனர். இக்காலத்தில் தமிழ் போராட்டக் குழுக்களின் தலைவர்கள் இந்தியாவில் வாழ்ந்தது போல் தமிழ் அரசியல் தலைவர்களும் அங்கேயே வாழ்ந்து கொண்டிருந்தனர். அவ்வாறு வந்து கொண்டிருந்த தமிழ்த் தலைவர்களை முஸ்லிம் புத்திஜீவிகள் சந்திப்பதும் நடப்புவிவகாரங்கள் பற்றிப் பேசுவதும் வழக்கம். இவ்வாறான ஒரு சந்திப்பின் போது அரசாங்கம் வடகிழக்கு இணைப்புக் கெதிராக முஸ்லிம்களை பயன்படுத்தும் ஆபத்தை உணர்ந்தவராக

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர் அமிர்தலிங்கம் நீங்கள் உங்களுக்கென்று ஒரு சபையைச் கேட்கலாமே என்றதாகவும் பின்னர் M.I.M. முகிதீன் அதனை படங்கள் வரைந்து, திட்டமிட்டு காரியச்சாத்தியமானதாக ஆக்கியபோது அதனைக்கண்டு அமிர்தலிங்கத்தின் முகம் கறுத்ததாகவும் கேள்விப்பட்டேன்.

இங்கு நான் கூறவந்த விடயம் என்னவென்றால் முஸ்லிம் மாகாணக் கோரிக்கை முஸ்லிம் மக்களின் நலனை மட்டும் கொண்டதல்ல. அது தமிழ் மக்களின் கோரிக்கையை வென்றெடுப்பதற்கும் இடப்பட்ட அத்திவாரம் ஆகும். அதாவது வட, கிழக்கில் ஈரினங்களும் ஒன்றுபட்டு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஏற்பாடாகும்.

அடுத்ததாக அஷ்ரப் முஸ்லிம் காங்கிரசை நிறுவி அதன் கொள்கைப் பிரகடனமாக நிபந்தனையுடனான வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவு என்றார். அதாவது முஸ்லிம்கள் நலனைப் பாதிக்காத முறையில் அவர்களும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் நிலையில் வடக்குகிழக்கு இணைப்புக்கு ஆதரவு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும். அதனை ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியின் தலைவர் உரத்துக் கூறுவதென்பது சாதாரண விடயமல்ல. முஸ்லிம் மக்களின் கூட்டுமொத்த எதிர்ப்பைச் சம்பாதிக்கும் விடயம் அது. எனினும் அஷ்ரப் என்ன செய்தார்? தனது கருத்தை கட்சியின் கருத்தாக மாற்றி அதனைச் சமூகத்தின் கோரிக்கையாக முன்வைத்து தமிழ் தேசியத்தின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தார். இது தொடர்பாகத் தன்னை விமர்சித்த முஸ்லிம் அரசியல் தலைவர்களைப் பொருட்படுத்தாமல் இவரது கருத்தை அவர்களும் பின்னாளில் ஏற்கக் கூடியதாக வழிசெய்தார்.

அஷ்ரபின் மறைவின் பின் இன்று நிலை என்ன? முஸ்லிம்கள் இக்கோரிக்கையில் பல்வேறு நிலைப்பாட்டை எடுக்க ஆரம்பித்துள்ளனர். சிலர் அஷ்ரப் கூறியதையே திரும்பச் சொல்ல மேலும் சிலர் வடக்குவேறு கிழக்குவேறு எனப் பிரிக்கப்பட வேண்டும் என குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். இக்கோரிக்கை மேலும் வலுவாகலாம். எனவே இது அஷ்ரபின் மறைவினால் ஏற்பட்டுள்ள ஒரு நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இனப் பிரச்சினைத் தீர்வு ஏற்பட இன்னும் எத்தனை வருடங்கள் பிடிக்குமோ தெரியாது. ஆனால் அஷ்ரபின் வெற்றிடம் நிச்சயம் அவ்விடத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அஷ்ரப் இருந்திருந்தால் அவர் தமிழ் மக்கள் நலனைப் பாதிக்காத விதமாக முஸ்லிம்களின் உரிமைகளுக்குச் சேதமில்லாமல் இப்பிரச்சினையில் தமிழ் மக்களுக்கு நன்கு உதவ முன் வந்திருப்பார். அவர் மறைவினால் அதிகம் நஷ்டமடையப் போவது தமிழ் மக்கள்தான்.

# முஸ்லிம் காங்கிரஸ் உருவாகுதல்

## 1970ம் ஆண்டு

நாடு தேர்தல் ஒன்றை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. தேர்தல் பிரசாரத்துக்காக அன்றைய எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டார நாயக கல்முனை வந்தார். கல்முனையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார். அக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கியவர் அஷ்ரபின் தந்தை ஹுசைன் விதானை.

கொழும்பில் சட்டக்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த அஷ்ரபுக்கு வழமையாக கடிதம் எழுதும் நான் ஸ்ரீமாவோ கல்முனை வந்த செய்தியையும் அவரது தந்தை அக்கூட்டத்திற்கு தலைமை தாங்கியதையும் எழுதி அனுப்பினேன். ஸ்ரீமாவோ வந்த கூட்டத்துக்கு அவரது தந்தை தலைமை தாங்கினாரென்ற செய்தியால் அவர் பெருமைப்படுவார் என்று நினைத்தே அதனை எழுதி அனுப்பினேன். எனது அக்கடிதத்துக்கு வழமைக்கு மாற்றமாக ஏதோ நடக்கக் கூடாத ஒரு விடயம் நடைபெற்றதுபோல் நான்கு பக்கங்கள் கொண்ட நீண்டதொரு பதிலை எனக்கு அனுப்பிவைத்தார். அதில் UNP யோ அல்லது SLFP யோ முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போவதில்லை எனத் தொடர்ந்து முஸ்லிம்களின் சுதந்திரக் குரலின் அவசியத்தை எழுதிய அவர் அதில் குறிப்பிட்ட ஒரு வசனம் இன்னமும் ஞாபகம் இருக்கிறது. "இக்கொள்கை விளப்பமின்றி குழம்பிக் கொண்டிருப்பவர்களைப் பற்றி எம்மால் எதுவும் செய்ய முடியாது" என்பதே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுக்கு அரசியல் கட்சியொன்றின் அவசியத்தை இருபது வயதாக இருக்கும் போது மிகவும் உறுதியாக நம்பிய அந்த இளைஞனின் "துஆ" வைக்கபூல் செய்த இறைவன் அந்த இயக்கத்தின் உருவாக்கத்துக்கு அவரையே தெரிவு செய்து வைத்திருந்ததுதான் அவனது நாட்டம். அஷ்ரப் தேர்தலில் போட்டியிட ஒரு கட்சி கிடைக்காமல் போனதால்தான் இருந்த கட்சிகளுக்கு ஏற்கனவே ஆட்கள் நிரப்பப்பட்டு விட்டதால் வேறு வழியின்றி இவர் கட்சி ஆரம்பித்ததாக கிழக்கின் ஓர் அரசியல் வாதி அடிக்கடி கூறுவார். அஷ்ரப் பராராளுமன்றம் செல்வதற்காக பெரும் சிரமப்பட்டு ஒரு கட்சி அமைக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. அவர் விரும்பியிருந்தால் எக்கட்சியும் இடம் கொடுக்கும் நிலைமை அவருக்கிருந்தது. அல்லது சுயேட்சையில் போட்டியிட்டிருந்தால் கூட வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்லும் மக்கள் ஆதரவு அவருக்கிருந்தது.

ஆனால் வல்ல அல்லாஹ் இந்த இளைஞனின் உள்ளத்தில் அந்த உணர்வை ஏற்படுத்தி அவர் மட்டுமல்ல அவரால் பலர் பாராளுமன்றம் செல்லும் வழியைத் திறப்பதற்கு சமூகத்தின் உரிமைக்குரலாக அவரது குரலை மாற்றுவதற்கு திட்டமிட்டிருந்தான். இது யாருக்கு வெளிச்சம்?

1980ம் ஆண்டு கல்முனை சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அஷ்ரப் கல்முனையில் சட்டத் தரணியாகத் தொழில் செய்து கொண்டிருந்தார். அவ்வேளை அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுவிப்பது பற்றிய கலந்துரையாடல் எனத் தலைப்பிட்டு வந்த அக்கடிதம் இதோ.

எம்.எச்.எம். அஷ்ர.ப்
சட்டத்தரணி
'ஹிறா'
கல்முனை.

அன்புடையீர்!

'இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்'
தோற்றுவித்தல் பற்றிய கலந்துரையாடல்.

இன்று எம் சமூகம் சாரதியற்ற வண்டியைப்போல் திக்கற்றுச் சென்று கொண்டிருக்கின்றது. அந்தப் பாதையில் பேராபத்துக்களைத் தினமும் எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய ஒன்றாகவும் சிறு விபத்துக்களுக்கு அடிக்கடி ஆளாகியும் உள்ள எம் சமூகத்தைப் பற்றியும் அதன் எதிர்கால வளத்தைப் பற்றியும் ஆத்மீக கல்வி விஞ்ஞான சமூகவியல் துறைகளில் அதன் முன்னேற்றம் பற்றியும் இன்று சிந்திப்பவர்கள் ஒருசிலரே. அவர்களில் பெரும்பாலானோர் தமது அரசியல் சாயங்கள் காரணமாக நேர்மையாகவும் நடுநிலையில் நின்றும் வீரத்துடனும் சிந்திக்க முடியாதவர்களாகவும் சிந்திப்பவற்றை வெளிப்படுத்தி செயற்படுத்தும் ஆற்றல் அற்றோராகவும் உள்ளனர்.

இந்நிலையில் கட்சி வேறுபாடுகட்கு அப்பால் சென்று முஸ்லிம் நலன் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்களை இயக்கமயப்படுத்துதல் இன்றைய காலகட்டத்தில் அவசியத் தேவையாக இருப்பதை நான் காணுகின்றேன். இக் கருத்தில் உங்களில் அனேகர் உடன்பாடு காண்பீர்கள். அத்தகைய இயக்கத்துக்கு 'இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்' என அல்லது அதைவிடச் சிறந்த பெயரொன்றை நாம் சூட்டமுடியும். துயில் கொள்ளும் சமூகத்தைத் தட்டி எழுப்பும் பணியில் இவ்வியக்கம் பெரும் தொண்டாற்ற முடியும்.

இக்கருத்துக்கு தசையும் எலும்பும் கொடுத்து உருவமைத்து உயிரூட்டிப் பயன் பெறுவான் வேண்டி பல கலந்துரையாடல்களை நடாத்தத் திட்டமிடுகின்றோம். அதன் முதற்படியாக எதிர்வரும் 21.09.1980 காலை (சரியாக) 10.00 மணிக்கு காத்தான்குடி 3ம் பிரிவு பிரதான வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் பாலர் பாடசாலையில் ஒரு கலந்துரையாடல் நடைபெறும்.

அவ்வமயம் கலந்துகொண்டு எமது சமூக விழிப்புணர்ச்சிக்கு தூண்டு கோலாக அமையக்கூடியதும், தியாக சீலர்களைக் கொண்டதுமான ஓர் இயக்கத்தைத் தோற்றுவிக்கும் அத்திவாரக் கற்களில் ஒன்றாக நீங்கள் அமையும் பாக்கியத்தைப் பெறுவீர்களென பிரார்த்திப்பதுடன் இவ்விடயத்தில் ஆர்வமுள்ள உங்கள் நண்பர்களுடன் உரிய நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிக்க உதவும் வகையில் சமூகமளிப்பீர்களென எதிர்பார்க்கின்றேன்.

அஸ்ஸலாமு அலைக்கும்

இப்படிக்கு,
உங்கள் சகோதரன்
எம்.எச்.எம். அஷ்ரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிகரன்
'உரிமை'
கல்முனை.

அன்புடையீர்!

'முஸ்லிம் காங்கிரஸ்'
கோட்டமைத்தல் பற்றிய கலந்துரையாடல்.

அரசியல் சதுரங்கத்தில் ஏற்படுவதைப்போல் திடீரென்று எனது மனதில் தோன்றியது. தற்போதைய பாராளுமன்றில் பேராபத்தான போக்கு மலிந்து வரும் இன்றைய சூழ்நிலையும் இன்றைய அரசியல் வாதிகளின் நடவடிக்கைகளும் உள்ள நம் சமூகத்தைப் பற்றியும் நமது எதிர்கால வளர்ச்சியைப் பற்றியும் நமது அரசியல் அபிலாஷைகளில் முஸ்லிம் காங்கிரஸின் பற்றியும் இன்று சிந்திப்பவர்கள் குறைவே. நமது சமூகத்தில் பெரும்பாலானோர் எமது தாயகத்தின் சாபக்கேடான கோடரிகளாகவும் மருமகன்மார் இன்றும் வீபக்கடன் கிடைக்க அலைகின்றவர்களாகவும் இருப்பதனால் அவர்களுக்கு அரசியல் தத்துவார்த்தமும் உண்மைகளும் புரிவதில்லை.

இந்நிலையில் கட்சி பேதமற்ற முறையில் முஸ்லிம் நலன் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்களை ஒன்றிணைத்து ஒரு பலமான அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் அவசியத்தை நான் உணர்ந்தேன். இவ் விடயத்தில் உங்களின் ஒத்துழைப்பை நாடுகின்றேன். இதற்கான ஒரு ஆரம்ப நடவடிக்கையாக 'முஸ்லிம் காங்கிரஸ்' என்ற பெயரை நாம் பயன்படுத்தலாம். அதில் கொள்கை சமூகத்தைக் கட்டி எழுப்பும் பணியில் ஈடுபடுவதற்கும் முடிவு செய்துள்ளோம்.

இவ்விடயம் தொடர்பும் மேலும் கொடுக்க வேண்டிய விளக்கமும் உங்களுடன் பல கலந்துரையாடல்களை நடாத்தக் கிட்டியதில்லை. நமது கலந்துரையாடலை எதிர்வரும் 21.09.1990 காலை (சனிக்கிழமை) 10.00 மணிக்கு காத்தான்குடி 3ம் பிரிவு பிரதான வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் பாங்க் பாடசாலையில் ஒரு கலந்துரையாடல் நடைபெறும்.

முன்னைய எதிர்கொள்ளல் எமது சமூக விடுதலைக்கு ஏற்படுத்தக் கொண்ட அவகாசத்தையும், இன்றைய சூழ்நிலை எமது சமூகத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் முக்கியமான கட்டமாகவும் இருப்பதனால் தாங்களும் தங்களுடன் நெருங்கிய நண்பர்களுடன் உரிய நேரத்தில் கட்டாயம் வருகை தந்து ஆலோசனைகளை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றியுடன் நினைவுகளுடன்,

இப்படிக்கு,
உங்கள் சகோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் வயது முதலே அவர் உள்ளத்தில் கருக்கட்டி இருந்த இத்திட்டத்தைச் செயற்படுத்த அவர் துணிந்து விட்டார் என்பதையே இவ்வழைப்பு எடுத்துக் காட்டியது.

இக்கூட்டம் நடந்து சிலமாதங்களில் நான் மதீனாப் பல்கலைக்கழகம் சென்று விட்டதால் மு.கா. வின் நடவடிக்கைகள் பற்றி அறிய முடியவில்லை.

1985ல் கிழக்கில் ஏற்பட்ட இனக்கலவரங்களையும் கசப்புணர்வுகளையும் தொடர்ந்து அவர் கல்முனையை விட்டு வெளியேறி கொழும்பில் குடியேறியிருந்தார். தான் கொழும்பு செல்ல முடிவெடுத்ததுடன் தன்னிடம் இருந்த சகல பத்திரிகைகள், கட்சி தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் எரித்துவிட்டு மனம் வெதும்பிய நிலையில்தான் கொழும்பு சென்றதாக பின்னர் ஒருமுறை கூறினார்.

1986ல் நான் மதீனாவில் படித்துப் பட்டம் பெற்று நாடு திரும்பியவுடன் பிரதேசத்தின் இயல்பு நிலை நன்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. எமது பிரதேசப் பள்ளிவாசல் பிரமுகர்களுடன் சேர்ந்து அரச உயர்மட்டத்தைச் சந்திப்பதற்காக கொழும்பு சென்றோம். J.R. ஜயவர்த்தனா, ஜனாதிபதியாக இருந்தார். போக்குவரத்து அமைச்சராக இருந்த M.H. முகம்மத் அவர்களைச் சந்தித்துவிட்டு அவருடன் சேர்ந்து ஜனாதிபதியைச் சந்திப்பது உத்தேசம். D.R. விஜயவர்தன மாவத்தையிலிருந்த முஸ்லிம் சமயகலாச்சாரத்திணைக்களத்துக்கு நாம் சென்றபோது எமது வருகையை எதிர்பார்த்து திணைக்களத்தின் வெளியில் போடப்பட்டிருந்த புட்டுவத்தில் அஷ்ரப் உட்கார்ந்திருந்தார்.

தான் உண்டு. தன் தொழில் உண்டு என்று வாழாவிருக்காமல் தனது மக்கள் கிழக்கில் படும்நிலையை அவதியை எண்ணிக்கவலை கொண்டவராக தனது மௌனத்தைத் துறந்து சமூகத்துக்காகத் தன்னை அர்ப்பணிக்கத் துணிந்தார்.

முடிவு: தான் மூலையில் ஒதுக்கிப் போட்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1986.11.29 சனிக்கிழமை தெமட்டக்கொட வீதியிலுள்ள பாஷாவிலாவில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் கட்சியாக - சக்தியாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

இதுவரை முஸ்லிம்கள் மத்தியில் ஓர் அரசியல்கட்சி இல்லாததால் அவர்கள் பல பின்னடைவை எதிர்நோக்கினர். முழு முஸ்லிம் சமுதாயத்தையும் காயப்படுத்திய ஒரு கட்சியின் தேவையை உருவாக்கிய சம்பவம் புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜும்ஆ மஸ்ஜிதில் தொழுது கொண்டிருந்த மக்கள் மீது பொலிஸார் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகமும் அங்கு கொல்லப்பட்ட முஸ்லிம் மக்களுமாகும். ஸ்ரீமாவோ அவர்களின் சுதந்திரக்கட்சி ஆட்சிமீது முஸ்லிம்களின் அதிருப்தி ஏற்படுவதற்கு காரணமாயமைந்த இச்சம்பவத்தைப் பற்றி பாராளுமன்றத்தில் பேச எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரும் முன்வரவில்லை. எதிர்க்கட்சியிலிருந்த A.C.S. ஹமீத் அதுபற்றிப் பேச முயன்றபோது அவரது கட்சித் தலைமை அதனைத் தடுத்துவிட்டதாகவும் கதைகள் அடிபட்டன. பின்னர் புத்தளம் உயிர்க்கொலைக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் தனது கண்டனத்தை தெரிவித்தவர் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் அவர்களாவர். எத்தனையோ முஸ்லிம்கள் பாராளுமன்றத்தில் இருந்தபோதும் அவர்கள் சார்ந்த கட்சிகளின் கொள்கைகளால் அவர்களால் முஸ்லிம்களுக்கெதிராக நடந்த இந்த அநியாயத்தை இட்டு வாய்திறக்க முடியவில்லை. இச்சம்பவத்தையிட்டு அடிக்கடி அஷ்ரப் பேசுவார்.

நான் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் (1976-77) பயின்று கொண்டிருந்தபோது புத்தளத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் A.M.M. மன்சூர் அங்கு கடமையாற்றினார். புத்தளம் கொலை தொடர்பாக நீதி மன்றத் தீர்ப்பு வெளியாகும் தினமன்று அவர் நோன்பிருந்து பிரார்த்தனையில் ஈடுபட்டார். அன்று நாங்கள் அவருடன் அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோம். அன்று புத்தளம் நீதிமன்றில் பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமும் கொலைகளும் "நியாயமான கொலை" எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதுவும் முஸ்லிம்கள் உள்ளங்களைக் காயப்படுத்தியது.

## ஆதரவும் எதிர்ப்பும்

இவ்வாறு முஸ்லிம் கட்சியின் தேவையொன்றை உணர்ந்திருந்த ஈமான் தாரிகளின் முன் ஒரு முஸ்லிம் கட்சியின் உதயம் பெரும் மகிழ்வையும் வரவேற்பையும் கொடுத்தது. அதுவும் முஸ்லிம் நலனுக்காக தன்னை அர்ப்பணித்து தன்னலமற்ற செயற்பாட்டால் நாடு முழுவதற்கும் தன்னை அறிமுகம் செய்து வைத்திருந்த அஷ்ரப் அவர்களால் இக்கட்சி அறிமுகமானது மேலும் வரவேற்பைப் பெற்றது.

இவ்வாறு முஸ்லிம்களின் ஒரு பகுதியினர் கட்சியின் உதயத்தால் மகிழ்ச்சிக்கடலில் மிதக்க மற்றொரு சாரார் பொறாமைத் தீயில் வெந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சமூகத்துக்கு பேராபத்தை அஷ்ரப் ஏற்படுத்துகிறார். முஸ்லிம்களை சிங்கள மக்கள் விரட்டியடிக்க வேலை பார்க்கிறார். என்றெல்லாம் கொதித்தனர். மு.கா. மகாநாடு நடைபெறும் ஒரு சந்தர்ப்பத்தில் 'Go to East' என்றெல்லாம் போஸ்டர்கள் தலை நகரில் ஒட்டப்பட்டன.

நான் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக்கல்லூரி அதிபராக இருந்த வேளை கல்லூரி விடயமாக அதன் நிருவாகிகளுடன் சேர்ந்து மத்திய மாகாணத்துக்குச் சென்றிருந்தேன். அது ஒரு மாகாணசபைத் தேர்தல் காலமாகவிருந்தது. அஷ்ரப் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

அவ்வேளை பெரும்பான்மைக் கட்சியொன்றைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர் ஒருவரைச் சந்திக்க அவர் வீடு சென்றோம். அவரும் அத்தேர்தலில் போட்டியிட்டுக் கொண்டிருந்தார். எம்மைக் கண்டதும் அவர் எம்மிடத்தில் அஷ்ரபின் கட்சியால் எமக்கு எவ்வளவோ ஆபத்து. இனிமேல் எமது கடைகளுக்கு பொருட்கள் வாங்க பெரும்பான்மை மக்கள் வருவார்களா? முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் பிரிக்கவல்லவா போகிறார் இவர்? எனப் பொரிந்து தள்ளினார். அவரிடம் எம்மைப் பொறுத்தவரை அக்கட்சியின் தேவையையும் முக்கியத்துவத்தையும் எடுத்து விளக்கினோம். அவ்வேளை ஆத்திரமுற்று அவர் அப்படியானால் அதனைக் கிழக்கில் வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். இங்கு சரிப்பட்டுவராது எனக் கொதித்தார்.

இங்கு நான் குறிப்பிட்டது ஓர் உதாரணம். அவர்கட்சி உருவாக்கிய போது அவருக்கு ஏற்பட்ட சோதனைகளோ ஏராளம். அன்றைய அமைச்சர்கள் ஒவ்வொருவரும் அவரைத் திட்டித் தீர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். எழுத்தாளரான அவரின் கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்தால் மறு கட்டுரை வராமல் அதனைத் தடைசெய்து விடுவார்கள். கூட்டங்கள் நடத்த முன்வந்தால் அதனைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்தார்கள். இவ்வாறு அஷ்ரப் என்ற சூரியனை தமது கைவிரல்களால் மறைக்க முயற்சித்த அரசியல் வாதிகள்தான் எத்தனைபேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆனும் ஹதீஸும்

அஷ்ரப் தனது கட்சிக்கு குர்ஆன், ஹதீஸ் இரண்டுமே வழிகாட்டி என்றபோது பலரின் விமர்சனத்துக்குள்ளானார். சாக்கடையான அரசியலுக்கு புனிதமான குர்ஆன், ஹதீஸை அவர் விற்பனை செய்வதாக பாரிய குற்றச் சாட்டுக்கள்! பொறுப்பானவர்கள் கூட அவ்வாறு விமர்சித்தனர்.

ஒரு முஸ்லிமின் சகல துறைகளுக்குமான வழிகாட்டி அல்குர்ஆனும், அல்-ஹதீஸுமாகும். வணக்கத்துக்கு ஒன்று, வர்த்தக முயற்சிகளுக்கு மற்றொன்று குற்றவியலுக்கு ஒன்று அரசியலுக்கு வேறொன்று என்று ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு வழிகாட்டிகளை இஸ்லாம் அனுமதிக்காது. ஒரு முஸ்லிமின் வாழ்க்கையின் சகல துறைகளுக்குமான வழிகாட்டிகள் அவ்விரண்டும்தான். இதில் அஷ்ரபுக்கிருந்த தெளிவு மற்றவர்களுக்கு இருக்குமென நாம் கருத முடியாது. எனவேதான் அஷ்ரப் மிகத்துணிந்து தனது கட்சியின் வழிகாட்டிகளாக அவ்விரண்டையும் குறிப்பிட்டார். அக்கட்சி அவ்விரண்டு வழிகளில் தான் சென்றதா? என்பது வேறுவிடயம். ஒரு முஸ்லிமின் அரசியல் செல்ல வேண்டிய பாதை அதுதான். அவனின் அரசியல் வழிகாட்டியாக மார்க்ஸிஸமோ லெலினிஸமோ அல்லது பைபிளோ, திருக்குறளோ இருக்க முடியாது. எனவேதான் குர்ஆன், ஹதீஸ் இரண்டும்தான் வழிகாட்டி என்பது அஷ்ரபின் சமய/அரசியல் அறிவின் அடிப்படையிலாகும். இதனை விளங்குகின்ற அளவுக்கு அந்த அரசியல் வாதிகள் நிதானமற்று இருந்தனர்.

அவரது சொந்தப் பிரதேசத்திலும் இதே நிலை. இப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கெதிராக வரிந்து கட்டிக்கொண்டு நின்றனர். சமூகசேவை இயக்கங்கள் மத்தியிலும் இவருக்கு இடம் கொடுத்தால் எம்.பிக்கள் நம்மைக் கோபித்து விடுவரோ என்றொரு பயம்.

•

கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களுக்கேற்படும் பிரச்சினைகளை யிட்டு அதிக கவனம் செலுத்தும் பழக்கம் கல்முனைப் பிரதேச மக்களிடம் காணப்படுவது வழக்கம். 1980 களின் பின்னர் கிழக்கு நிலைமைகளையிட்டு அடிக்கடி கவனம் செலுத்தல், கூட்டங்கள் கூட்டுதல், அரசியல் பிரமுகர்களைச் சந்தித்தல் போன்ற விடயங்களில் இவர்கள் ஈடுபட்டனர். இவ்வாறு நடைபெற்ற கூட்டமொன்றுதான் 1987-10-03ல் கல்முனைமஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு முஸ்லிம் மக்களின் நிலை பற்றி ஆராயும் இக்கூட்டத்திற்கு கிழக்கின் அன்றைய அரசியல் வாதிகளான மூதூர் மஜீத், நிந்தவூர் முஸ்தபா, சம்மாந்துறை மஜீத், கல்முனை மன்சூர் போன்ற முக்கிய அரசியல் பிரமுகர்கள் வந்திருந்தனர். இவ்வேளை மு.கா. அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அக்கட்சி சில தேர்தல்களை கிழக்குக்கு வெளியே முகம்கொடுத்துக் கொண்டிருந்தது. இவ்வேளை இக்கூட்டத்துக்கு பிரமுகர்கள் நிலையில் வைத்து சகோதரர் அஷ்ரபுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. எனவே அவர் தனது கட்சியின் உப தவிசாளரான சட்டத்தரணி நிஜாமுதீன் (இன்றைய திகாமடுல்ல எம்.பி) அவர்களை தனது கட்சியின் பிரதிநிதியாக இம்மகா நாட்டிற்கு அனுப்பிவைத்தார். மகாநாட்டு ஏற்பாட்டாளர்களோ முஸ்தபா, மஜீத், சம்சுதீன், போன்ற அரசியல் வாதிகளுக்கு பேசுவதற்கு 15 நிமிடங்களை வழங்கினர். மு.கா. வுக்கு ஒரு நிமிடம்தானும் இல்லை. சகோதரர் நிஜாமுதீன் மிகக் கடுமையாக வாக்குவாதப்பட்ட நிலையில் மு.கா.வுக்கு 5 நிமிடங்கள் மாத்திரம் வழங்கப்பட்டன. தனது பேச்சில் சட்டத்தரணி நிஜாமுதீன் மகாநாட்டு ஏற்பாட்டாளர்களைக் கடுமையாகச் சாடிப்பேசினார். இதை நான் ஏன் கூறுகின்றேனென்றால் மு.கா. வுக்கு நாம் இடம்கொடுத்தால் எம்.பிக்கள் கோபித்து விடுவர், என்ற பயம் எல்லோரையும் ஆட்கொண்டிருந்தது.

இக்கூட்டத்தைப் பற்றி சகோதரர் காத்தான்குடி A.L.A. ஜவாத் ஒரு கண்ணோட்டத்தைத் "தினகர"னில் எழுதினார். நீண்ட நாட்களுக்குப்பின் மைக் கைப்பிடிக்க சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் போல் அரசியல்வாதிகளின் பேச்சுகள் அமைந்திருந்தன என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அஷ்ரபுக்கு மு.கா.வால் கொழும்பில் மாத்திரம் வரவேற்பின்மை இல்லை. தனது பிரதேசத்திலும் அவரை இக்கட்சிக்காக மதிக்காமல் விட்டனர். அவர் இந்தக் கட்சிக்காக அடைந்த இன்னல்கள் துன்ப துயரங்கள், புறக்கணிப்புக்கள் எவ்வளவோ எவ்வளவோ!

அரசியல் கட்சியொன்றை அதுவும் சிறுபான்மை மக்களுக்கு ஓர் அரசியல் கட்சியை உருவாக்குவது என்பது மலர்ப்படுக்கையல்ல. முட்களும் கற்களும் நிறைந்த கரடு முரடான பாதையாகும் அது. ஆபத்துக்கள் நிறைந்த இந்தப் பயணத்தின் கஷ்டங்களை உள்வாங்கிய நிலையிலேயே இம்முயற்சியை முன்கொண்டு செல்ல வேண்டிய தேவை இருந்தது.

ஏனெனில் இத்துறையை நினைத்துக் கூடப் பார்க்காதவர்கள் பலர். முயன்றவர்கள் சிலர். முயன்று தோற்றவர்கள் இன்னும் சிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947முதல் 1987 வரை சுமார் 40 வருடங்கள் எட்டுப் பாராளுமன்றத் தேர்தல்களை சந்தித்த போதும் மட்டக்களப்பின் தென்பகுதியான இன்றைய அம்பாறை மாவட்டம் தனி முஸ்லிம் பாராளுமன்றப் பிரதி நிதிகளைத் தெரிவு செய்யும் பிரதேசமாக இருந்த போதிலும் இலங்கையிலுள்ள ஒரேயொரு முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசமான இதில் ஒரு முஸ்லிம் கட்சி தோற்றம் பெறவில்லை. தோற்றம் பெற்ற கட்சிகள் கூட ஒழுங்கான பராமரிப்பு - ஆதரவு இன்றி சிலமாதங்களில் அழிந்து போயிருந்தன.

இன்றைய அம்பாறை மாவட்டத்தில் 1947-1956 வரை இரண்டேயிரண்டு தேர்தல் தொகுதிகளே இருந்தன. இரண்டிலும் முஸ்லிம்களே M.P. க்களாகத் தெரிவாகினர்.

**இன்றைய திகாமடுல்லயின் அன்றைய எம்.பிக்கள்**

**1947**

| | | |
|---|---|---|
| கல்முனை | M.S. காரியப்பர் | (U.N.P) |
| பொத்துவில் | M.M. இப்றாஹீம் | (IND) |

**1952**

| | | |
|---|---|---|
| கல்முனை | A.M. மேர்ஷா | (IND) |
| பொத்துவில் | M.M. இப்றாஹீம் | (UNP) |

**1956**

| | | |
|---|---|---|
| கல்முனை | M.S. காரியப்பர் | (தமிழரசுக்கட்சி) |
| பொத்துவில் | M.M. முஸ்தபா | (தமிழரசுக்கட்சி) |

இதுவரை இரண்டு தேர்தல் தொகுதிகளைக் கொண்டிருந்த இப்பிரதேசம் பின்னர் நான்கு தொகுதிகளாயின. அதில் அம்பாறை தவிர ஏனைய மூன்றிலும் முஸ்லிம்களே தெரிவு செய்யப்பட்டனர். (அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களுக்கென ஒரு பிரதிநிதித்துவம் 1960லேயே உருவாக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1960 (மார்ச்)**

| | |
|---|---|
| கல்முனை | M.S. காரியப்பர் (L.P.P) |
| பொத்துவில் | M.A. அப்துல் மஜீத் (IND) |
| நிந்தவூர் | M.I.M அப்துல் மஜீத் (IND) |

(இன்றைய மு.கா. சம்மாந்துறை அமைப்பாளர் A.M.M. நவ்ஷாத்தின் தந்தை)

1960 மார்ச்சில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற திரு டட்லி சேனாநாயக தலைமையிலான ஆட்சி பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கத் தவறியதால் மற்றொரு தேர்தல் ஜூலையில் நடத்தப்பட்டது.

**1960 (ஜூலை)**

| | |
|---|---|
| கல்முனை | M.C. அகமத் (தமிழரசுக்கட்சி) |
| பொத்துவில் | M.A. அப்துல் மஜீத் (சுயேட்சை) |
| நிந்தவூர் | M.I.M அப்துல் மஜீத் (சுயேட்சை) |

**1965**

| | |
|---|---|
| கல்முனை | M.S. காரியப்பர் (சுயேட்சை) |
| | M.C. அகமத் (S.L.F.P) (இடைத்தேர்தலின் பின்) |
| பொத்துவில் | M.A. அப்துல் மஜீத் (சுயேட்சை) |
| நிந்தவூர் | M.M முஸ்தபா (UNP) |

**1970**

| | | |
|---|---|---|
| கல்முனை | M.C. அஹமத் | (SLFP) |
| பொத்துவில் | M.A. அப்துல் மஜீத் | (UNP) |
| நிந்தவூர் | M.M முஸ்தபா | (UNP) |

**1977**

| | | |
|---|---|---|
| கல்முனை | A.R.M. மன்சூர் | (UNP) |
| பொத்துவில் | M.A.M ஜலால்தீன் | (UNP) |
| சம்மாந்துறை | M.A அப்துல் மஜீத் | (UNP) |

மேற்காணும் பட்டியல் மூலம் தற்போதைய அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் அதிகமாக தெரிவு செய்யப்பட்டு வந்த நிலையைக் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஓர் அரசியல் கட்சி நிறுவுவதற்குச் சாதகமான நிலையாகும். நாற்பது வருடங்கள் ஓர் அரசியல் கட்சி இல்லாத சமூகமாகவே கிழக்கு முஸ்லிம்கள் வாழ்ந்தனர். ஆனால் அவ்வேளை வடக்கில் தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி என்ற இரு கட்சிகள் இருந்தன.

1977ன் பின் தொகுதி முறையிலான தேர்தல் நடைபெறவில்லை. மாவட்ட ரீதியில் விகிதாசார முறையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறையை J.R ஏற்படுத்தினார். 1986ல் அரசியல் கட்சியாகத் தன்னை பிரகடனப்படுத்திய SLMC 1988ல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தலை முன்னோக்கியது.

## அரசியல் கட்சிகள் அஷ்ரபுக்கு முன்னும் பின்னும்

1947 முதல் 1977 வரை அதிகமான முஸ்லிம்களைத் தெரிவு செய்யும் மாவட்டமாக அம்பாறை இருந்தபோதும் இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்தபோதும் இங்கு அரசியல் கட்சிகள் உருவாக்கப்பட்டு அதனை வளர்க்கும் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

## அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி

கல்முனைத் தேர்தல் தொகுதியில் 1947, 1956, 1960 மார்ச் ஆகிய தேர்தல்களில் முறையே யூ.என்.பி. தமிழரசுக்கட்சி, தஹநாயகாவின் பிரஜாதந்திர வாதக்கட்சி ஆகியவற்றில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் 1960 ஜூலையில் நடந்த தேர்தலில் புதிதாக அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்து அதில் போட்டியிட்டார். அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி என்ற பெயரையுடைய அக்கட்சியின் சின்னமாக சூரியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கல்முனையைச் சேர்ந்த M.S. ஹமீத் அதன் செயலாளர். புதிய கட்சியின் சார்பில் கல்முனையில் அதன் தலைவர் M.S. காரியப்பர் போட்டியிட பொத்துவில் தொகுதியில் M.Z. கமால் காரியப்பர் என்பவர் போட்டியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில் இஸ்லாமிய ஐக்கிய முன்னணியின் தலைவர் M.S. காரியப்பருக்கெதிராக தமிழரசுக் கட்சி காரியப்பரின் சகோதரியின் மகனான ஜனாப் M.C. அகமத் அவர்களை தனது வேட்பாளராக நியமித்தது. இத்தேர்தலில் தமிழரசுக்கட்சி வேட்பாளரால் M.S. காரியப்பர் தோற்கடிக்கப்பட்டார். அதாவது முஸ்லிம் பிரதேசத்தில் முஸ்லிம்கட்சியின் தலைவரை தமிழரசுக்கட்சி வேட்பாளர் தோற்கடித்தார். பொத்துவிலில் இக்கட்சி சார்பில் போட்டியிட்ட கமால் காரியப்பரும் சுயேச்சை வேட்பாளர் M.A. அப்துல் மஜீத் அவர்களால் தோற்கடிக்கப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராக, பிரதிஅமைச்சராக, கபினட் அமைச்சராகப் பிரபல்யம் பெற்ற M.S. காரியப்பர் பல தேர்தல்களில் பல கட்சிகளில் வெற்றி பெற்ற அவர், தான் உருவாக்கிய கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு தமிழரசுக் கட்சி வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்ட வரலாற்றுண்மை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இத்தேர்தலில் தோல்வியுற்ற M.S. காரியப்பர் அக்கட்சியை முன்னெடுக்கும் வேலையை கைவிட்டு விட்டு அடுத்த பொதுத் தேர்தலில் (1965) சுயேட்சையாகப் போட்டியிட்டு தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் மசூர் மௌலானாவைத் தோற்கடித்தார்.

**இதன் மூலம் இப்பிரதேச மக்கள் மத்தியில் முஸ்லிம் கட்சி என்ற பெயருக்காக அதனை வரவேற்று ஆதரிக்கும் மனப்பாங்கு இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.**

முதலியார் காரியப்பர் பல்வேறு கட்சிகளில் போட்டியிட்டு கட்சிமாறியதால் தனக்குப் போட்டியிட கட்சியொன்று இல்லாமலேயே இக்கட்சியைத் தோற்றுவித்தார். என்ற ஒரு குற்றச் சாட்டு உள்ளது. ஆனால் அவர் கட்சி ஆரம்பிக்க முன்பும் பின்பும் சுயேட்சையாகப் போட்டியிட்டே வெற்றி பெற்றார் என்பது அக்குற்றச் சாட்டை அர்த்தமற்றதாக்குகிறது.

இலங்கை வரலாற்றில் எக்கட்சியும் போட்டியிட்ட உடனேயே வெற்றி பெறவில்லை. 1952ல் முதலாவது போட்டியிட்ட பண்டார நாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சியும் வெற்றிபெற முடியவில்லை. சில தொகுதிகளையே அவை கைப்பற்றின ஆனால் அதனை அடுத்துவந்த 1956ல் நடந்த தேர்தல்களில் இவ்விருகட்சிகளும் மக்களின் பேராதரவைப் பெற்றன. இதேபோல் M.S. காரியப்பர் இக்கட்சியை வளர்ச்சியடையச் செய்து மற்றுமொரு முறை மக்களின் ஆணையைக் கேட்டிருக்கலாம். மேற்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் முஸ்லிம்களின் அதிகபட்ச ஆதரவு முதலியார் காரியப்பருக்கே இருந்தது. தமிழ்மக்களின் தமிழரசுக்கட்சிக்கான வாக்குகளே அவரைத் தோற்கடிக்கச் செய்தது என்ற கூற்றும் மறுப்பதற்கில்லை.

## இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி (I.S.F)

1968 அளவில் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்களால் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி உருவாக்கப்பட்ட போதும் அது ஒரு தனித்துவமான கட்சியாகத் திகழவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப-தலைவராக இருந்து கொண்டு இவர் உருவாக்கிய இம்முன்னணி சுதந்திரக் கட்சிக்கு வாக்குச் சேர்க்கும் அமைப்பாகவே செயற்பட்டது. சுதந்திரக் கட்சி முஸ்லிம் உறுப்பினர்கள் இதன் உறுப்பினர்களாகவும் திகழ்ந்தனர். இது ஒரு தனிக்கட்சியாக தேர்தல் ஆணையாளரினால் பதியப்படவுமில்லை. தனிச்சின்னத்தைக் கொண்டிருக்கவு மில்லை. முஸ்லிம்கள் U.N.P. யின் ஆதரவாளர்கள் என்பதை உடைப்பதற்கே இம் முன்னணி பெரிதும் பயன்பட்டது.

1970 தேர்தலில் சுதந்திரக்கட்சி அமோக வெற்றியைப் பெற்று ஆட்சிக்கு வந்தது. டாக்டர் பதி நியமன அங்கத்தவராக நியமிக்கப்பட்டு கல்வியமைச்சராகவும் பதவியேற்றார்.மூதூரில் மஜீத் வெற்றிபெற்று தகவல் ஒலிபரப்பு பிரதியமைச்சரானார். கல்முனையில் அகமது வெற்றி பெற்றார். இ.சோ.மு. செயலாளர் A.H.M. பாறூக் கல்வி அமைச்சரின் அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சுதந்திரக் கட்சியின் வெற்றி இ.சோ.மு. வின் வெற்றியாக முஸ்லிம்கள் மத்தியில் கருதப்பட்டது. இ.சோ.மு. வின் தொண்டர்களால் மலே வீதியிலுள்ள கல்வி அமைச்சு நிரம்பி வழிந்தது. இ.சோ.மு. வின் காகிதத்தலைப்புகள் அரசாங்கத்தினைக்களங்களின் கோவைகளை நிரப்பின. கல்வி அமைச்சருக்கு பெரும் தலையிடியாகி விட்ட இம் முன்னணியைச் செயலிழக்கச் செய்தார் அவர். பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பமான இம்முன்னணியின் ஆயுள் மூன்று வருடங்கள் கூட நீடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் ஐக்கிய முன்னணி

1977 பொதுத் தேர்தலுக்கு முன் கல்முனையைச் சேர்ந்த சட்டத்தரணி A.M. சம்சுதீன், பஸீல் ஏ. மஜீத் போன்றோரால் கல்முனையில் உருவாக்கப்பட்ட மு.ஐ.மு. தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் கூட்டிணைந்து அதன் உதய சூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிட்டது.

வட்டுக் கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழ் மக்களிடம் தமிழ் ஈழத்துக்கான ஆணை கோரப்பட்ட இத்தேர்தலில் அதற்காக தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து போட்டியிட்ட இத்தேர்தலில் மு.ஐ.மு. இணைந்து போட்டியிட்டமை அதன் தோல்விக்கும் அழிவுக்கும் காரணமாயமைந்தது.

கல்முனையில் சட்டத்தரணி A.M. சம்சுதீன் அவர்களும் சம்மாந்துறைத் தொகுதியில் I.H.M. ஹாஷிம் அவர்களும் மூதூரில் S.M. மக்கீன் ஆசிரியர் அவர்களும் புத்தளத்தில் டாக்டர் I.M. இல்யாஸ் ஆகியோரும் இதன் சார்பில் போட்டியிட்டு அனைவரும் தோல்வியைத் தழுவினர்.

இத்தேர்தலில் சகோதரர் அஷ்ரப் இக்கட்சியின் முக்கிய பிரசாரகராகச் செயற்பட்டார். இவர்கள் வெளியிட்ட கட்சிப் பத்திரிகையான 'சமத்துவம்' அஷ்ரபின் பல ஆக்கங்களுடன் வெளிவந்தது. தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து முக்கிய அமைப்பாளர் சட்டத்தரணி A.M. சம்சுதீன் S.L.F.P. யின் அமைப்பாளராக நியமனம் பெற மு.ஐ.மு.வின் செயற்பாடு ஸ்தம்பிதமானது.

## முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி (M.U.L.F)

கல்முனையைச் சேர்ந்த அரசியல் வாதிகளான கேட்முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஏ.எம். சம்சுதீன், எம்.எச்.எம். அஷ்ரப் ஆகியோர் முஸ்லிம் அரசியல் கட்சிகளை உருவாக்கியதுபோல் தென்கிழக்கின் மற்றொரு நகரான அக்கரைப்பற்றைச் சேர்ந்த எம்.ஐ.எம். முகைதீன், எம்.எச். சேகு இஸ்ஸதீன், ஏ.எல். எம். அதாவுல்லா, எம்.ஐ. உதுமாலெவ்வை ஆகியோர் அரசியல் கட்சிகளை உருவாக்கினர். (இதில் சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளை உருவாக்கியதும் குறிப்பிடத்தக்கது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M.I.M. முகைதீனின் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம் வழங்கியிருந்தார். அதன் சின்னம் குதிரை.

நாட்டின் முக்கிய முஸ்லிம் பிரமுகர்களான டாக்டர் பதி. அலி ஸாஹிர் மௌலானா, A.L.A. ஜவாத் A.W.M. அமீர் போன்றோர் ஒத்துழைப்பு வழங்கியபோதும் அதனால் நிலைத்து நிற்க முடியவில்லை.

இன்று அக்கட்சி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. ஒரே கொடியின் கீழ் நின்று உரிமைக்காகப் போராட வேண்டிய ஒரு சமூகத்தில் மற்றொரு கட்சி உருவானதை எண்ணி அஷ்ரப் வேதனைப்பட்டார். இது தனது கட்சிக் கெதிரான முயற்சி மட்டுமல்ல சமூகத்தின் நன்மைக் கெதிரானது என்றும் அவர் கூறினார். பின்னாளில் அஷ்ரப் அமைச்சராக வந்த பின் இக்கட்சியை முகைதீன் கலைத்து விட்டு மு.கா.வில் சங்கமமாகினார்.

சகோதரர் M.H. சேகு இஸ்ஸதீன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் கட்சி எனும் பெயரில் ஒரு கட்சியை ஆரம்பித்து மு.கா. வினதும் அஷ்ரபினதும் கொள்கைகட்கு நேர் மாறான கருத்துக்களை மக்கள் முன் வைத்தார். அஷ்ரபை மிகக் கடுமையான தொனியில் விமர்சனம் செய்தார். பின்னர் ஐ.தே. க வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டு நடாளுமன்றம் சென்ற சேகு இஸ்ஸதீன் பின்னர் வந்த தேர்தலில் யூ.என்.பி வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். இவர் ஆரம்பித்த கட்சியைக் கொண்டு அவர் மக்கள் முன் வரவில்லை. இன்று அது இடம்தெரியாமல் மறைந்து விட்டது.

அக்கரைப்பற்றின் மற்றொரு அரசியல் வாதியான சகோதரர் A.L.M. அதாவுல்லா மு.கா. விலிருந்து வெளியேறி அஷ்ரப் காங்கிரஸ் என்றொரு கட்சியை உருவாக்கினார். S. சுபைர்தீன் அவர்களை அதன் தலைவராக்கினார். பின்னர் கட்சியல்ல சமூக நல இயக்கம் அதுவென்றார். 2004 நியமனம் தாக்கல் செய்ய சில நாட்களுக்கு முன் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் என்றொரு கட்சியை ஆரம்பித்தார். 2005ல் அக்கட்சியின் பிளவைத் தொடர்ந்து மீண்டும் தேசிய காங்கிரஸ் என்றொரு கட்சியை உருவாக்கியுள்ளார். சுதந்திரக்கட்சி வேட்பாளராகவே அதாவுல்லா தேர்தலில் குதித்து வெற்றி பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாபில் நஸீர் அகமத், மற்றும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த முன்னாள் எம்.பி M.I. உதுமாலெவ்வை போன்றோர் சேர்ந்து ஜனநாயக ஐக்கிய முன்னணி என்ற ஒரு கட்சியை உருவாக்கி யுள்ளனர். கிழக்கு மக்கள் முன் இது இன்னும் கொண்டுவரப்படவிலலை.

அஷ்ரப் என்ன செய்தார்? 1980ல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி விட்டு 1986ல் அதனை அரசியல் கட்சியாகப் பிரகடனம் செய்து பின்னர் தேர்தல் ஆணையாளரிடம் சென்று அங்கீகாரம் பெற்றார். அதன்பின் மக்களின் அங்கீகாரத்திற்காக மக்கள் முன் கொண்டு வந்தார். முஸ்லிம் சமூகம் அதனை வரவேற்று ஆதரித்தது. முதலில் மாகாணசபைத் தேர்தலுக்கு முகம் கொடுத்து பல அங்கத்தவர்களைப் பெற்று அதன்பின் 1989ல் பாராளுமன்றத்தேர்தலை எதிர்நோக்கி பல பிரதிநிதிகளைப் பெற்றார். அக்கட்சியின் மரச்சின்னம் இன்னமும் வாழ்கிறது.

ஒரு கட்சியின் உருவாக்கத்துக்கு அஷ்ரப் காட்டிய வழியே இதுவாகும். பெயருக்காக கட்சியை உருவாக்குவது மட்டுமல்ல. அதனை தேர்தல் ஆணையாளர் அங்கீகரிக்க வேண்டும். அதற்கு அடையாளமாக சொந்தமாகச் சின்னம் ஒன்றைப் பெற வேண்டும். மக்களிடம் அதனைக்கொண்டு போக வேண்டும். அக்கட்சியை மக்கள் நிராகரிக்கிறார்களா? அல்லது ஆதரிக்கிறார்களா? எனப் பார்க்க வேண்டும். மக்கள் ஆதரவு வழங்கிய பின்பே அதனை முன் கொண்டு செல்ல வேண்டும்.

முதலியார் காரியப்பர் என்ன செய்தார்? கட்சிக்கு ஆணையாளர் அங்கீகாரம் வழங்கிய போதும் மக்கள் ஆதரவு போதாததால் அதனை முன் கொண்டு செல்வதை நிறுத்தினார். அஷ்ரப் மக்கள் ஆணை பெற்றே இக்கட்சியை முன்னெடுத்தார்.

## நிலைத்து நிற்கும் கட்சி

அஷ்ரப் உருவாக்கிய மு.கா. மட்டுமே இன்று முஸ்லிம் சமூகத்திடம் நிலைத்து நிற்கும் கட்சியாகும். 1988 முதல் இன்றுவரை நடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் முஸ்லிம் சமூகம் இதனை நிரூபித்து வருகிறது. அஷ்ரபின் வழியில் அக்கட்சியைப் பொறுப்பேற்று சகோதரர் றஊப் ஹகீமும் அதனை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கிறார். மக்களின் ஆதரவு தொடர்ந்து பெருகிக் கொண்டே வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு.கா.வுக்கு முதல் எவ்வாறு ஒரு கட்சி முஸ்லிம்கள் மத்தியில் நிலைபெற வில்லையோ அதேபோல் அதற்குப் பின்னரும் இன்னமும் ஒரு கட்சி நிலைபெற வில்லை.** (பத்திரிகைகளைப் புரட்டினால் முஸ்லிம் சமூகத்திடம் டசன் கணக்கில் கட்சிகள் இருப்பது போல ஒரு பிரமை ஏற்படும். ஆனால் அவைகள் வாழ்வது பத்திரிகைகளில் மாத்திரம் தான்: மக்கள் மனங்களில் அல்ல)

இன்று வட,கிழக்கில் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அரசியல் கட்சிப்பிரமுகர்கள் எவரை நோக்கினாலும் அவர்கள் மு.கா.வில் இருந்தவர்களாகத்தானிருப்பர். சிலர் தேர்தலுக்கு மாத்திரம் வந்து சேர்ந்து தேர்தல் முடிந்த பின் பிரிந்து சென்றவர்களாயிருப்பர். தேர்தல் காலத்தில் அஷ்ரபின் படத்தைப்போட்டு தாங்கள்தான் மு.கா.வின் உண்மை வாரிசுகள் என்று கூறுவோரும் உளர்.

உண்மையாக அஷ்ரபை நேசிக்கும் ஒருவன் - அஷ்ரபை நன்கு அறிந்த ஒருவன் - S.L.M.C க்கு விரோதமாகச் செயற்பட மாட்டான். அவரின் S.L.M.C க்கு எதிராகச் செயற்பட்டவர்களை அவர் எவ்வாறு நோக்கினார் என்பதை அவர்கள் நன்கறிவர். எனவே அவரது நாமத்தை வாழவைக்கும் அவரது தீராத இலட்சியத்தின் - சின்னமான கட்சிக்கு விரோதமாக அவர்கள் செயற்பட மாட்டார்கள். அஷ்ரப் தனது குடும்பத்தைவிட ஏக புதல்வனை விட இக்கட்சியையே அதிகம் நேசித்தார். இன்று இந்நாட்டில் வாழும் இலட்சக்கணக்கான மு.கா. ஆதரவாளர்கள் அஷ்ரப் மீது கொண்ட பாசத்தை, அனுதாபத்தை அவரது கட்சிக்கு ஆதரவளிப்பதன் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் அண்மையில் சகோதரர் சம்மாந்துறை மன்சூர் ஏ.காதர் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது மர்ஹூம் அஷ்ரப் தமது இறுதிக்காலத்தில் தனது கையிலடித்து சத்தியம்கேட்டு தனது கட்சிக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அதனால் எதுவரினும் அஷ்ரபின் அக்கட்சியை தான் ஆதரித்து நிற்பேன் என்றார். உண்மையாகவே இவ்வாறு அஷ்ரப் பக்தர்கள் இந்நாட்டில் ஏராளம்! ஏராளம்! இவர்கள் அந்த நன்மைக்காக அஷ்ரப் பெயரை உச்சரிப்போர்கள் இல்லை.

அஷ்ரபுக்கு மட்டும்தானா கட்சி உருவாக்க முடியும்? தங்களுக்கும் அது முடியாதா? என கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழிபோல் சிலர் நடந்து கொண்டாலும் அஷ்ரப் நிலைத்து வாழ்வார் என்பதை இவர்கள் விளங்கினால் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளை உருவாக்கி அதன் மூலம் முஸ்லிம்களின் குரலை மலினப்படுத்துவதற்காக எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் முஸ்லிம் சமூக விரோதச் செயல்களாகும்.

கட்சித்தலைவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுக்கும் ஒரு நடைமுறை இருப்பதால் பாராளுமன்றம் செல்பவர்கள் எல்லாம் தலைவர்களாக இருக்க விரும்புகின்றனர். முஸ்லிம் சமூகத்தில் அமைச்சர்கள் அதிகமாக இருப்பது பயன்தரக்கூடியது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதனால் அவர்கள் வாழும் சமூகம் பாதிப்படையாமல் அவர்களது கட்சிகளின் கொள்கைகள் இருக்க வேண்டும். சமூகத்திற்கு தீங்கு வரும்போது அமைச்சுப்பதவிகள் அத்தீங்கைத் தடுப்பதற்கு தடைக்கல்லாக இருக்கக்கூடாது.

சுனாமிக் கட்டமைப்பு பற்றி முஸ்லிம் சமூகம் பெரும் கவலையுடன் இருந்த வேளை சில முஸ்லிம் அரசியல் வாதிகள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக எமக்கு வேண்டியதெல்லாம் தருவார். அவர் எமக்கு வாக்குறுதியளித்துள்ளார். என்றனர். ஆனால் அதே ஜனாதிபதி முஸ்லிம் சமூகத்தை முற்றாகப் புறந்தள்ளி சுனாமிக் கட்டமைப்பில் கையொப்பமிட்டபோது அவர்கள் பேச்சு மூச்சற்றுக் கிடந்தனர். கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ஹர்த்தால்கள் போட்டு கடைகளை அடைத்து பாடசாலைகளை மூடி, தமது எதிர்ப்புக்களை காட்டியபோதும் இவர்கள் வாய்திறக்கவில்லை போதாக்குறைக்கு ஜனாதிபதி முஸ்லிம் பிரமுகர்களை 3.8.2005 ஆம் ஜனாதிபதிச் செயலகத்தில் சந்தித்தபோது (நானும் அவர்களில் ஒருவராக இருந்தேன்.) எனது முஸ்லிம் அமைச்சர்களுக்கு நான் ஆறுமாதங்களாக இக்கட்டமைப்பு பற்றி விளக்கினேன். ஒருவராவது இது முஸ்லிம் சமூகத்துக்கு எதிரானது எனக் கூறவில்லையே என்றார்.

(சுனாமிக்கட்டமைப்பில் அரசாங்கம் கையொப்பமிடுதவற்கு இரண்டு தினங்களுக்கு முன் எமது கிழக்கு மகாண ஜம்இய்யதுல் உலமா எனது தலைமையில் சென்று ஜனாதிபதியைச் சந்தித்து மேற்படி கட்டமைப்பு பற்றிச் சுமார் மூன்று மணி நேரங்கள் கலந்துரையாடி முஸ்லிம்களின் கோரிக்கையை முன்வைத்தது குறிப்பிடத்தக்கது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்வரவும் வெளிச்செல்லலும்

மு.கா. வைப் பொறுத்தவரை பலர்வந்து சேர்வதும் அதே வேகத்தில் அவர்கள் கட்சியை விட்டு வெளியேறிச் செல்வதும் வெளியேறியோர் கொடுக்கும் அறிக்கைகட்கு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுப்பதும் இன்று நேற்று ஆரம்பமான தொன்றல்ல. கட்சி ஆரம்பித்தது முதல் இன்றுவரை தொடர்கதையாகவே இது செல்கிறது. அஷ்ரபின் ஆளுமைத் திறனால் - வாதத்திறனால் - கவரப்பட்டு உள்வருவோர் அதே ஆளுமைத் திறனைக் காட்டி "One man show" என்று குற்றம் சாட்டி வெளியேறிச் சென்ற வரலாறு நிறைய உண்டு.

இக்கட்சியைப் பொறுத்தவரை அதன் ஆரம்பகாலத்தில் அதனை வளர்ப்பதில் சகோதரர் சேகு இஸ்ஸதீன் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். கட்சியின் இரண்டாவது நிலையிலிருந்த அவரின் துணிச்சலான சில ஊக்குவிப்புக்கள் கட்சிக்கு உதவின. ஆனால் 1992ல் அவர் தலைவருக் கெதிராக பகிரங்கமாக அறிக்கைகள் விட்டதால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். ஷேகு இஸ்ஸதீனின் வலைப்பின்னலில் சிக்கியுள்ள அஷ்ரபால் அதனை விட்டு வெளியேறவே முடியாது என்று விமர்சித்தவர்களெல்லாம் வாயடைத்தனர்.

இதே போல் கட்சியின் செயலாளர்களாகவும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் இருந்த பரிஸ்டர் ஒஸ்மன், சுஹைப் ஏ.காதர் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான N.M. புகார்தீன், டாக்டர் இல்யாஸ், M.M. சுஹைர் பிரதியமைச்சராகப் பணிபுரிந்த சுந்தரமூர்த்தி அபூபக்கர், கட்சியின் தவிசாளராகவிருந்த அப்துர் ரசூல் தேசிய அமைப்பாளர் மயோன் முஸ்தபா, மாகாண சபை உறுப்பினர்களாகவிருந்த SLM ஹனீபா, A.C. பத்றுத்தீன், முகைதீன் அப்துல்காதர், ஜவாத் மரிக்கார், மஜீத் மௌலவி, M.M. ஆதம்பாவா இவ்வாறு பட்டியல் நீண்டுகொண்டு போகும். இவர்களெல்லாம் கட்சியை விட்டு வெளியேறி தலைவருக்கெதிராக கடுமையான அறிக்கைகளை விட்டனர். ஆனால் கட்சி நாளுக்கு நாள் வளர்ச்சிப்பாதையில் வீறுநடைபோட்டது.

இவ்வாறு கட்சியிலிருந்து பலர் பிரிந்து செல்ல இக்கட்சியின் பக்கம் வந்த பிரமுகர்கள் தொகையும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956ல் பாராளுமன்றம் சென்று 1959ல் தஹா நாயக பிரதம மந்திரியாகப் பதவி வகித்த போது நிதியமைச்சராகப் பணிபுரிந்த M.M. முஸ்தபா J.R. காலத்தில் பொத்துவில் எம்.பி யாகவிருந்த M.I. உதுமாலெவ்வை, மூதூர் எம்.பி மஜீதின் மகன் நஜீப் சுதந்திரக் கட்சி அமைப்பாளராகவிருந்த தொப்பி முகைதீன் 1960ம் ஆண்டுத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டு 223 வாக்குகளால் தோல்வியைத் தழுவிய மசூர் மௌலானா, மட்டு எம்.பி. றிஸ்வி சின்னலெப்பை போன்ற கிழக்கின் முக்கிய பிரமுகர்கள் இளைஞரான அஷ்ரபின் தலைமைத்துவத்தை ஏற்று இக்கட்சியில் இணைந்தனர். இவையெல்லாம் அஷ்ரபின் ஆளுமைக்குக் கிடைத்த பரிசுகளாகும். இவ்விடத்தில் பழையதொரு விடயம் ஞாபகத்துக்கு வருகிறது. அஷ்ரப் மு.கா.வை உருவாக்கி ஊர், உளராக கூட்டங்கள் வைத்து முக்கிய பிரமுகர்களை அழைத்து அறிமுகம் செய்து கொண்டு வந்தார். அவ்வாறானதொரு கூட்டம் நிந்தவூரில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேச்சுக்கள் முடிந்து கேள்விகள் கேட்கும் நேரம். அப்போது ஒருவர் எழுந்து "தாங்கள் கட்சியை வளர்த்து அதனை உயர்நிலைக்கு கொண்டு வரும் போது ஓர் அரசியல் பிரமுகர் பெயரைக் குறிப்பிட்டு அப்பிரமுகர் உங்கள் கட்சியில் இணைய வருவார். அவரை அப்போது சேர்ப்பீர்களா? ஆம் என்றால் இப்போதே கூறிவிடுங்கள். நாங்கள் இப்போதே இவ்விடம் இருந்து இக் கட்சியை விட்டுச் சென்று விடுகிறோம்" என்றார். இவ்வாறு வினா எழுப்பப்பட்டதும் அஷ்ரப் இதற்கு எப்படிப் பதில் கொடுக்கப் போகிறார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். அஷ்ரப் கூறினார். "முஸ்லிம் காங்கிரஸ் ஓர் Umblrella Organisation இது அனைவரும் சேர்ந்து கொள்ளும் அமைப்பு. இதனால்தான் இதற்கு மு.கா. எனப் பெயரிடப்பட்டுள்ளது. யாரைச் சேர்ப்பது. யாரை விடுவது என்பது நான் எடுக்கும் முடிவல்ல. நாமெல்லோரும் சேர்ந்துதான் அது பற்றிய முடிவுக்கு வரவேண்டும். இக்கட்சியைப் பொறுத்தவரை நானும் உங்களைப் போன்ற ஒருவனே! நாம் எல்லோரும் சேர்ந்து தான் எந்த விடயத்துக்கும் முடிவுக்கு வரவேண்டும்" என்றார்.

இந்தப்பதில் கேள்விகேட்டவருக்கு பெரும் திருப்தியைக் கொடுத்தது. சபையோரும் அஷ்ரபின் சாணக்கியமான பதிலை மெச்சினர்.

இன்று அஷ்ரபின் கட்சி எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை கட்சித்தாவலாகும். ஒரு காலத்தில் தமிரசுக்கட்சியில் சேர்ந்து எம்.பி.யான பின் அக்கட்சியிலிருந்தால் உயர முடியாது என்ற காரணத்தால் வேறுகட்சிகளுக்குச் சென்றதுபோல் இன்று தனிநபராக மு.கா.வுக்கு வந்து சேர்ந்து எம்.பியாகிவிட்டு அதன்மூலம் தனக்கென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆதரவு வட்டத்தையும் உருவாக்கிவிட்டு அந்த ஆதரவாளர்களை அழைத்துக்கொண்டு பேரினக் கட்சிகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். இது கட்சி எதிர்நோக்கும் பெரும் சவாலும் சமூகம் எதிர்நோக்கும் பாரிய ஆபத்துமாகும்.

1977 முதல் 2000 வரை வட,கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களில் ஒரு பிரதிநித்துவத்தைக் கூடப் பெற முடியாமல் இருந்த சுதந்திரக்கட்சியில் இன்று எத்தனையோ எம்.பி க்கள், அமைச்சர்கள்! இவர்கள் அனைவரும் மு.கா விலிருந்து சென்றவர்களே!

இதன் மூலம் ஒன்று தெளிவாகின்றது.

சிங்களப் பெரும்பான்மைப் கட்சிகளைப் பொறுத்தவரை இனிமேல் அக்கட்சிகளை வளர்ப்பதற்கென பெரும் முயற்சி செய்ய வேண்டிய அவசியமோ அதற்காக அதிக பணம் செலவழிக்க வேண்டிய தேவையோ இல்லை. கட்சி அமைப்பாளர்களோ, அங்கத்தவர்களோ, அலுவலகங்களோ தேவையில்லை.

மு.கா. வினால் முகவரியைப் பெற்றுக் கொண்ட நல்ல செழிப்பானவர்களைப் பிடித்துக் கொண்டால் போதும். ஒரு கல்லில் இரு மாங்காய். முஸ்லிம்களுக்கான கட்சியை இவர்களைக் கொண்டு அழிப்பது, முஸ்லிம் பிரதேசங்களில் பேரினக் கட்சிகளுக்கு இடம் பெற்றுக்கொள்வது.

அண்மைய கட்சித்தாவல்கள் இதனை நன்கு நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

## அதிக கட்சிகள் அதிக நட்டம்

அதிக கட்சிகளை உருவாக்கி அதன் மூலம் நட்டங்களைச் சந்தித்த தமிழ் சமூகம் தமது தவறையுணர்ந்து கடந்த 2004 பொதுத் தேர்தலில் ஒன்றுபட்டு அதிக ஆசனங்களைப் பெற்று தாம் முன்பு விட்ட தவறைத் திருத்திக் கொண்டு விட்டார்கள்.

ஆனால் தமது பக்கத்து சகோதரர்களிடமிருந்து பாடங்களைப் பெற மறுத்தவர்களாக முஸ்லிம்களோ நாளுக்கு நாள் கட்சிகளை உருவாக்கி தமது சமூகத்தின் அழிவுக்கு வழிகோலிக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கின் சில மாவட்டங்களில் அதிக கட்சிகளால் ஏற்பட்ட விளைவை நோக்குவோம்.

**மாவட்டம்** :~ **திருகோணமலை**
**தேர்தல் முடிவு** :~ **2000ம் ஆண்டு**

| கட்சிகள் பெற்ற | | | வெற்றி பெற்ற எம்.பிக்கள் |
|---|---|---|---|
| P.A | 53860 | 3 ஆசனங்கள் | நஜீப் ஏ. மஜீத் |
| U.N.P | 46700 | 1 ஆசனம் | M.S. தவ்பீக் |
| TULF | 14090 | - | MKDA குணவர்தன |
| EPDP | 4524 | - | M.A.M. ம.ர்றூப் |
| தமிழ் காங்கிரஸ் | 3748 | - | |
| JVP | 3301 | - | |
| சுயேச்சை 2 | 2621 | - | |
| சுயேச்சை 3 | 1434 | - | |
| சுயேச்சை 6 | 872 | - | |
| TELO | 497 | - | |

இத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரசும் சுதந்திரக் கட்சியும் இணைந்து P.A. யின் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டு மூன்று ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள தமிழ்கட்சிகள், TULF, EPDP, ACTC, Ind I, II & III & Telo எனப் பிரிந்து போட்டியிட்டபோது அவர்களால் ஓர் ஆசனத்தைக் கூடப் பெற முடியாமல் போனது. **1947 முதல் ஒன்று முதல் இரண்டு தமிழ்ப்பிரதிநிதிகளைப் பெற்று வந்த திருமலை மாவட்டத்தில் ஒரு பிரதிநிதிகூட தமிழர் இல்லாமல் போனது கவனிக்கத் தக்கதாகும்.** மேற்காணும் தேர்தல் வாக்குகளின்படி TULF 1600 வாக்குகளை மட்டும் மேலதிகமாகப் பெற்றிருந்தால் அதற்கு ஓர் ஆசனம் கிடைத்திருக்கும். P.A. யின் ஆசனம் இரண்டாகக் குறைந்திருக்கும். அதிக கட்சிகள் அவர்கட்கு எதனைக் கொடுத்தது என்பது இதன்மூலம் தெளிவாகின்ற தல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2004 தேர்தலில்

இதே மாவட்டத்தில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து போட்டியிட்டதால் மாவட்டத்தையே அவர்கள் வெற்றி பெற்று இரண்டு பிரதி நிதிகளைப் பெற்றனர்.

**மாவட்டம் : திருகோணமலை**
**ஆண்டு : 2004**

| தேர்தல் முடிவுகள் | | ஆசனம் | வெற்றி பெற்ற எம்பிக்கள். |
|---|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 68955 | 02 | 1. இரா. சம்பந்தன்<br>2. க. துரைரட்ணசிங்கம் |
| மு. காங்கிரஸ் | 65187 | 01 | 1. நஜீப்.ஏ. மஜீத் |
| P.A | 31053 | 01 | 1. ஜயந்த விஜேசேகர |
| U.N.P | 15693 | - | |
| ஹெல உறுமய | 791 | - | |
| EPDP | 540 | - | |

2000ம் ஆண்டு பலகட்சிகளால் தமிழர் அடைந்த தோல்வியையும் 2004ல் ஒற்றுமையால் அவர்கள் அடைந்த வெற்றியையும் இதன் மூலம் காணலாம்.

அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக கட்சிகள் ஏற்படுத்திய அனர்த்தத்தைக் கவனிப்போம்.

20671
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம் : மட்டக்களப்பு
ஆண்டு : 2000

| கட்சி | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| TULF | 54448 | 02 |
| NUA | 53646 | 01 |
| UNP | 29165 | 01 |
| PA | 16510 | 01 |
| DPLF (புளட்) | 9030 | - |
| தமிழ் காங்கிரஸ் | 6968 | - |
| சுயே 1 | 5556 | - |
| Telo | 3909 | - |
| EPDP | 3325 | - |

இம் முடிவுகளின்படி மேலும் 505 வாக்குகளை மாத்திரம் TULF பெற்றிருந்தால் அக்கட்சி மூன்று ஆசனங்களைப் பெற்றிருக்கும். இக்குறைவினாலேயே P.A. அங்கத்தவர் அதிர்ஷ்டவசமாக வெற்றியீட்டினார். இதில் போட்டியிட்ட கூட்டணி, தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சிகள் ஓர் ஆசனத்தை பெறாவிடினும் கிட்டத்தட்ட 30,000 வாக்குகளை அவர்கள் பிரித்து தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்றைத் தடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2004 தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட்டு போட்டியிட்டதால் அவர்கள் நான்கு பிரதிநிதித்துவங்ளைப் பெற்றனர்.

மாவட்டம் : மட்டக்களப்பு
ஆண்டு : 2004

| கட்சி | பெற்ற வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| தமிழரசுக்கட்சி | 161011 | 04 |
| மு.காங்கிரஸ் | 43131 | 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை 2000ம் ஆண்டு அதிக கட்சிகளால் இரண்டு பேரை மட்டும் பெற்ற தமிழர் கூட்டணி 2004ல் ஒன்றுபட்டதால் நான்கு ஆசனங்களைப் பெற்றது.

இதுபோன்றதொரு நிலை தமிழ்மக்களுக்கு திகாமடுல்ல மாவட்டத்திலும் ஏற்பட்டது. திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ் மக்களின் அதிக கட்சிகளினால் அவர்களின் பிரதிநிதித்துவம் 1994ல் இழக்கப்பட்டது.

**திகாமடுல்ல தேர்தல் முடிவுகள்:**

| | 1994 | ஆசனம் |
|---|---|---|
| UNP | 78762 | 03 |
| SLMC | 75092 | 02 |
| PA | 54150 | 01 |
| TULF | 24526 | - |
| TELO | 4192 | - |
| IND | 3366 | - |

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL

இம்முடிவின்படி தமிழர் விடுதலைக் கூட்டணி மேலதிகமாக 4061 வாக்குகளைப் பெற்றிருந்தால் அதற்கு ஓர் ஆசனம் கிடைத்திருக்கும். Telo 4192 வாக்குகளையும் சுயேச்சைக்குழு 3366 வாக்குகளையும் மொத்தம் 7758 தமிழ் வாக்குகளைப் பிரித்ததால் மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதிகள் எவருமே தெரிவு செய்யப்படவில்லை. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் மாவை சேனாதிராஜா தோற்கடிக்கப்பட்டார். இந்த தமிழர்களின் ஒற்றுமையீனத்தால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவம் மு.கா வுக்குக் கிடைத்தது.

இதனைப் பாடமாகக் கொண்டு 2000ம் ஆண்டுத் தேர்தலில் ஒற்றுமைப்பட்டு சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து சுயேட்சையில் போட்டியிட்டதால் கடந்த (1994) தேர்தலில் பல கட்சிகளால் இழந்த பிரதி நிதித்துவத்தை மீண்டும் பெற்றனர்.

இந்த ஒற்றுமை முயற்சியினால் 2000ம் ஆண்டு தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் மீண்டும் பெறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம் : திகாமடுல்ல
ஆண்டு : 2000

| கட்சி | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| P.A | 136423 | - 04 |
| UNP | 101628 | - 02 |
| IND 2, | 19812 | - 01 |

சுயேட்சையாகப் போட்டியிட்ட குணசேகரம் சங்கர் 12590 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டார். இம் முடிவுகளின்படி தமிழ் மக்களின் சுயேச்சைக் குழு 4138 வாக்குகள் குறையப் பெற்றிருந்தால் மீண்டும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டிருக்கும். அவ்விடத்தில் UNP மேலதிக ஆசனம் ஒன்றைப் பெற்றிருக்கும்.

மேலே நாம் கூறியுள்ள தரவுகளின்படி தமிழ் மக்கள் மத்தியில் பலகட்சிகள் போட்டியிட்டதால் 2000ம் ஆண்டுத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் அவர்களால் ஒருவர் கூட வெற்றி பெற முடியாமல் போனதையும் 1994ல் திகாமடுல்லவில் அதே நிலை ஏற்பட்டதையும் 2004ல் அவர்கள் ஒற்றுமைப் பட்டபோது திருமலை மாவட்டத்தையே வென்று இரண்டு பிரதிநிதிகளைப் பெற்றதையும் கவனித்தோம். மட்டக்களப்பில் 2000ம் ஆண்டில் இரண்டைப் பெற்றவர்கள் 2004ல் நான்கு ஆசனங்களைப் பெற்றார்கள்.

**எனவேதான் அதிக கட்சிகள் தமிழ் மக்களுக்கு 2000ம் ஆண்டுத் தேர்தலில் ஏற்படுத்திய பாதக விளைவு போன்று ஒன்றை முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படுத்தவே இன்றைய கட்சி உருவாக்குவோர் மேற்கொள்ள உள்ளனர் என்ற எச்சரிக்கையை முஸ்லிம் சமூகத்துக்கு விடுக்க விரும்புகின்றேன்.**

அதிககட்சிகள் ஏற்படுத்தும் நட்டங்களில் மற்றொன்று சமூகத்தின் ஏகோபித்த கருத்தை இழத்தலாகும். இலங்கையின் வட, கிழக்குப் பிரதேசங்கள் ஆயுத யுத்தம் நடைபெறும் ஒரு பிராந்தியமாகும். இங்கே வாழும் சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு அரசியல் ரீதியில் பாதுகாப்பளிக்க உதவுவது அவர்களின் அரசியல் கட்சியாகும். இது பலமாகவுள்ளது; மக்கள் அதனை ஆதரிக்கிறார்கள் எனும் நிலை வரும்போதே அதன் கருத்துக்கள் செல்லுபடியாகும். 1992ல் கிழக்கில் தமிழ் குழுக்களால் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு கப்பங்கள் கோரப்பட்ட நிலையில் அஷ்ரப் என்ன செய்தார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை கரிநாள் என்றதொரு பிரகடனத்தைச் செய்து பாராளுமன்றத்தைக் கூட ஸ்தம்பிதமடையச் செய்து கிழக்கில் நடக்கும் அட்டூழியங்களை உலகறியச் செய்தார். மேலும் இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்கள் நிலை என்ன வென்பதைத் தெளிவுபடுத்தினார். வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டுமெனில் முஸ்லிம்களுக்கு என்ன கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார். இதெல்லாம் ஒரு கட்சியால் கிடைத்த நன்மைகளாகும். பல கட்சிகள் இருந்தால் என்ன நடக்கும்? ஒரு கட்சி இணைந்த வடகிழக்கில் முஸ்லிம் அலகு எனக்கோர மறுகட்சி வடக்கு வேறு, கிழக்கு வேறு பிரிக்கப்படவேண்டுமெனக் கோஷமெழுப்ப மற்றுமொரு கட்சி தென்கிழக்கு அலகு என்றொரு கருத்தைக் கூறிக் கொண்டிருந்தால் முஸ்லிம்களின் நிலை என்னாவது?

சுனாமிக் கட்டமைப்பு தொடர்பான கோரிக்கை எழுந்த போது முஸ்லிம் சமுதாயம் இந்த நட்டத்தைக் கண்முன்னால் கண்டது. அதாவது சுனாமியால் அதிக இழப்புக்குள்ளான சமுதாயமாக முஸ்லிம்கள் இருந்த போதும் சுனாமிக்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பில் முஸ்லிம்களையும் ஒரு கையொப்பதாரராகச் சேர்த்துக்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா மறுத்தார். அப்போது BBC உலகசேவை நிருபர் ஒருவர் முஸ்லிம் சமுதாயத்தின் ஒரு பிரமுகரை நோக்கி கேள்வியெழுப்பினார். நீங்கள் கையொப்ப உரிமை கேட்கிறீர்களே உங்களிடம் பல கட்சிகள் உள்ளன யார்? எக்கட்சி? உங்களுக்காக கையொப்பமிடுவது எனக் கேட்டார்.

இனப்பிரச்சினை தீர்வு நிலை வரும் போது இவ்வாறான கேள்விகள்தான் முஸ்லிம் சமூகத்திடம் கேட்கப்பட்டு சுனாமி கட்டமைப்பில் ஒதுக்கப்பட்டது போல் மற்றொரு தோல்வி முஸ்லிம் சமூகத்துக்கு வரப்போகிறது. அதற்குரிய அடித்தளத்தைத் தான் புதிய கட்சி அபிலாசைக்கார்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ரப் அரசியலில் ஏற்படுத்திய மாற்றங்கள் - I - அஷ்ரப் யுகம்

ஒரு காலத்தில் இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றான தமிழ் நாட்டை அகில இந்திய தேசிய காங்கிரஸே ஆட்சி செய்தது. அகில இந்திய காங்கிரஸைச் சேர்ந்த M. பக்தவச்சலம் என்பவர் இறுதியாக தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அவருக்குப் பின் அப்பதவி பிராந்தியக் கட்சியொன்றுக்குச் சென்றது. ஆம் தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் C.N. அண்ணாதுரை அப்பதவியைக் கைப்பற்றினார். நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், எம்.ஜி.ஆர் போன்றோர் தி.மு.க. வின் முக்கிய தலைவர்களாக இருந்தனர்.

பலவருடங்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகக் கடமையாற்றிய அறிஞர் அண்ணாவின் மரணத்தைத் தொடர்ந்து கட்சியின் தலைமைப்பதவி - முதலமைச்சர் பதவி - யாருக்கு என்ற போட்டி நிகழ்ந்தது. அண்ணாவுக்கு அடுத்த ஸ்தானத்திலிருந்த நடமாடும் பல்கலைக்கழகம் என வர்ணிக்கப்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் ஒதுக்கப்பட்டு மூன்றாவது இடத்திலிருந்த கலைஞர் மு.கருணாநிதி கட்சித் தலைமையை - முதலமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றார். இவ்வாறு கருணாநிதி பதவியைப் பெற எம்.ஜி.ஆர் போன்றோர் காரணமாக அமைந்தனர்.

பின்னர் கருணாநிதிக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தொடர்ந்து தி.மு.க. விலிருந்து பிரிந்து சென்ற எம்.ஜி.ஆர் அண்ணா தி.மு.க. என்றதொரு கட்சியை உருவாக்கினார். தி.மு.க. இரண்டாக உடைந்தது. அண்ணாவின் தம்பிகள் இரு துருவங்களாகப் பிரிந்தனர். பின்னர் நடந்த தேர்தல்களில் இவ்விரு கட்சிகளுக்குமிடையேதான் மோதல். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அ.தி.மு.க. எதிர்க்கட்சியாகவிருப்பதும் அண்ணாதி மு.க. வின் ஜெயலலிதா பதவிக்கு வந்தால் தி.மு.க. வின் கருணாநிதி எதிர்க் கட்சியிலிருப்பதும் அறிந்ததே!

அண்ணாதுரையின் தி.மு.க. வரவால் அகில இந்திய ரீதியில் ஆட்சிசெலுத்தி தமிழ் நாட்டையும் நீண்டகாலம் ஆட்சிசெய்த அகில இந்திய காங்கிரஸ் தமிழ்நாட்டில் எவ்வாறு ஆட்சி அந்தஸ்தை இழந்து எதிர்க்கட்சித்தலைமை அந்தஸ்தையும் இழந்ததோ அண்ணாவின் மரணம் தமிழ்நாட்டில் தோற்றுவித்த அதேவழிமுறையை அஷ்ரபின் மரணம் வட, கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்துள்ளது. இன்று வட, கிழக்கின் முஸ்லிம் பிரதேச அரசியல் அஷ்ரப் அரசியலாகவே மாறியுள்ளது. இதனை "அஷ்ரப் யுகம்" என்று கூறலாம்.

இந்த யுகத்துக்கு முன் வட, கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் எம்.பிக்களாக இருந்தோர் U.N.P. SLFP, FP போன்ற கட்சிகளில் அல்லது சுயேச்சையாக போட்டியிட்டே பாராளுமன்றம் சென்றனர்.

ஆனால் இன்றைய நிலைமை என்ன?

முஸ்லிம்களைப் பொறுத்தவரை வட, கிழக்கில் இருந்து பாராளுமன்றம் செல்வதாயின் அஷ்ரப் உருவாக்கிய மு.கா.வை நாடிவர வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

எனவே இந்த ஏணியைப் பாவித்து நாட்டுக்கு அறிமுகமாகி எம்.பி பதவியைப் பெற்று மேலும் உயர்வதற்காக பேரினக் கட்சிகளுக்குத் தாவுவோரும் இன்று அதிகரித்துள்ளனர்.

தமிழ் நாட்டில் உள்ள நிலைபோன்றுதான் இன்று வட கிழக்கு முஸ்லிம் அரசியல் நிலையும். அண்ணாவின் தம்பிகள் அங்கு ஈரணியாகப் பிரிந்துள்ளதுபோல் ஆள்வோராகவம் அதனை எதிர்ப்போராகவும் அவர்களே உள்ளதுபோல் அஷ்ரபின் தம்பிகளும் இங்கு ஈரணியாகப் பிரிந்துள்ளனர்.

அஷ்ரப் உருவாக்கிய மு.கா. ஒரு தரப்பிலும் அக்கட்சியிலிருந்து வெளியே சென்றோர் மறுபக்கத்திலும் உள்ளனர். ஆட்சித்தரப்போ எதிர்த்தரப்போ வடகிழக்கில் இருக்கும் அனைத்து எம்.பிக்களும் அஷ்ரபின் மு.கா. என்ற கட்சியால் அறிமுகப்படுத்தப்பட்டவர்களே! மு.காவினால் முகவரி பெற்றவர்களைத் தவிர எவரும் தற்போது வட, கிழக்கு அரசியலில் இல்லை என்பது அஷ்ரப் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களுக்கு இமாலயச் சாதனைக்கு எடுத்துக் காட்டாகும்.

தற்போதைய 13வது பாராளுமன்றத்தில் வட, கிழக்கு முஸ்லிம் உறுப்பினர்கள் 13 பேர் உள்ளனர்

சகோதரர் றஊப் ஹகீம் சகோதரி பேரியல் அஷ்ரப்
" பஷீர் ஷேகுதாவூத் சகோதரர் சேகு இஸ்ஸதீன்
" பைசல் காசிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ” | ஹஸன் அலி | சகோதரர் | அதாவுல்லா |
| ” | நிஜாமுதீன் | ” | அன்வர் இஸ்மாயில் |
| ” | றிஷாத் பதியுதீன் | | |
| ” | நஜீப் ஏ. மஜீத் | | |
| ” | அமீர் அலி | சகோதரர் | மயோன் முஸ்தபா |

ஐந்து அணியாக தற்போது இவர்கள் இருந்தாலும் அனைவரும் அஷ்ரபின் மு.கா வினால் உருவாக்கப்பட்டவர்களே!

2001 ல் தெரிவான 12 வது பாராளுமன்றத்திலும் வட, கிழக்கில் 15 எம்பிக்கள் பதவி வகித்தனர். அனைவரும் மு.கா. உருவாக்கியவர்களே!

| | | | |
|---|---|---|---|
| சகோதரர் | A.L.M. அதாவுல்லா | சகோதரி | பேரியல் அஷ்ரப் |
| ” | H.M.M. ஹரீஸ் | சகோதரர் | சேகு இஸ்ஸதீன் |
| ” | அன்வர் இஸ்மாயில் | ” | ஹிஸ்புல்லாஹ் |
| ” | M.B.A. அஸீஸ் | | |
| ” | பஷீர் சேகு தாவூத் | ” | மயோன் முஸ்தபா |
| ” | M.S. தவ்பீக் | ” | எம்.ஏ.எம். மஃறூப் |
| ” | K.M. தவ்பீக் | | |
| ” | முகைதீன் அப்துல் காதர் | | |
| ” | நூர்தீன் மசூர் | | |
| ” | றிஷாத் பதியுதீன் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II - குடும்ப பாரம்பரியத்துக்குச் சாவுமணி

கிழக்கிலே அரசியலுக்கு வருவதாயின் குடும்பப் பாரம்பரியம் மிக முக்கிய தகைமையாகக் கொள்ளப்பட்டது. பிரபுத்துவ குடும்ப உறுப்பினர்கள் மாத்திரமே அரசியலுக்குரியவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டனர். இவ்வாறல்லாதவர்கள் தேர்தலுக்கு வந்தாலும் அவர்கள் வெற்றி பெற்ற வரலாறோ அல்லது அரசியலில் நிலைத்து நின்ற செய்திகளோ கிடையாது.

அம்பாறை மாவட்ட அரசியலைப் பொறுத்தவரை கேட் முதலியார் M.S. காரியப்பர் ஓர் அரசியல் முன்னோடி ஆவார். இவர் கல்முனையின் M.P. ஆக இருந்தார். இவரது மூத்த புதல்வியைத் திருமணம் செய்த M.M. முஸ்தபா, பொத்துவில், நிந்தவூர் தொகுதிகளின் பிரதிநிதியாக இருந்தார். காரியப்பரின் மற்றொரு மகளை முடித்த A.R. மன்சூர் பின்னர் கல்முனை எம்.பி யானார். காரியப்பரின் தங்கையின் மகனான M.C. அகமத் 1960ல் தனது மாமாவான காரியப்பரைத் தோற்கடித்து எம்.பியானார்.

1960 முதல் 1994 வரை எத்தேர்தலிலும் தோற்கடிக்கப்படாமல் எம்.பியாக விருந்த பி. ஏ. மஜீத் என அழைக்கப்படும் சம்மாந்துறை M.A. அப்துல் மஜீத் வன்னிமை குடும்பப் பின்னணியைக் கொண்டவர். இவரது சகோதரியின் கணவரே நிந்தவூர் எம்.பியாக விருந்த M.I.M. அப்துல் மஜீத் ஆவார். 1952ல் கல்முனை எம்.பியாகவிருந்த A.M. மேர்ஷா இவரது உறவினரே. இந்த சம்மாந்துறை மஜீத் அவர்களும் கல்முனை காரியப்பரும் உறவினர்கள்.

1947ல் மட்டக்களப்பு M.P. ஆகவிருந்த முதலியார் சின்னலெவ்வையின் மகன் லத்தீப் சின்னலெவ்வை 1965ல் மட்டக்களப்பில் U.N.P. சார்பில் M.P. ஆகத் தெரிவு செய்யப்பட்டார். இவரது மகன் றிஸ்வி சின்னலெவ்வை பின்னாளில் U.N.P. சார்பில் மட்டக்களப்பிலும் SLMC சார்பில் திகாமடுல்லவிலும் M.P. ஆனார். கிண்ணியாவில் பிரபலம் பெற்ற எஹூத்தார் ஹாஜியாரின் மகன் முஹம்மதலி 1952முதல் - 1970 வரை நீண்டகாலம் எம்.பியாகவும் அவருக்குப்பின் அவரது தம்பி M.E.H. மஹ்றூப் அவர்களும் எம்.பியாக விருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு குடும்ப பாரம்பரியத்தைக் கொண்டவர்களிடமிருந்து பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பறித்தெடுத்து சாதாரண குடும்பப் பின்னணி கொண்டவர்களின் கரங்களில் ஒப்படைத்த பெருமை அஷ்ரபையே சாரும். அஷ்ரபும் காரியப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவராயினும் அவரது மு.கா. பிரபுத்துவ குடும்பங்களை நீக்கி சாதாரண குடும்ப அங்கத்தவர்களையும் பாராளுமன்றத் தேர்தலுக்கு அறிமுகமாக்கிப் புரட்சி செய்தது.

அக்கரைப்பற்றில் சேகு இஸ்ஸதீன், அதாவுல்லா, மட்டக்களப்பில் ஹிஸ்புல்லா முதூரில் சின்னமவ்றூப், வவுனியாவில் சுந்தரமூர்த்தி அபூபக்கர் போன்றவர்களை அறிமுகப்படுத்தி அவர்களை அம் மக்களின் தலைவர்களாக்கினார். இன்று கிழக்கு மாகாண அரசியலை நோக்கினால் அங்கு பிரபுத்துவக் குடும்ப எண்ணக்கரு முற்றாக நீக்கப்பட்டுள்ளது. இந்தச் சமூகப் புரட்சியை மேற்கொண்டவர் அஷ்ரப் ஆவார். குடும்ப ஆதிக்கத்தை அரசியலில் அஷ்ரப் ஒழித்ததுபோல் பேரூர் வாதத்திற்கும் எதிராக அவர் செயற்பட்டார். கல்முனை நகரசபைத் தலைவராக அவர் மருதமுனையைச் சேர்ந்த சகோதரர் ஹமீத் அவர்களை நியமிப்பதாக வாக்குறுதியளித்த போது, மருதமுனையைச் சேர்ந்த பலர் அவ்வாறு நடக்குமா? அது முடியுமா என்பதுபோல் வினாவெழுப்பினர். ஆனால் அஷ்ரபோ அது நடக்கும் அது முடியும் என்பதை நிரூபித்தார்.

1989 தேர்தல் காலம். மிக வறிய இளைஞர் ஒருவரை அஷ்ரப் தேர்தலுக்கு நிறுத்தினார். எனக்கு மிகவும் அறிமுகமான அவ்வேட்பாளரின் வீடு சென்று பேசிக்கொண்டிருந்த போது எனது நெருங்கிய நண்பனான அவரது மைத்துனரிடம் தேர்தல் செலவுகளை எவ்வாறு சமாளிக்கப் போகிறீர்கள் என்றேன். எம்மிடம் காசி இல்லை. இந்த ஊரில் ஐம்பது கிளைகள் தேர்தலுக்காகத் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிளையும் ஆயிரம் ரூபா, தருவதாகக் கூறியுள்ளார்கள். அதனால் மொத்தம் 50 ஆயிரம் வரும். போஸ்டர்களை கட்சி அடித்துத் தருவதாகக் கூறியுள்ளது. எனவே அத்தொகைக்குள் சமாளிப்பதுதான் நோக்கம் எனக் கூறினார். இங்கு பணம் ஒரு தகைமையாகக் கொள்ளப்படாமை கவனிக்கத்தக்கதாகும்.

1989ல் இவ்வாறான ஒரு எளிமையான முறையிலேயே மு.கா. தேர்தலுக்கு முகம் கொடுத்தது. ஆதரவாளர்கள் போடும் மேடையில் வந்து பேசிவிட்டு அஷ்ரப் சென்றார். கட்சிக்காக பல்வேறு கிளைகள் உருவாக்கப்பட்டு அக்கிளைகளில் உள்ளவர்களே பணம் வசூலித்து மு.கா. வின் தேர்தலை நடத்தினர். இதனால் வேட்பாளர் செலவழிப்பது என்ற ஒரு நியதி நீக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III - கூட்டு ஒப்பந்தங்கள்

அஷ்ரப் சிறுபான்மை முஸ்லிம்களின் நலன்கருதி மு.கா. வை உருவாக்கிய போது அது இனவாதக் கட்சி என்று முத்திரை குத்த பலர் முயன்றனர். முஸ்லிம்களுக்கு மு.கா. எனில் பௌத்தர்கள் பௌத்த காங்கிரஸ், கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ காங்கிரஸ் என்று உருவாக்க முன்வந்தால் என்ன செய்வது? என்று அன்றைய அமைச்சர் ஒருவர் கேட்டார். ஒரு சிறுபான்மை சமூகத்தின் உரிமைக்காகக் குரல் எழுப்புவதே இனவாதமாகக் கொள்ளப்படும் நிலையில் அவ்வாறு முத்திரை குத்தாமல் தவிர்க்கவும் சிங்களத் தலைமைகள் முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகள் பற்றிய தெளிவுபெறவும் தேர்தலில் ஓரளவு வெற்றி வாய்ப்பைப் பெறுவதற்கும் அஷ்ரப் தான் எதிர் நோக்கிய ஒவ்வொரு தேர்தல்களிலும் தனது கட்சியை தனித்துவம் கெடாதவகையில் மற்றொரு சிங்களக் கட்சியுடன் இணைத்து தேர்தலுக்கு வந்த வரலாறேயுள்ளது.

1988 ஜனாதிபதித் தேர்தலில் அஷ்ரப் பிரேமதாசாவுக்குச் செய்த உதவிக்காக 1989 பாராளுமன்றத் தேர்தலில் பிரேமதாசா சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்தார். அதாவது திகாமடுல்ல மாவட்டத்தில் சிரேஷ்ட UNP எம்பிக்களான எம். ஏ. மஜீத், A.R மன்சூர் போன்றவர்களைத் தேர்தலில் போட்டியிடாமல் தவிர்க்குமாறு அஷ்ரப் பிரேமதாசாவைக் கேட்டுக் கொண்டார். இதனால் இவர்கள் இருவரும் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகினர். UNP சார்பில் பிரபலமற்ற வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர்.

இது எழுத்திலல்லாத ஒரு புரிந்துணர்வு ஆகும். ஆனால் இதே தேர்தலில் மு.காவும் திரு ருக்மன் சேனநாயகாவின் ELJP கட்சியும் தேர்தல் ஒப்பந்த மொன்றைச் செய்தது. வட, கிழக்கில் மு.கா. போட்டியிட வட கிழக்குக்கு வெளியே சில மாவட்டங்களில் ELJP யின் சின்னத்தில் மு.கா. வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இத்தேர்தலில் ELJP கட்சி SLMC யைவிடக் குறைந்த வாக்குகளைப் பெற்றபோதும், அது ஓர் ஆசனத்தைக் கூடப் பெறாத போதும் வட, கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கு இது ஓர் ஆறுதல் அளிக்கும் செய்தியாக அமைந்தது. அதாவது கிழக்கின் இனவாதக்கட்சியுடன் தெற்கு முஸ்லிம்கள் இணைந்து விட்டார்கள் என்று பெரும்பான்மை மக்கள் சந்தேகமுறாமல் தடுக்க இது வழிவகுத்தது.

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் அஷ்ரப் செய்த அதி புத்தியான வேலை ELJP யுடன் தேர்தல் கூட்டுச் சேர்ந்தது தான் என்று என்னிடத்தில் அவ்வேளை கண்டியை சேர்ந்த ஒரு முஸ்லிம் வர்த்தகப் பிரமுகர் கூறினார். ELJP கூட்டினால் வாக்குப் பலம் கிடைக்கவில்லை எனினும் சிங்கள மக்களுக்கு SLMC பற்றி தப்பபிப்பிராயம் நீங்கவழிசெய்யப்பட்டது.

1994 பொதுத்தேர்தலுக்கு அஷ்ரப், சந்திரிகாவுடன் ஒப்பந்தம் செய்தார். வட, கிழக்கில் மு.கா. வின் மரச் சின்னத்தில் பொதுசன முன்னணி வேட்பாளர்களும் வட, கிழக்குக்கு வெளியே பொது முன்னணியின் கதிரைச் சின்னத்தில் மு.கா. வேட்பாளர்களும் தேர்தலில் குதித்தனர். வட, கிழக்கில் 7 ஆசனங்களை மு.கா. வேட்பாளர்கள் பெற்ற போதும் அதற்கு வெளியே எவ்வித ஆசனங்களையும் அவர்களால் பெறமுடியவில்லை. எனினும் அதற்குப் பிரதியுபகாரமாக இரு தேசியப் பட்டியல் பிரதிநிதித்துவங்கள் மு.கா வுக்கு வழங்கப்பட்டன.

1970 பொதுத் தேர்தலில் முஸ்லிம் பிரதேசங்களான மூதூரிலும் கல்முனையிலும் இரு ஆசனங்களைப் பெற்றிருந்த S.L.F.P. 1977தேர்தலில் எவ்வித ஆசனமுமின்றி வட, கிழக்கில் முற்றாக செல்வாக்கிழந்திருந்தது. 1989 தேர்தலில் அக்கட்சி சார்பில் போட்டியிட்டவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக விருந்த போதும் ஆதரவு இல்லாத நிலை 1993ல் நடந்த உள்ளுராட்சித் தேர்தல்களிலும் SLFP முஸ்லிம் பிரதேசங்களில் ஒரு பிரதேச சபையைக் கூடக் கைப்பற்றவில்லை. ஆனால் கிழக்கைப் பொறுத்தவரை U.N.P. பெரு வளர்ச்சி பெற்றிருந்தது. 1977ல் இருந்த ஐந்து முஸ்லிம் எம்.பிக்களும் U.N.P. யினரே. 1989ல் முஸ்லிம்கள் பலர் அக்கட்சியில் நாடாளுமன்றத்தில் இருந்தனர். முஸ்லிம் பிரதேச சபைகளைக் கூட அவர்கள் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையை 1994ல் நடைபெறவிருந்த பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களை எதிர்நோக்கவிருந்த சந்திரிகா கவனத்திலெடுத்தார். கிழக்கில் தனது கட்சிக்கு போதிய ஆதரவு இல்லாத நிலையை நன்கு அறிந்தார். இப் பலவீன நிலையில் முக்கியமாக ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்குவது ஆபத்தானது என்பதில் உறுதியான அவர் மு.கா. தலைவர் அஷ்ரபுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்தார். அஷ்ரப்-சந்திரிகா ஒப்பந்தம் மூலம் அதிக பயன் பெற்றது சந்திரிகா தான். அவ்வொப்பந்தம் இல்லையென்றால் கிழக்கில் அவருக்கு ஆதரவு இல்லை என்ற நிலை உருவாகியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ம் ஆண்டுத் தேர்தலிலும் அஷ்ரப் பொது முன்னணியுடன் ஒப்பந்தம் செய்தார். இதில் சில அதிர்ச்சி முடிவுக்கு வந்தார். மு.கா வை நுஆ வாக மாற்றி மு.கா வின் மரச்சின்னத்தைக் கொண்டு நுஆவைத் தேர்தலுக்கு இறக்கினார். நுஆவின் செயலாளரான சகோதரர் றஊப் ஹக்கீம் கண்டியில் மரச்சின்னத்தில் போட்டியிட தலைவரான அஷ்ரப் திகாமடுல்லயில் பொது முன்னணியின் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டார். இவ்வாறு அவர் முடிவுக்கு வந்ததற்கு பல காரணங்கள் இருந்தன.

1. தனது கட்சிக்கு அதிக ஆசனங்களைப் பெறவைப்பது
2. எதிர்க்கட்சியின் வெற்றியாளர்களைக் குறைப்பது.
3. ஐ.தே.க வுடன் முஸ்லிம்கள் சிலர் செய்த ஒப்பந்தத்தை அர்த்தமற்ற தாக்குவது.

திகாமடுல்ல மாவட்டத்தில் 1989, 1994 தேர்தல்களில் மு.கா தனித்துப் போட்டியிட்டதால் அது ஐ.தே.க வுக்கு வாய்ப்பாக அமைந்தது. சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் அக்கட்சி மூன்று பிரதிநிதிகளைப் பெற மு.கா. 89ல் ஒரு பிரதி நிதித்துவத்தையும் 94ல் இரு பிரதிநித்துவங்களையும் பெற்றது.

| தேர்தல் முடிவு - 1989 | | |
|---|---|---|
| கட்சி | வாக்குகள் | பிரதிநிதித்துவம் |
| UNP | 62600 | 3 |
| SLMC | 61325 | 1 |

| தேர்தல் முடிவு - 1994 | | |
|---|---|---|
| கட்சி | வாக்குகள் | பிரதிநிதித்துவம் |
| UNP | 78762 | 03 |
| SLMC | 75092 | 02 |

எனவே SLMC சிங்கள வாக்குகள் பெறக்கூடிய ஒரு கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதால் திகாமடுல்லவைப் பொறுத்தவரை அது மிகவும் வாய்ப்பாக அமையும். SLMC க்கு எதிரான கட்சி படுதோல்வி அடையும். இதனை மனதிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே அஷ்ரப் தனது கட்சியின் சின்னத்தைத் தவிர்த்து P.A யின் கதிரைச் சின்னத்தில் களமிறங்கினார். அத்தேர்தல் காலத்தில் அவர் காலமானபோதும் அவரது இடத்துக்கு அவர் மனைவி பேரியல் பதில் வேட்பாளராக்கப்பட்டார். இத்தேர்தல் முடிவின்படி SLMC (NUA) ஐச் சேர்ந்த நால்வர் வெற்றி பெற்றனர்.

**தேர்தல் முடிவு**
**2000ம் ஆண்டு**
**திகாமடுல்ல மாவட்டம்**

| கட்சி | வாக்குகள் | ஆசனம் | வெற்றிபெற்றோர் |
|---|---|---|---|
| PA | 136423 | 4 | பேரியல் அஷ்ரப்<br>ALM அதாவுல்லா<br>ULM முகைதீன்<br>W திசாநாயக<br>(இவரும் NUA வேட்பாளர்) |
| UNP | 101628 | 2 | P. தயாரத்ன<br>C. கலப்பத்தி |
| IND II | 19812 | 1 | M. ஞானசேகரம் |

இதுவரை காலமும் இரண்டுக்குமேல் ஆசனங்கள் பெறாத SLMC க்கு இதனால் 4 ஆசனங்கள் கிடைத்தன.

கடந்த 2004 தேர்தலில் சகோதரர் றஊப் ஹக்கீம் இதே விபூகத்தை அமைத்து ஐ.தே.க வுடன் கூட்டுச் சேர்த்து போட்டியிட்டிருந்தால் மு.கா. வைச் சேர்ந்த மூவரும் யூ.என்.பி ஒருவரும் PA சார்பில் இருவரும் தமிழரசுக் கட்சியில் ஒருவரும் வெற்றி பெற்றிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர் அவ்வாறு வியூகம் அமைக்க முடியாதவாறு தேர்தல்கால களநிலவரம் இருந்தது. UNP யுடன் சேராமல் SLMC தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலித்தது. SLMC யில் இருந்து கொண்டு இரகசியமாக PA யுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட ஒப்பந்தம் செய்தவர்களே வருமுன் காக்கும் புத்திமான்களாக SLMC, UNP யுடன் இணையக்கூடாது என்ற பிரச்சாரத்தை ஓங்கி ஒலிக்கச் செய்தனர். SLMC தனித்துக்கேட்பது உறுதி செய்யப்பட்டபின் அவர்கள் PA யுடன் சேர்ந்து போட்டியிட்டனர். இவ்வேளை எமது கிழக்கு மாகாண ஜம்இய்யதுல் உலமாவும் மு.கா. தலைவர் அவர்களைச் சந்தித்து தனித்துக் கேட்பது தொடர்பாக வேண்டுகோள் விடுத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

1989, 1994 தேர்தல்களில் UNP க்கு முஸ்லிம்கள் நியாயமான வாக்குகளை அளித்தபோதும் ஒரு முஸ்லிம் UNP சார்பில் வெற்றிபெற முடியவில்லை. இது SLMC யின் தேர்தல் பிரசாரத்துக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்தது. முஸ்லிம் ஒருவர் MP யாக வருவதாயின் SLMC க்கு வாக்களிக்க வேண்டும் என்ற பிரச்சாரம் SLMC யின் வாக்கு வங்கிக்கு பெரிதும் உதவியது. இதனை முறியடிக்க சகோதரர் மயோன் முஸ்தபா திட்டம் தீட்டினார். எதிர்வரும் தேர்தலில் (2000) திகாமடுல்லயில் இரண்டு சிங்கள வேட்பாளர்கள் மாத்திரமே தேர்தலில் குதிக்க வேண்டும். ஏனையவர்கள் முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்று UNP தலைமையுடன் ஓர் ஒப்பந்தம் செய்தார். எனவே SLMC தனித்துக் கேட்கும் போது UNP சார்பில் ஒரு முஸ்லிம் வெற்றிபெற வாய்ப்பு ஏற்பட்டது.

இவ்வாறு UNP சார்பில் ஒரு முஸ்லிம் தெரிவு செய்யப்படுவது SLMC யின் எதிர்கால வாக்கு வங்கிக்கு ஆபத்தாக அமையும் என்பதை உணர்ந்தே அஷ்ரப் PA யுடன் இணைந்து கேட்கும் முடிவுக்கு வந்தார். இத் தேர்தலில் UNP சார்பில் இரு சிங்களவர்களும் ஒரு தமிழரும் ஏழு முஸ்லிம்களும் போட்டியிட்டனர். தேர்தல் முடிவின் படி நான்குபேர் PA டிக்கட்டில் SLMC வெற்றிபெற அத்தேர்தலில் UNP சார்பில் போட்டியிட்ட சகோதரர் மயோன் முஸ்தபா, ஷேகு இஸ்ஸதீன் போன்றோர் தோல்வியைத் தழுவினர். வழமைபோன்று SLMC தனித்துப் போட்டியிட்டிருந்தால் UNP சார்பில் மயோன் முஸ்தபா வெற்றி பெற்றிருப்பார். ஏனெனில் அவர் அத்தேர்தலில் 35679 வாக்குகள் பெற்று மூன்றாவது நிலைக்கு உயர்ந்திருந்தார். இதன் மூலம் அஷ்ரப் தனது நோக்கில் அதாவது தனது எதிர்க்கட்சியின் ஆசனங்களைக் குறைப்பது, தனது கட்சிக்கு அங்கத்தவர்களை அதிகரிப்பது, UNP சார்பில் முஸ்லிம் ஒருவர் வெற்றி பெறாமல் தடுப்பது ஆகியவற்றில் வெற்றிபெற்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL

இவ்வாறு அஷ்ரப் தான் எதிர்நோக்கிய மூன்று தேர்தல்களிலும் வெவ்வேறான வியூகங்கள், கூட்டு ஒப்பந்தங்களைச் செய்து அரசியல் வரலாற்றில் தனக்கென தனியான இடத்தைப் பிடித்தார்.

## IV - முஸ்லிம் அம்சம் உறுதி செய்யப்படல்

**பிரேமதாச ஆட்சியிலிருந்த காலமது**

இனப்பிரச்சினைக்கான தீர்வு விரைவில் எட்டப்படப் போகிறது என ஓர் எதிர்பார்ப்பு! சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளியில் நடைபெற்ற ஒரு கூட்டத் தீர்மானத்தின்படி அம்பாறை மாவட்ட பள்ளிவாசல் பிரதிநிதிகள், உலமாக்கள் கொண்ட ஒரு தூதுக் கோஷ்டி முஸ்லிம் மாகாண சபை தொடர்பாகப் பேசுவதற்கு கொழும்பு செல்வதெனத் தீர்மானம், எமது தூது கோஷ்டி கொழும்பு சென்று முதலில் அன்றைய வர்த்தக, வாணிப அமைச்சர் AR மன்சூர் அவர்களைச் சந்தித்து முஸ்லிம் மாகாணம் தொடர்பாகப் பேசியதுடன் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கும் நேரம் எடுத்துத்தருமாறு வேண்டினோம்.

அமைச்சர் மன்சூர் தன்னைப் பொறுத்தவரை வடக்கு வேறு கிழக்குவேறு ஆக வேண்டும். அதுவே தனது நிலைப்பாடு என்றவர் முஸ்லிம் மாகாணம் கோரும் அஷ்ரபின் தீர்மானத்தைக் கண்டித்துப் பேச ஆரம்பித்தார். அப்போது இடைமறித்த சேக் இப்றாஹீம் ஹஸரத் Mr. மன்சூர் நீங்கள் கூறுவதுபோல் வடக்கு வேறு கிழக்கு வேறு எனப் பிரிவதனை நாமும் ஏற்கிறோம். எனவே அவ்வாறு வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் சர்வஜனவாக்கெடுப்பு நடைபெற்று நாங்கள் பிரிப்பதற்கு ஆதரவாக வாக்களித்தபின் கிழக்கைப் பிரிப்பதற்கு அதிக வாக்குகள் கிடைத்திருக்கின்றன என்ற அறிவிப்பு வெளியாகும் அதேவேளை கிழக்கோடு பொலனறுவை போன்ற சிங்கள மாவட்டங்கள் இணைக்கப்படுகிறது என "கெசட்" பண்ணப்பட்டு மற்றொரு அறிவிப்பு வெளியாகி கிழக்கின் தற்போதைய சனத்தொகை விகிதாசாரம் மாற்றமடையாது என நீங்கள் கூறுகிறீர்களா என அவரிடம் கேட்டபோது அதை என்னால் கூற முடியாது தான். அவ்வாறு நடந்தாலும் நடக்கும் என்றார். ஏனெனில் அக்காலத்தில் பொலநறுவை மாவட்டத்துடன் இருந்த தெஹியத்தகண்டிய பிரதேசமும் மட்டக்களப்புடன் இருந்த பதியதளாவ, மகாஓயா பிரதேசங்களும் அம்பாரையுடன் இணைக்கப்பட்டமை வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அமைச்சரவையிலுள்ள இ.தொ.கா. தலைவர் திருவாளர் தொண்டமான் இன்றைய ஆங்கில வாரப்பத்திரிகையில் வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு விட்டது. இனி அதனைப் பிரிப்பதற்கு யாருக்கும் இடமளிக்கமாட்டோம் எனக் கூறியிருக்கிறாரே என நாம் மன்சூரிடம் கேட்டபோது தான் பெரிதும் நேசிக்கும் தொண்டமான் இவ்வாறு கூறியிருப்பது கவலையளிக்கிறது என்றார். சந்திரிகா பண்டாரநாயக தமது கணவர் விஜயகுமாரதுங்கவுடன் இந்தியா சென்றவேளை தமிழ் நாட்டுப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்றுள்ளதையும் அவரிடம் அன்று சுட்டிக்காட்டினோம். எனவே இணைந்த வட கிழக்குக்குள் முஸ்லிம் மாகாணம் பெறுவதே புத்தியானது என்ற எமது நிலைப்பாட்டை மன்சூர் மறுக்க முடியாத நிலையிருந்தார்.

பின்னர் அன்றைய உயர்கல்வி அமைச்சர் A.C.S ஹமீத் அவர்களைச் சந்திக்கச் சென்றோம்.

உத்தேச முஸ்லிம் மாகாணம் தொடர்பான ஹமீதின் வினாக்களுக்கு விடையளிப்பது மிகச் சிரமமாகவிருந்தது. நிறைய அவர் வினாக்களை எழுப்பினார். அப்போது எம்முடன் வந்த ஒரு நம்பிக்கையாளர் அப்படியானால் எமது அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களை மாத்திரமாவது முஸ்லிம் மாகாணம் ஆக ஆக்குங்கள் எனக் கூறியதும் ஹமீத் சிரித்தார். இவ்வளவு விரைவாக உங்கள் கோரிக்கையிலிருந்து பின் வாங்குகின்றீர்களே! நாம் விடுதலைப் புலிகளுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்களிடம் உங்களுக்கு வடக்கில் தனி ஈழம் தருகிறோம்; கிழக்கை விட்டு விடுங்கள் எனக் கோரியபோது எமக்கு வடக்கில் சுயாட்சிவேண்டாம். கிழக்கையும் சேர்த்து மாகாண ஆட்சியைத் தாருங்கள் எனக் கேட்கிறார்கள். தமிழ் மக்கள் எதிலும் ஒற்றுமைப்பட்ட வரலாறே இல்லை. ஆனால் அவர்கள் ஒற்றுமைப்பட்டது வட,கிழக்கு இணைப்பு என்ற ஒன்றில்தான். எனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் வரப்போகும் சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் இந்த ஒன்றுபட்ட கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலையே ஏற்படும். நீங்கள் பயப்படவேண்டாம். நீங்கள் கேட்பது போல் தொடர்ந்து கேளுங்கள். ஆனால் வட, கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை இலங்கை / இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட நேரம் இருந்தநிலை இன்றில்லை. அஷ்ரப் ஏற்படுத்தியுள்ள மாற்றம் அதுதான். முஸ்லிம் காங்கிரஸின் வரவால் "Muslim Factor" என்ற ஒன்றை அவர் நிறுவியுள்ளார். எனவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எவரும் இந்த அம்சத்தைப் புறக்கணித்து முடிவுக்கு வரமுடியாது. உங்களின் உங்கள் கட்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதம் இன்றி எந்த இறுதி முடிவும் இனி எட்டப்படமாட்டாது எட்டப்படவும் முடியாது என அவர் கூறினார்.

இலங்கை / இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட போது முஸ்லிம்கள் பற்றி இலங்கை அரசோ இந்திய அரசோ அலட்டிக் கொள்ளவில்லை. J.R. அரசில் இருந்த ஐந்து கிழக்கு முஸ்லிம் எம்.பிக்களும் இதுபற்றி அவரிடம் பேசியபோது அவர்கள் ஐவரையும் இந்தியாவுக்கு அனுப்பி இந்திய அரசுடன் பேச வைப்பேன் என J.R. கூறினாரே தவிர அதனைச் செயற்படுத்தவில்லை. எம்.பிக்கள் இந்தியா போகவுமில்லை. பேசவுமில்லை. ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. வட,கிழக்கு ஒரு வருடத்துக்கு என இணைக்கப்பட்டது. பதினெட்டு வருடங்கள் கழிந்து விட்டன. ஐந்து ஜனாதிபதிகள் ஆட்சியில் அமர்ந்து விட்டனர். ஜே.வி.பி ஆட்சியின் பங்காளரான போதும் எவ்வித மாற்றமுமில்லாமல் இணைப்பு தொடர்கிறது.

இந்த இணைப்பை பிரிக்கவேண்டும் என்று சில அரசியல் வாதிகள் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் பேசுவது பேசவேண்டிய நாடாளுமன்றத்திலோ வெளிநாட்டு நிறுவனங்களிடமோ அல்ல. கிராமங்களில் நடக்கும் கூட்டங்களில் இவ்வாறு பேசி தங்கள் இருப்பைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

## தோல்வியும் வெற்றியும்

அரசியலில் அஷ்ரப் தோல்வியுற்ற ஒரு விடயம் பிரதிநிதித்துவத்தை கிராமங்களிடையே பகிர்ந்தளிக்க முடியாமல் போனதே! இவ்வாறு அவர் செய்வதற்கு நாட்டின் தேர்தல் சட்டம் அவருக்கு வாய்ப்பாக அமையவில்லை.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை இந்நாட்டுக்கு அறிமுகம் செய்தவர் J.R. நானும் சகோதரர் அஷ்ரபும் ஹுசைன் நீதவானுடன் பேசிக் கொண்டிருந்தபோது அவர் ஒரு முக்கிய விடயத்தை ஞாபகமூட்டினார். தொகுதி வாரித்தேர்தல் முறையால் ஏற்படும் குழப்பங்கள் பற்றியதே அது. மட்டக்களப்புத் தேர்தல் தொகுதியில் காத்தான்குடி, ஏறாவூர் ஆகிய இரு ஊர்களும் தேர்தல் முடிந்தவுடன் அவர்களின் ஒற்றுமைக்கு குந்தகமான பல்வேறு நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சகோதர வாஞ்சைக்கு விரோதமான இச் செயற்பாடுகளை தற்போது அறிமுகமாகியுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் மூலம் நீக்கலாம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை மூன்று பெரிய முஸ்லிம் பிரதேசங்கள் உள்ளன. காத்தாங்குடி, ஏறாவூர், (வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை ஆகிய கிராமங்களைக் கொண்ட) கோறளைப்பற்று ஆகிய அம்மூன்று பிரதேச மக்களும் ஒற்றுமைப்பட்டு ஒரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். புதிய தேர்தல் முறையால் ஒவ்வொரு ஊரும் பிரிந்து நின்றால் எவருக்கும் வெற்றிகிட்டாது. எனவே மூன்று கிராமங்களும் சேர்ந்து வாக்குப்போட்டு தெரிவாகும் பிரதிநிதித்துவத்தை ஒரு கிராமத்துக்கு மட்டும் தாரை வார்க்கக் கூடாது. மூன்று ஊர்களும் அப்பிரதி நிதித்துவத்தை அனுபவிக்க வேண்டும் என்றார்.

ஹுசைன் நீதவானின் இக்கருத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்த அஷ்ரப் முயன்றார். ஒவ்வொரு ஊருக்கும் இரண்டு வருடங்கள் பிரதிநிதித்துவம் கொடுப்பதே அம்முறை. ஆனால் நாட்டின் தேர்தல் சட்டம் அதற்கு அவருக்கு வாய்ப்பாக அமையவில்லை. அவ்வாறு பிரதிநிதித்துவம் கொடுப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய உள்ளன என்பதும் மறுப்பதற்கில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை மூன்று பிரதேசங்களும் ஒற்றுமையாக நிற்கும் போதே அவர்களின் கட்சிக்கு வெற்றி கிடைக்கும். ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறலாம்.

இறுதியாக நடந்த தேர்தலை நோக்குவோம்

**மட்டக்களப்பு 2004 தேர்தல்**
**முஸ்லிம் வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள்**

| | | |
|---|---|---|
| MLAM ஹிஸ்புல்லா | PA | 23813 |
| அமீர் அலி சிஹாப்தீன் | SLMC | 21232 |
| பஷீர் சேகு தாவூத் | SLMC | 20367 |
| A M றஊப் | PA | 10024 |
| ALM மர்சூக் | SLMC | 5070 |

2004 தேர்தலைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் வேட்பாளர்களில் விருப்பு வாக்குகளில் அதிகம் பெற்றவர் சகோதரர் ஹிஸ்புல்லா! இவர் P.A யில் போட்டியிட்டார். ஆனால் அவர் தெரிவுசெய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரை விட 2581 வாக்குகள் குறைவாகப் பெற்ற மு.கா. வேட்பாளர் சகோ. அமீரலி தெரிவுசெய்யப்பட்டார். இவர் கோறளைப் பற்றைச் சேர்ந்தவர். அவரைவிட 865 வாக்குகள் குறைவாகப் பெற்றதால் ஏறாவூரைச் சேர்ந்த பஷீர் ஷேகு தாவூத் தோல்வியடைந்தார். இதில் ஏறாவூர் மக்கள் மு.கா. வுக்கு வாக்களிக்கவில்லை என்றால் அமீர் அலி தெரிவு செய்யப்பட்டிருக்க மாட்டார். இங்கு வெற்றிபெற்றது தனி நபரல்ல. ஒரு கட்சியாகும். பல ஊர்களும் சேர்ந்து ஒற்றுமையாக வாக்களிக்கவில்லை என்றால் அக்கட்சி வெற்றி பெற்றிருக்காது. பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து பெற்ற பிரதிநிதித்துவத்தை ஓர் ஊர் மாத்திரம் அனுபவிப்பது சரியா?

இப்பிரச்சினை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மட்டும் உரியதல்ல. திருமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், திகாமடுல்ல மாவட்டத்தின் மூன்று தொகுதிகளுக்கும் இப் பிரச்சினை உள்ளது. எனவே இதனைச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு கட்சித் தலைமைத்துவத்துக்கு உண்டு. இவ்விடயத்தில் அஷ்ரபால் வெற்றிபெற முடியவில்லை.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்ட போது 12 1/2% வெட்டுப் புள்ளி பற்றி தேர்தல் சட்டம் கூறியது. இது ஹுஸைன் நீதவானைப் பொறுத்தவரை ஆத்திரம் கொள்ளச் செய்தது. முஸ்லிம்கள் இந்நாட்டில் எட்டு வீதமாக இருக்கும்போது 12 1/2 % வீதம் என்று வெட்டுப் புள்ளியை ஏற்படுத்தியதன் மூலம் முஸ்லிம்களை அரசியலில் இருந்து ஒதுக்க J.R. திட்டமிட்டுள்ளார் என J.R. முன்னிலையில் BMICH இல் நடந்த கூட்டமொன்றில் தான் கூறியதாக ஹுசைன் நீதவான் கூறினார்.

அரசியலில் சாதிக்க சந்தர்ப்பம் கிடைத்தபோது அஷ்ரப் இந்த அநியாயத்தையே நீக்கிக் காட்டினார். பிரேமதாசவிடம் அவர் விடுத்த வேண்டுகோளை அடுத்து இது உடனடியாக நடந்தது. இந்த வெட்டுப் புள்ளிக் குறைவினால் மு.கா. பெரிதும் நன்மையடையவில்லை. எனினும் இது அஷ்ரபின் சாதனையாக அரசியல் அரங்கில் மதிப்பிடப்படுகிறது. அஷ்ரபின் இந்த வெட்டுப்புள்ளிச் சாதனையால் அதிகம் நன்மைபெற்றவர்கள் J.V.P. யினரே!

முதன் முதலாக 1989ல் கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முகம்கொடுத்த அஷ்ரப் அத்தேர்தலில் தனது கட்சியை மூன்றாமிடத்துக்கு உயர்த்தினார். அகில இலங்கை ரீதியில் அத்தேர்தலில் முதலாவது இரண்டாவது இடங்களை முறையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNP, SLFP பெற்றுக் கொள்ள மூன்றாமிடம் SLMC வசமானது. தமிழர் விடுதலைக் கூட்டணி நான்காவது இடத்தையே பெற்றது.

இதேபோன்றுதான் 1994 தேர்தலிலும் மூன்றாமிடத்தை SLMC யே பெற்றுக் கொண்டது. அதாவது தேசிய ரீதியில் மு.கா. மூன்றாவது சக்தியாகப் பரிணமித்தது.

**பாராளுமன்றத் தேர்தல் 1989**
**தேசிய ரீதியில் தேர்தல் முடிவுகள்**

| | | |
|---|---|---|
| UNP | 2338005 | 50.71% |
| SLFP | 1785369 | 31.90% |
| SLMC | 202016 | 3.61% |
| TULF | 188594 | 3.37% |
| USA | 160271 | 2.86% |

**பாராளுமன்றத் தேர்தல் 1994**
**தேசிய ரீதியில் தேர்தல் முடிவுகள்**

| | | |
|---|---|---|
| PA | 3887823 | 48.94% |
| UNP | 3498370 | 44.04% |
| SLMC | 143307 | 1.80% |
| TULF | 132461 | 1.67% |
| JVP | 90078 | 1.13% |

மேலும் 1989 தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் அதிக வாக்குகளைப்பெற்று முதல் நிலைக்கு உயர்ந்த கட்சி SLMC ஆகும். கிழக்கின் மூன்று மாவட்டங்களான மட்டக்களப்பு திகாமடுல்ல, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கட்சிகள் பெற்ற வாக்குகளின் மொத்தத்தைக் கூட்டினால் இந்த உண்மை வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் 1989

மாவட்டம்

| | SLMC | TULF | UNP | SLFP | சுயேட்சை |
|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 36867 | 55131 | 11317 | 4130 | 46419 |
| திகாமடுல்ல | 61325 | 43424 | 62600 | 45400 | - |
| திருகோணமலை | 17884 | 12755 | 22450 | 22966 | 25239 |
| | 116076 | 111310 | 96367 | 72469 | 71658 |

1989 தேர்தலின் பின்னர் ஒருமுறை அஷ்ரபைச் சந்தித்தபோது கிழக்கு மாகாணத்தின் மொத்தத் தேர்தல் முடிவின்படி SLMC தான் முன்னிலை வகிக்கிறது தெரியுமா? என்று கேட்டேன். ஆமென்ற அவர் கிழக்கில் தனித்து மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடந்தால் கூட எம்மால் வெற்றிபெற முடியும் என்றதுடன் அவ்வாறு தான் கோரப் போவதில்லை என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஹிமஹுல்லாஹ்

உலக முஸ்லிம்களின் புனிதத்தலங்களில் இரண்டாவது தலமான மதீனாவிலுள்ள மஸ்ஜிதுந் நபவியின் இமாம் ஷேக் ஸலாஹ் முஹம்மத் அல் புதைர் அண்மையில் இலங்கை விஜயம் செய்த போது அம்பாறை மாவட்டத்துக்கும் அன்னார் விஜயம் செய்தார். திகதி 03.10.2004.

அவ்வேளை துறைமுக அபிவிருத்தி, முஸ்லிம் சமய கலாசார அமைச்சராக விருந்த சகோதரர் றஊப் ஹக்கீம் இமாமின் அம்பாறை விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார் இமாம் அவர்களின் அம்பாறை விஜய நிகழ்ச்சி நிரல் பொறுப்பை மாகாண ஜம்இய்யதுல் உலமாவிடம் ஒப்படைத்திருந்தார். அம்பாறை விமான நிலையத்திலிருந்து துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் இமாம் அவர்களை ஏற்றிக்கொண்டு கல்முனை முதல் அக்கரைப்பற்றுவரை சென்று பல்வேறு சமயஸ்தாபனங்கள், பிரமுகர்களைச் சந்திக்கச் செய்தோம்.

ஒலுவில் துறைமுக அதிகார சபைக்குரிய பங்களாவில் பகல் உணவு, அங்கு செல்லும்போது மௌலவி I.L.M. ஹாஷிம் அவர்களும் நானும் சகோதரர் அஷ்ரப் அவர்கள் பற்றியும் இப்பிரதேசத்துக்கு அவர் செய்த சேவைகளையும் ஒவ்வொன்றாகக் கூறிக்கொண்டு சென்றோம். நாம் சகோதரர் அஷ்ரப் பெயரை உச்சரித்ததுதான் தாமதம்! இமாம் அவர்கள் ரஹிமஹுல்லா (அல்லாஹ் அவர் மீது அருள் பாலிப்பானாக) எனப் பிரார்த்தித்தார்கள். இவ்வாறு தொடர்ந்து இமாம் அவர்கள் அவ்வார்த்தையைக் கூறிக் கொண்டிருந்தது எமக்கு பெரு மகிழ்வை ஏற்படுத்தியது.

20671

இமாம் அவர்கள் அவரைப்பற்றி நன்கு கேள்விப்பட்டிருந்தார் என்பதும் அவரது பேச்சின் மூலம் தெளிவானது.

எமது அன்புக்குப் பாத்திரமான அந்த நல்ல நண்பனை இழந்து விட்டோம். அவர் தனது பேச்சுக்களில் அடிக்கடி அல்லாஹ்வின் கருணை கடாட்சம் பற்றியே கூறுவார். அல்லாஹ் ஒரு மன்னிப்பவனும் கிருபையாளனும் என்பதை பலர் மறந்துவிடுகின்றனர். அவனை அவர்கள் கடும் வேதனை செய்பவன் என்றே விளங்கிவைத்துள்ளனர் என ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

மகா மன்னிப்பவனும் கிருபையாளனுமானவனே! எமது நண்பனின் குற்றம் குறைகளை மன்னித்து அவரை சுவனப்பூங்காவில் குடியமரச் செய்வாயாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறபுப் பத விளக்கம்

| | | |
|---|---|---|
| அல்குர்ஆன் | - | முஸ்லிம்களின் வேதநூல் |
| அல் ஹதீஸ் | - | நபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகள் |
| அகீதா | - | கொள்கை, கோட்பாடு |
| ஆலிம் .·. மௌலவி | - | இஸ்லாமிய சமய அறிஞர் |
| கபூல் | - | ஏற்றுக் கொள்ளுதல் |
| ஹஸரத் | - | பெரியவர்களைக் கண்ணியமாக அழைக்கும் வார்த்தை |
| ஹஜ்ஜ் | - | புனித மக்கா சென்று நிறைவேற்றும் கடமை |
| ஹாஜி | - | ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுபவர் |
| ஹிமாயத்துல் இஸ்லாம் | - | இஸ்லாமிய பாதுகாப்பு |
| கிறாஅத் | - | குர்ஆனை ஓதுதல் |
| குத்பா | - | பிரசங்கம் |
| ஸகாத் | - | ஏழைவரி |
| சலவாத் | - | நபி (ஸல்) அவர்கள் மீது கூறுவது பிரார்த்தனை. |
| ஜம்இய்யதுல் உலமா | - | மார்க்க அறிஞர்கள் சபை |
| ஜமாஅத் | - | கூட்டம் |
| ஜும்ஆ மஸ்ஜித் | - | வெள்ளிக்கிழமை தொழுகை நடைபெறும் பள்ளி |
| ஷரீஆ | - | இஸ்லாமிய மார்க்கச் சட்டம் |
| த.·.வா | - | இஸ்லாமிய அழைப்பு |
| தவ்ஹீத் | - | ஏகத்துவம் |
| தப்ஸீர் | - | அல்குர்ஆன் விரிவுரை |
| துஆ | - | பிரார்த்தனை |
| பத்வா | - | மார்க்கத் தீர்ப்பு |
| பயான் | - | பிரசங்கம் |
| மஜ்லிஸ் | - | சபை |
| மஸ்ஜித் | - | தொழுகை நடைபெறும் இடம் (பள்ளிவாசல்) |
| மஸ்ஜிதுல் அக்ஸா | - | ஜெரூஸலத்திலுள்ள புனித மஸ்ஜித் |
| மர்ஹூம் | - | காலமானவர் |
| றமழான் | - | முஸ்லிம்கள் நோன்பு நோற்கும் மாதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R20671

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர் எஸ்.எச். ஆதம்பாவா தனது 15,17 வயதுகளில் முறையே அல்ஆலிம், மௌலவி சான்றிதழ்கள் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பீ.ஏ. (சிறப்பு), எம்.ஏ. பட்டங்களையும், சவூதி அரேபிய மதீனாப் பல்கலைக்கழகத்தில் அறபுமொழி இலக்கியத்தில் சிறப்புப்பட்டமும் பெற்றவர். பயிற்றப்பட்ட ஆசிரியரும் கூட.

இலங்கை வக்புச்சபையின் கௌரவ உறுப்பினரான இவர் கிழக்குமாகாண, அம்பாறை மாட்ட ஜம்இய்யதுல் உலமா தலைவர். அகிலஇலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதித்தலைவர்களில் ஒருவர், கல்முனை அல்-ஹாமியா அறபுக்கல்லூரி அதிபர்.

பல்வேறு போட்டிகளில் பரிசுகளும் பதக்கங்களும் பெற்றுள்ள இவர். பாடசாலைக் காலங்களில் இரட்டை வகுப்பேற்றங்களை இரண்டு முறைபெற்றவர். கவிதைகள் மூலம் இலக்கியத்துறையில் பிரவேசித்த இவர் இத்துடன் ஆறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சவூதி அரேபியா, பஹ்ரைன், கட்டார், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, சுவிஸ், மலேசியா, சிங்கப்பூர், பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தவர். அண்மையில் இவர் மலேஷியா சென்றபோது அங்கு முஸ்லிம் கல்விப் பேரவையினரால் வரவேற்பளித்துக் கௌரவிக்கப்பட்டார். மலேஷிய நண்பன் என்ற பிரபல தமிழ்த்தினசரி இவரது பேட்டியைப் பிரசுரித்தது.

சாய்ந்தமருது அல்ஹாஜ் M.M. சாதுல் ஹமீத் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரான இவர், M.Y. உம்முல் வாரிதாவின் அன்புக் கணவர். சில்மியதுஷ் ஷிபா, அஸ்லம் முஹம்மது ஜஸ்லி, ஐமன் முஹம்மத் மதீஹ், சனாபிலுல் கைறாத், அப்பக் முஹம்மத் ஆத்திப் ஆகிய செல்வங்களின் தந்தை. அதிபி, அபீபி இவரது பேரக் குழந்தைகள். K.L.M. றமீஸ் இவரது மருமகன்.

ISBN: 955-1407-00-3